பக்கங்கள்:27 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை 27.02.2022 கதிர் 114

## இது ரகசியம் அல்ல!

நட்புகளும் அணிகளும் மாறிக் கொண்டிருப்பதுதான் அரசியல். அந்தச் சூத்திரங்கள் எப்படி எல்லாம் மாறுகின்றன என்பது பல சமயங்களில் விநோதமாக இருக்கும். சில சமயங்களில் சுவாரசியமாக இருக்கும்.

பங்களாதேஷ்

☞2

# சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்!

## ரஷ்யாவிடம் ஐ.நா. செயலர் அவசர வேண்டுகோள்



சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம், ரஷ்யாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்றுக் கொண்டு வந்த பிரேரணையை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் இரத்துச்செய்த சிறிது நேரத்தில், ஐ.நா. பொதுச்செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன்தான் ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது. என்ன நோக்கத்துக்காக ஐ.நா. சபை உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே, சமாதானத்துக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ரஷ்யப் படைகளைத் தமது நிலைகளுக்குத் திரும்புமாறும் அவர் கோரியுள்ளார்.

# 4,000 உக்ரேனியர்கள் இலங்கையில் சிக்கினர்

## சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவிப்பு



**கொழும்பு, பெப்ரவரி 27**

**இலங்கையில் சுமார் 4 ஆயிரம் உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் தங்கியுள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. இவர்கள் 30 நாள்களுக்கான விசாவைப் பெற்றே நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.**

☞2

## மன்னாரில் கையெழுத்து வேட்டை



(மன்னார் நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி மன்னாரில் நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸ் நிலையத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இன்றைய கையெழுத்துப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற

☞2

## விபத்தில் 8 பேர் காயம்



கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண் டிருந்த சொகுசு பஸ், கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளா னதில் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

☞2

## நாளை தொடக்கம் மீண்டும் மின் தடை

நாட்டில் தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் நாளை முதல் மீண்டும் மின்சாரத் துண்டிப்பை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று இரவு வேளையில் மின்சாரத் துண்டிப்பு அமுலாக்கப்படமாட்டாது எனவும் அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

☞2

## மாகாண சபைத் தேர்தலை விரைவில் பழைய முறையில் நடத்த வேண்டும்!

### அமைச்சர் தினேஷ் வலியுறுத்து



புதிய தேர்தல் முறைமை உருவாக்கப்படும் வரை பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

சகல தேர்தல்களின்போதும் தொகுதிவாரியில் 60 வீதம், விகிதாசார முறையில் 40 வீதம் என்ற அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்

☞2




## யாழில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கடந்த புதன் கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த தமிழ் அரசியல் கைதிகள் தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

அவர்களை நேற்றுச் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டதன் பின்னர் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இந்த விடயத்தை

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவினைக்காக பாகிஸ்தானோடு இந்தியா போர் தொடுத்த காலம்தொட்டு, இந்தியா தொடர்பான முக்கிய மூன்று விவகாரங்களில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அதற்குத் தோள் கொடுத்தது சோவியத் ஒன்றியம். ஆனால் அந்த நட்புறவுக் காலம் மலையேறி விட்டது போலும். இப்போது சீனப் பூச்சாண்டியைச் சமாளிக்க அமெரிக்காவின் தோளில் கையைப் போட்டு இருக்கும் இந்தியா, அதனால், உக்ரைன் விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் ரஷ்யாவுக்குத் தோள் கொடுக்க முடியாத நிலைமை.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஈழத் தமிழருக்கும் கொழும்புக்கும் இடையிலான விவகாரத்தல் நீதியின் பக்கம் நிற்கும் திராணியற்ற இந்தியா, மதில் மேல் பூனை நிலை எடுப்பது போல, இப்போது உக்ரைன் விவகாரத்திலும் பாதுகாப்புக் கவுன்ஸிலில் அந்தப் பக்கமும் இன்றி, இந்தப் பக்கமும் இன்றி, நடுவுநிலை என்ற பெயரில் செயல்பட வேண்டியதாகிவிட்டது.

கொழும்பு நடவடிக்கைகளிலும் இந்தியாவுக்கு அத்தகைய நெருக்கடிதான். சிங்களத் தீவிரவாத தரப்புகளுடன் தோளில் கை போடும் நிலைமை. எரிபொருளுடன் வந்த இந்தியக் கப்பலை வரவேற்க கொழும்புக்கான இந்திய தூதுவருடன் துறைமுகம் சென்றார் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில்ல 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற மாதிரியான ஆங்கில மொழிக் கூற்று ஒன்றைக் கூறி, இந்தியாவின் நட்பை சிலாகித்து, அங்கு உரையாற்றினார் கமன்பில்ல. அந்த உரை தொடர்பான காணொலியை, 2016 இல் "இலங்கையின் முதல் பெரும் எதிரி இந்தியா" என்று அதே கமன்பில்ல வீரமுழக்கமிட்ட காணொலியுடன் இணைத்து சமூக ஊடகங்களில் தவழ விட்டு இருக்கின்றனர் தென்னிலங்கைப் புத்திசாலிகள்.

தீவிர இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு எடுத்த அமைச்சர் விமல் வீரவன்ஸவைச் சந்தித்து, குசலம் விசாரித்து, உரையாடி இருக்கின்றார் கொழும்புக்கான இந்திய தூதுவர்.

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய பங்காளி அமைப்பு – தீவிர இந்துத்துவாப் போக்குடைய – 'ராஷ்ட்ரிய சுயம்சேவக்' எனும் – ஆர்.எஸ்.எஸ்.இயக்கம். அதன் தலைவர் மோகன் பகவத்தை, புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்திற்குக் கடந்த வியாழனன்று நேரில் சென்று சந்தித்திருக்கின்றார். இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் – குறிப்பாக பௌத்தத்துக்கும் இந்து சமயத்துக்கும் – இடையில் நீண்டகாலமாக இருக்கும் புராதன கலாசாரப் பண்புகள், பொது இயல்புகள் பற்றி இருவரும் விரிவாக பேசினர் என்றும் –

இந்தியாவில் ஊற்றெடுத்த இந்த இரண்டு உலகப் பெரும் மதங்களும் தங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்களைப் பொது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிப்பது குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என்றும் – கூறப்பட்டது.

அரசியலில், 1987 இல் வடக்குத் தமிழர்களுக்கு பலவந்தமாக அரிசி, பருப்பு, மா, சீனி போன்றவற்றை விமானத்தில் இருந்து போட்ட இந்தியா, இன்று கடன் சமுத்திரத்தில் மூழ்கி கிடக்கும் கொழும்புக்கு எரிபொருளில் இருந்து மருந்துகள், உணவு வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வரை எல்லாவற்றையும் கடனின் பெயரால் விழுந்தடித்து, வாரி வழங்கி, 'சப்ளை' பண்ணுகின்ற இக்கட்டில் நிற்கின்றது.

அன்று – ஈழத் தமிழர்களின் உயிர் மூச்சுக்கு அந்த விநியோகம் என்றனர். இன்றும் அதே உயிர்மூச்சுக்கு – ஒட்டுமொத்த இலங்கையின் உயிர்மூச்சுக்கு – இந்த விநியோகம் என்கின்றனர். இந்தப் போக்குகளைப் பார்க்கும்போது நட்புறவு அணிகளின் சூத்திரங்களும் மாறிக் கொண்டிருக்கின்றன என்றே எனக்கு தோன்றுகின்றது.

தமிழர் தரப்புகளின் தலைவர்கள் இந்த நகர்வுப் போக்குகளை – மாற்றங்களை – காலுக்குக் கீழ் மாறும் நீரோட்ட மாற்றங்களை – உன்னிப்பாக அவதானித்து, தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதை அவர்கள் புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை.

– மின்னல் –

---

## 4,000 உக்ரேனியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் உக்கிரமான தாக்குதலை நான்காவது நாளாக நடத்தி வருகின்றன. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனைத் தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்யப் படைகள் தாக்கி அழித்துள்ளன.

இந்நிலையில், உக்ரைனில் தற்போது போர் மூண்டுள்ளதால், நாடு திரும்ப முடியாத உக்ரைன் பிரஜைகளுக்கு விசா கால எல்லையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எனினும், விசா காலம் முடிவடைந்த பின்னர், நாடுதிரும்ப விரும்பும் உக்ரைன் பிரஜைகளை, நாட்டுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இலங்கையிலிருந்து உக்ரைனுக்கு நேரடி விமான சேவை இல்லாமையால் வேறு நாடுகளின் ஊடாகப் பயணிக்கும் விமானங்களின் மூலம் சுற்றுலாப் பயணிகள் அனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

---

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலப்புத் தேர்தல் முறையிலான அறிக்கையை முறைப்படுத்துவதற்கு விசேட தெரிவுக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மை நிலைப்பாடுகளை உருவாக்குவதற்காக வெற்றிபெற்ற கட்சி அல்லது குழுவுக்கு மேலதிகமாக இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொடுக்கவும் பரிந்துரை முன்வைக்க கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

---

## யாழில் தற்காலிகமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகக் கடந்த புதன்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களை நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆளுநர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது நேற்றுக் காலை ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் ஒருவருடன் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த தமிழ் அரசியல் கைதிகளுடன் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் பெற்றுத்தருவதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார் என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்திருந்தமையுடன், தமது உண்ணாவிரதப் போராட்டத்தையும் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர்.

அதற்கமைவாக நேற்றுக் காலை சிலைச்சாலைக்குச் சென்ற தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து கலந்துரையாடியமையை அடுத்து அவர்களும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

# போராட்டம் தொடரும்!

## சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



நாட்டில் இன, மத பேதமின்றி சகல மக்களுக்கும் எதிராகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்து நாடு பூராகவும் அதற்கான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆரம்பத்தில் இருந்தே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சட்டமானது இன்று நாட்டில் சகல மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, இன, மத, பேதம் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சகலரும் முன்வைத்து வருகின்றனர்.

ஏற்கனவே முன்னைய ஆட்சியில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அதற்குப் பொது இணக்கம் காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இன்று நிலைமைகள் சுமுகமாக உள்ள காரணத்தால் இதனை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டுள்ளன.

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் இந்த விடயங்கள் வலியுறுத்தப்படும். இப்போது நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம் – என்றார்.

---

## விபத்தில் 8 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலேவெல பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்துச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பஸ், வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தம்புள்ளைவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

---

## நாளை தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று பகல் வேளையில் ஏ, பி மற்றும் சி வலயங்களில் 3 மணித்தியாலயங்களும், ஏனைய வலயங்களில் 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களும் மின் துண்டிப்பு அமுலாக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மதத்தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நவரசம் எனும் கவிதை நூல் வெளியிட்டமையின் காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீமும், அவரது குடும்பத்தினரும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரும் ஆவணத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இது வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு கிழக்கு மற்றும் தெற்கிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும்
முதற்தர மாதிரி வினாப்பத்திரம்
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 இரண்டாவது பரீட்சை 27.02.2022
தரம் 3 இரண்டாவது பரீட்சை 06.03.2022
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெற்றித்தேர்வு பரீட்சை எழுதும் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களை வெற்றித்தேர்வு வளவாளர்களால் தெளிவுபடுத்தப்படும்
விசேட வினாவிடை வகுப்புகள்
வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை
தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

# மரபணு மாற்றங்களுடன் பரவி வரும் ஒமிக்ரோன்!

ஒமிக்ரோன் மாறுபாடு மரபணு மாற்றங்களுக்கு உட்பட்டு பரவி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நதீகஜானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே வைத்திய நிபுணர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய மரபணு மாற்றங்களின் ஊடாக ஒருமுறை தொற்றுக்கு உள்ளான நபருக்கு மீண்டும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய நிலைமைக்கு அமைய சாதாரண நபர் ஒருவருக்கு ஒரு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது போதுமானது என்றாலும் அபாயமிக்க தரப்பில் காணப்படும் நபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பூஸ்டர் தடுப்பூசிகளின் எண்ணிக்கை பரிந்துரைகளுக்கு அமைய மாறுபடக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.

## மாங்கல்யா
## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 17.06.1999 | மதம் - இந்து
ஜாதி - V பெண் | நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 40 | செவ் - 10 இல்
தகைமை - GCE A/L | தொழில் - -
எதிர்பார்ப்பு-வெளிநாடு, உள்நாடு மணமகன் காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 27.07.1995 | மதம் - இந்து
ஜாதி -V பெண் | நட்சத்திரம் - புனர்பூசம் 3
கி.பா - 26 | செவ் 8 இல்
தகைமை - AAT | தொழில் - Company
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு மணமகன்

பிறந்த திகதி - 24.07.1990 | மதம் - இந்து
ஜாதி -V பெண் | நட்சத்திரம் - மகம்
கி.பா - 9 | செவ் 6 இல்
தகைமை - Bachelor of Optometry | தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - Doctor, Eng பட்டதாரி Australia இலங்கை

பிறந்த திகதி - 07.08.1985 | மதம் - இந்து
ஜாதி -V பெண் | நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 35 | செவ்/சூரி.5 இல்
தகைமை - MBBS | தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng மணமகன்

பிறந்த திகதி - 02.11.1991 | மதம் - இந்து
ஜாதி V பெண் | நட்சத்திரம் - பூரம்
கி.பா - 10 | செவ் 8 இல்
தகைமை - Dental doctor | தொழில் - Dental doctor
எதிர்பார்ப்பு - Singapore,Canada,Australia Doctor மணமகன்

பிறந்த திகதி - 30.06.1997 | மதம் - இந்து
ஜாதி V பெண் | நட்சத்திரம் - பரணி
கி.பா - 24 | செவ் 10 இல்
தகைமை - B.Sc | தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 25.01.1994 | மதம் - இந்து
ஜாதி V பெண் | நட்சத்திரம் - திருவாதிரை 2
கி.பா - 74 | செவ்/சூரி. 1 இல்
தகைமை - M.B.B.S | தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Canada,Australia,U.S.A மணமகன்

பிறந்த திகதி - 02.06.1993 | மதம் - இந்து
ஜாதி V பெண் | நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 19 | செவ் 9 இல்
தகைமை - B.Sc in civil Eng | தொழில் - Company
எதிர்பார்ப்பு - அரச சேவை வெளிநாடு மணமகன்

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 12.06.1990 | மதம் - இந்து
ஜாதி - V ஆண் | நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 31 | செவ் - 5 இல்
தகைமை-B.Sc Software Eng | தொழில்-Company Colombo
எதிர்பார்ப்பு -பட்டதாரி Colombo வேலை மணமகள்

பிறந்த திகதி - 08.06.1990 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் | நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 33 | செவ் -9 இல்
தகைமை - G.C.E A/L | தொழில் - சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு - G.C.E A/L மேல் படித்த மணமகள்

பிறந்த திகதி - 21.06.1986 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் | நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 36 | செவ் - 11 இல்
தகைமை - Draftsman | தொழில் - E.C.Board (T.A)
எதிர்பார்ப்பு - அரச சேவை, தனியார் மணமகள்

பிறந்த திகதி - 04.06.1987 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் | நட்சத்திரம் - பூரம்
கி.பா - 50 | செவ் 8 இல்
தகைமை - B.Com | தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை, தனியார் மணமகள்

பிறந்த திகதி - 15.11.1992 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் | நட்சத்திரம் - புனர்பூசம் 4
கி.பா - 38 | செவ் 5 இல்
தகைமை - B.Sc Eng PHD | தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - Doctor, Eng, Lawyer,Accountat மணமகள்

பிறந்த திகதி - 17.03.1985 | மதம் - இந்து
ஜாதி - V ஆண் | நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 40 | செவ் 8 இல்
தகைமை - G.C.E A/L | தொழில் - France PR
எதிர்பார்ப்பு - France மணமகள்

பிறந்த திகதி - 24.05.1981 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் | நட்சத்திரம் - உத்தராடம் 3
கி.பா - 25 | செவ் 2 இல்
தகைமை - B.Sc,M.Sc | தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK or இலங்கை மணமகள்

பிறந்த திகதி -1982.09.16 | மதம் - இந்து
ஜாதி -V ஆண் 31 | செவ் 1 இல்
தகைமை - Company | தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - A/L படித்த UK or இலங்கை மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
கனடா & நோர்வே - Rs.1650
சுவிஸ் - Rs.1550
075 330 5500,070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆனைக்கோட்டை - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை மூதூர் - கொழும்பு
POST YOUR AD
yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 - (ஆகாஸ்)

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

BRRENS Fashion Planet
Reborn
Signature
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்
சிவன் கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
075 527 9110
077 332 1937
021 2221 2777



Northern PC Park
BenQ
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## குற்றங்களின் அரூபக்கரம்

உள்நாட்டில் நீதி கிடைக்காதவர்கள் சர்வதேசத்திடம் நீதி தேடுவதுதான் ஒரே மார்க்கம்.

யுத்த காலத்தில் தமிழர் தேசத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற அநீதிகளுக்கு எதிராக நீதி வேண்டி தமிழர் தேசம் இந்த அடிப்படையில் தான் சர்வதேசத்தை அணுகி இருக்கின்றது.

இப்போது அதே நிலைமை ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் வெடிகுண்டு தாக்குதலில் பாதிப்புற்றோருக் கும் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசிடமிருந்து நீதி கிடைக்காது என்று கண்ட கிறிஸ்தவ மத அமைப்புகள் நீதி வேண்டி சர்வதேசத்தை நாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இதனை – இந்த முடிவை – ஏற்கனவே அறிவித்திருந்தார். இப்போது இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றமும் அதுதான் ஒரே வழி என்று அறிக்கையிட்டுள்ளது.

சர்வதேசத்திடம் நீதி வேண்டும் தமது முயற்சிக்கு உதவி, ஒத்துழைப்பு, ஆதரவு, ஆசீர்வாதம் வேண்டி பரிசுத்த பாப்பரசரை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்திக்கவிருக்கின்றார். திருத்தந்தை – பேராயர் சந்திப்பு பெரும்பாலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வத்திக்கானில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பை ஒட்டி இத்தாலியிலும், சூழவுள்ள ஐரோப்பிய தேசங்களிலும் வாழும் இலங்கையர்களை இன்று காலை பத்து முப்பது மணிக்கு வத்திகானின் சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடும்படி நீதிக்கான உலக நிறுவனங்களில் இணைப்பாளர் ஸ்டீபன் முல்லர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

தமிழர் தேசம் சர்வதேசத்திடம் சென்று இருப்பதற்கும், ஈஸ்டர் தினக் குண்டுத்தாக்குதல் பாதிப்புகளுக்கு நீதி வேண்டி கிறிஸ்தவ சமூகம் சர்வதேசத்திடம் செல்வதற்கும் இடையில் ஒரு சிறிய வேறுபாடு உண்டு.

அது நடந்து 13 ஆண்டுகள், இது இடம்பெற்று மூன்று ஆண்டுகள் என்பதற்கு அப்பால், அதில் – யுத்தக் கொடூரங்களில் – குற்றமிழைத்த பிரதான தரப்பாக கொழும்பு ஆட்சிப்பீடமும் அமைவதால், அதனிடம் நீதி கிட்டுவது வாய்ப்பே அற்றது என்பதுதான் தமிழர் தேசத்தின் நிலைப்பாடு. எங்காவது குற்றவாளி நீதிபதியாக இருந்து, தனக்குத்தானே தண்டனை கொடுப்பானா? அதில் நீதி இருக்குமா? இதுதான், தமிழர் தேசத்தின் நிலைப்பாடு.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் கொடூரத்தில் குற்றமிழைத்தவர்கள் சூத்திரதாரி யார் என்பது இன்னும் உறுதியாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆனால், இலங்கை ஆட்சித் தரப்புக்கும் அதில் சம்பந்தமில்லை என்று அடித்துக் கூற முடியாத நிலைமை நீடிக்கும் பின்னணியில்தான், அது தொடர்பான நீதி விசாரணையை முறையாக – சர்வதேச நியமங்களுக்கு அமைவாக – நடத்தாமல் மாயாஜாலம் பண்ணுகிறது அரசு தலைமை.

அந்தக் குண்டு வெடிப்புகள் நடந்த கையோடு அப்போதைய நல்லாட்சி அரசின் கீழ் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு, இனி நடக்கப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் இராணுவப் பின்னணி கொண்ட இறுக்கமான ஒருவர் ஆட்சித் தலைவராக வரவேண்டும் என்பதற்காக – அதற்கான கள நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக – இந்தத் தொடர் தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது ஆராயப்பட வேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தச் சந்தேகமே பின்னர் விவகாரமாக அரங்கேறிய பின்னணியில், அந்தக் கேள்வி இப்போது வலிமையடைந்து உள்ளது. இந்தப் பின்புலத்தில்தான் இவ்விவகாரத்திலும் நீதி, நேர்மையான விசாரணைகளை நடத்த ஆட்சித் தலைமை மறுக்கின்றது. அதைப் பொறுக்க முடியாமல் நீதி வேண்டி சர்வதேசத்திடம் செல்லும் நிலைமை கிறிஸ்தவ மத தலைமைக்கு ஏற்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த சூழமைவுகளை நோக்கும்போது இரண்டு விவகாரங்களிலும் மோசமான கொடூரக் குற்றங்களின் பின்னணியில் இயங்கிய அரூபக்கரம் எது என்பதை அடையாளம் காண்பது – ஊகிப்பது – அப்படி ஒன்றும் கஷ்டமான விவகாரம் அல்ல.



## நாட்டில் சுற்றுலாப் பயணிகளில் கிட்டத்தட்ட 24 வீதம் பேர் ரஷ்யர் மற்றும் உக்ரேனியர்!

இந்த ஆண்டு இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளில் கிட்டத்தட்ட 24 வீதம் பேர் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலாத்துறையின் உத்தியோகபூர்வத் தகவல்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

எதிர்பார்த்தபடி, இலங்கைக்கு வரும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் ரஷ்யாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

## புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர் மூவர் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ் கையளிப்பு



இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று தூதுவர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியம், அமெரிக்கா மற்றும் லிபியா ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் – காலித் நசார் சுலைமான் அல்அமெரி, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியோன் சுங், இலங்கைக்கான லிபியாவின் தூதுவர் நாசர் அல்ஃபுர்ஜான், பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் பிரதான கூட்டமைப்பு அதிகாரி செனரத் திஸாநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.


## யாழ். நல்லூர் இராசதானி தோரணவாயில் புனரமைப்பு



நல்லூர் இராசதானியின் தோரணவாசலை புனரமைப்பு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மரபுரிமை மையம் மற்றும் தெல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. யாழ். மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசியர் பரமு புஸ்பரட்ணம், யாழ். மரபுரிமை மையத்தின் உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

## கடுகதி ரயிலில் மோதி இளைஞன் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ரயில் நிலைய கடவையில் ரயிலில் மோதுண்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த கடுகதி ரயில் நேற்று (சனிக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் மாவிட்டபுரம் ரயில் நிலையத்தை கடக்க முற்பட்ட போது, குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் ரயில் கடவையை கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது கடுகதி ரயில் இளைஞரை மோதித் தள்ளியுள்ளது.

உயிரிழந்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் விறகு ஏற்றிச்சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. விபத்தில் உயிரிழந்த இளைஞன் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# “பெண்கள் அழகானவர்கள். அவர்களின் அழகை மேலும் மெருகூட்டுவதுதான் அழகுக்கலை...!”

## Gowshy Beauty Fashion அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் கௌசலா தசகுமார் உடனான நேர்காணலிது.



கௌசலா தசகுமார்
உரிமையாளர்
Gowshy Beauty Fashion அழகுக்கலை நிறுவனம்

### ☞ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் கௌசலா.Gowshy Beauty Fashion அழகுக் கலை நிலையத்தை நடாத்திவருகின்றேன். எனது கணவர் தசகுமாரன். எனக்கு கேசிகா என்ற ஒரு மகளும் ஜெனிக்ஸன் மற்றும் மதுஷிகன் எனும் இருமகன்களும் இருக்கின்றனர். எனக்கு தற்போது 38 வயதாகின்றது. கலைமகள் அழகு நிலா என்ற கச்சேரியில் ஆசிரியர் நிரஞ்சனா அவர்களிடம் இந்த அழகுக்கலைத்துறையை கற்றுக்கொண்டேன். 2009 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த அழகுக்கலைத் துறைப் பயணம் தற்போது எனக்கென்ற ஒரு அடையாளத்தை உருவாக்கிக்கொடுத்துள்ளது.

### ☞ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

சிறுவயதிலிருந்தே அழகுக்கலையில் இருக்கும் நுட்பங்களை நானே விரும்பி கற்றுக்கொள்வது மிகவும் பிடிக்கும். நான் அழகாக ஒப்பனை செய்கிறேன் என்று அவருடைய மகளுக்கும் என்னை ஒப்பனை செய்யுமாறு எனது அயல்வீட்டு அம்மா ஒருவர் அப்போது எனக்கு கூறினார். அவர் கூறியதை கேட்டு மகிழ்ச்சியடைந்தாலும் ஒப்பனை செய்யும் பெரிதளவிலான பொருட்கள் என்னிடம் இருக்கவில்லை. இருந்தாலும் கேட்டுக்கொண்டதிற்காக என்னிடம் இருக்கும் பொருட்களைக் கொண்டு அவரின் மகளுக்கு ஒப்பனை செய்தேன்.இதனால் அவர் பெருமகிழ்ச்சியடைந்தார். அந்த அம்மாவும் அயல்வீட்டிலிருந்த இன்னொரு அம்மாவும் என்னை அழகுக்கலைத்துறையை கற்று இதனை தொழிலாகச் செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அவர்கள் அன்று எனக்கு கொடுத்த அந்தவொரு நம்பிக்கையும் ஆலோசனையும் தான் நான் இப்போது சுயமாக ஒரு தொழில் ஆரம்பிக்க காரணமாயிற்று. கோமு மற்றும் சந்திரா ஆகிய அவர்களின் பெயரை இவ்விடத்தில் பதிவுசெய்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவொரு ஊக்கம் தான் அழகுக்கலைத்துறையில் என் ஆர்வத்தை தூண்டியது.

### ☞ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

இந்த துறையாக இருக்கட்டும், தனிப்பட்ட வாழ்க்கை ரீதியாக இருக்கட்டும் நான் முகங்கொடுக்கும் எத்தனையோ சவால் களுக்கு மத்தியில் தான் இந்த தொழிலை முன்னெடுத்து செல்கிறேன். போட்டி நிறைந்த இந்த சமூதாயத்தில் நானும் ஒரு அழகுக்கலை நிபுணராக நிலைத்து நிற்பதும் என்னை பொருத்தமட்டில் ஒரு சவால்தான். எனக்கு வரும் ஓர்டர்கள் மிகவும் குறைவு. எனக்கு வரும் ஓர்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நான் கடினமாக உழைக்கவேண்டும். ஒன்று இரண்டு என அளவிடக்கூடிய அளவு ஓர்டர்கள் வந்தாலுமே மனம் கோணாமல் நான் வருபவர் மனம் திருப்பதியடையும் படி மிகப் பொறுமையாகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் ஒப்பணைசெய்கிறேன்.

### ☞ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் இத்தனை வருடங்கள் எனக்கிருக்கும் அனுபவத்திற்கு கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் அரி தென்றே கூறவேண்டும். எனது சூழலில் வசிப்பவர்களே என்னிடம் ஒப்பணை செய்து கொள்ள வருகின்றனர். எனக்கான வாய்ப்புகள் குறைவென்றாலும் கிடைக் கும் சிறு வாய்ப்புகளையும் சரியாக பயன் படுத்திக்கொள்கிறேன் வெளியிலிருந்து ஒப்பணைக்காக வருபவர்கள் மிக மிக குறைவு. இப்படியிருக்க எனது அழகுக்கலைத் திறமையை பலருக்கு வெளிப்படுத்த எனக்கு அருந்ததி நிறுவனத்தின் மூலம் கிடைத்த அரிய வாய்ப்பே மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக்காட்சி. எனது திறமையை அங்கீகரிக்கும் மேடையாக இது அமையும் என்பது எனது முழுநம்பிக்கையாகும்.

பெண்கள் எல்லோருமே அழகானவர்கள். அவர்களின் அழகை மேலும் மெருகூட்டும் கலை தான் அழகுக்கலை. அப்படிப்பட்ட அழகுக்கலைத்துறையில் எனது சாதனையென்று நான் கூறுவதானால் எனது திருப்திகரமான வாடிக்கையாளர்கள் என்னிடமே மீண்டும் மீண்டும் வந்து ஒப்பணை செய்துகொள்வது தான் எனது முதல் வெற்றியென்று கருதுகிறேன். அதிலும் இத்தனை வருடங்கள் கடந்தும் எனக்கானதொரு சுயதொழிலை ஆரம்பித்து பல இன்னல்களுக்கு மத்தியிலும் விடாமுயற்சியோடும் தன்னம்பிக்கையோடும் செய்துவருகிறேன் என்பது எனக்கொரு சாதனைதான். எதிர்காலத்திலும் என் அழகுக்கலை வண்ணத்தை பலருக்கும் தெரியபடுத்தி என் பெயரை பல இடங்களில் பதித்து சாதிப்பேன் எனும் திடமான எண்ணமும்,நம்பிக்கையும் இருக்கிறது.

### ☞ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

பெண்கள் தமக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த காலத்தில் பெண்கள் ஒரு கைத்தொழிலையோ அல்லது தமக்கென்ற ஒரு தொழிலையோ செய்வது மிகமுக்கியம். அது அழகுக்கலை யாகவேண்டுமானாலும் இருக்கலாம். அப்படி தேர்ந்தெடுத்த துறையில் சுயதொழிலை மேற் கொள்ள ஆரம்பித்தால் சிறிய முதலீட்டை இடவேண்டும். வெற்றியோ தோல்வியோ முதலில் பெண்கள் தன்னம்பிக்கை என்ற ஒன்றை மனதில் முதலீடு செய்யவேண்டும். நாங்கள் தொட்டதெல்லாம் வெற்றி தான் என்ற உறுதி இருக்கவேண்டும். எதையும் கடினமென்று நினைக்ககூடாது. கடினமான விடயத்தை கூட இலகுவாக எண்ணி இரசணையோடு செய்யவேண்டும். பெண்களால் முடியாததென்று எதுவுமேயில்லை. எந்த நேரத்திலும் பெண்களை இந்த சமூதாயம் விமர்சிக்ககூடாது என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. யார் உங்களை தாழ்த்தி பேசுகின்றார்களோ அவர்கள் முன் வாழ்ந்து காட்டுங்கள். எந்த விடயமாக இருந்தாலும் தைரியமாக நின்று அதனை எதிர்கொள்ளுங்கள். தன்னம்பிக்கையை எப்போதும் விட்டுவிடாது என்ன சவாலாக இருந்தாலும் வாழ்க்கையில் உங்களுக்கென்றவொரு தனியிடத்தை உருவாக்குங்கள்.




CHELVA
PALACE
10 MAR
2022
BRIDAL
FASHION SHOW
JAFFNA 2022
Contact us 076 9759197
Arunthathee
Presents

# உக்ரேனியப்போரும் ஈழத்தமிழர்களுக்கான படிப்பினையும்

கலாநிதி. இ.ஸ்ரீஞானேஸ்வரன்



உக்ரேனைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முயற்சியில் இராணுவப் பலத்தை ரஷ்யா பயன்படுத்தத்தொடங்கிவிட்டது. முழு அளவிலான போரினை ஆரம்பித்து இரண்டு நாள்களில் உக்ரேனிய தலைநகரான கிவ் ரஷ்யத்துருப்புக்களால் சூழப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் இரஸ்யா பேச்சுசொன்றுக்கு வருமாறு உக்ரேனி டம் அழைப்பு விடுத்திருந்தது. அப்பேச்சுவார்த் தையை தனது நட்புமிகு நாடான பெலாரஸ்சின் தலைநகர் மின்ஸ் இல் நடாத்தவும் அவ்வழைப்பில் தெரிவிக்கப் பட்டிருந்தது. எனினும் வார்சோவில் அப்பேச்சை நடாத்தவே உக்ரேன் விரும்புவதாக பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. போர் தொடருமானால் இக் கட்டுரை அச்சில் வரும் போது உக்ரேன் கைப்பற்றப்பட்டிருக்க வாய்ப்பிருப்பதாகவே தெரிகின்றது.

உக்ரேன் மீது நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கும் போர் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்கள் ஈழத்தமிழர்களின் விடுதலைப் பயணத்திற்கான பல படிப்பினைகளைத் தந்துள்ளன. அவற்றுள் முக்கியமானது சுயநிர்ணயம் கொண்ட தேசத்தினை உரு வாக்குவதில் பன்னாட்டு பூகோளப்போட்டியின் முக் கியத்துவம் ஆகும்.

தேசிய இனமொன்றின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வெல்வதும் தோற்பதும் அப்போராட்டம் தாங்கி நிற்கின்ற அறத்தின் வழியே உருவாகும் என்ற கருதுகோல்கள் தற்காலத்தில் தோல்வியடைந்துள்ளன. அதற்கு மிக அண்மைய உதாரணங்களாக உக்ரேனில் இருந்து பிரிக்கப்பட்டு திடீரென சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்ட டோநட்ஸ் மற்றும் லுகாண்ஸ் ஆகிய புதிய மக்கள் குடியரசுகளைக் கருதலாம்.

தேசிய இனமொன்று மற்றொரு தேசிய இனத்துடன் சேர்ந்து வாழ்வதா? அல்லது பிரிந்து தனி நாடாகப் போய்விடுவதா? என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக பன்னாட்டுப் பூகோளப்போட்டியே உள்ளது என்பது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பன்னாட்டுப்பூகோளப் போட்டியின் விளைவாக நாடுகளை உருவாக்குவதும் நாடுகளை இணைப்பதும் உலகில் நடைபெற்றுவருகின்றது. வல்லரசுகளின் தனி அல்லது கூட்டு முயற்சிகளே இவற்றை நிகழ்த்துகின்றன. தமது இருப்பை உறுதிசெய்வதும் அவ் இருப்பிற்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதுமான இரு முனைப்புக்களில் பூகோளப் போட்டி நகர்கின்றது.

உக்ரேனின் டொன்பஸ் பிராந்தியத்தின் பகுதிகளான டோநட்ஸ் மற்றும் லுகாண்ஸ் ஆகியவை இரஸ்யாவின் நிதி மற்றும் ஆயுத பலத்தை இரகசியமாகப் பெற்றுக்கொண்டு உக்ரேனுக்கு எதிராக பிரிவினைவாதப்போரில் ஈடுபட்டுவந்தன. எனினும் அவற்றைத் தனிநாடாக ரஷ்யா அங்கீகரிப்பதற்குத் தடையாக 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை வழங்கியதொரு உத்தரவாதம் காணப்பட்டது.

ரஷ்யாவையும் உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையானது உக்ரேனின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புலக்கட்டுப்பாடு ஆகியவை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையால் உறுதி செய்யப்படும் என 2015 ஆம் ஆண்டு உத்தரவாதம் வழங்கியது.

சமகாலப்பகுதியில் உக்ரேனுக்கும் பிரிவினை கோரிப்போரிட்ட டோநட்ஸ் மற்றும் லுகாண்ஸ் பகுதிகளுக்கும் பன்னாட்டு மத்தியஸ்தத்தின் கீழ் மின்ஸ்க் 2 ஒப்பந்தம் உருவாகியிருந்தது. முதலாவது மின்ஸ்க் ஒப்பந்தம் போரை நிறுத்த முடியாது போகவே புத்தாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட மின்ஸ்க் 2 ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. எனினும் அவ்வொப்பந்தமும் தன்னுடைய நோக்கத்தை முற்றுமுழுதாக எய்தவில்லை.

இருதுருவக் கோட்பாட்டுக்கு வலுச்சேர்க்கவேண்டுமானால் உக்ரேனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் அல்லது உக்ரேனைக் கைப்பற்ற வேண்டும் என்பது ரஷ்யாவிற்கு இன்றியமையாதது. கைப்பற்றுவது தற்காலத்திற்குச் சாலப்பொருத்தமானதல்ல என்பதால் உக்ரேனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் அங்கொரு ரஷ்ய ஆதரவு ஆட்சியை உருவாக்க வேண்டும் என்பதே இரஸ்ய அதிபர் புடினின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. அவ்வெதிர்ப்பார்ப்பானது மே, 2019 இல் நடைபெற்ற இறுதி உக்ரேனிய ஜனாதிபதித் தேர்தலில் வொலிடிமர் செலன்ஸ்கி அவர்கள் நான்கில் மூன்று பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய போது அவிந்து போனது. புதிய தலைவரான செலன்ஸ்கி ரஷ்யாவுடனான இராஜதந்திரப் பேச்சுக்களில் ஈடுபட்ட போதும் அவர் மேற்குலகின் நேட்டோ இராணுவக் கூட்டுடன் இணைவதில் விரும்பம் கொண்டிருந்தார். பெப்ரவரி 2014 இல் உக்ரேனின் கிரீமியா மீது படையெடுத்து அப்பிரதேசத்தைத் தனது நாட்டுடன் இரஸ்யா இணைத்துக்கொண்டது போல என்றாவது ஒரு நாள் எஞ்சிய உக்ரேனையும் இரஸ்யா கைப்பற்றும் என்பதால் செலன்ஸ்கி நேட்டோ ஆதரவை தேடியி ருக்கலாம். ரஷ்ய ஆதரவுடன் இயங்குகின்ற பெலாரஸ் இனைத்தவிர ஏனைய உக்ரேனின் எல்லை நாடுகளான ரோமானியா, ஹங்கேரி, போலந்து, சுலோவாக்கியா ஆகிய நாடுகள் நேட்டோவில் அங்கம் வகிப்பது செலன்ஸ்கியின் விருப்பத்திற்கு மற்றொரு காரணமாக இருக்கலாம். இவ் விருப்பமே அவரை ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு எதிரானவராக படங்காட்டியது.

ரோமானியாவையும் நேட்டோவில் இணைத்தால் ரஷ்யாவின் கேந்திர எல்லைகள் எங்கும் அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கம் வலுப்பெறும் என்பதால் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ தனது நேசக்கரத்தை செலன்ஸ்கியை நோக்கி நீட்டியிருந்தது.

இந்தப் பின்புலத்தின் அடிப்படையில் உருப்பெற்ற பூகோளப் போட்டியினால் இரண்டு புதிய நாடுகள் உருவாகியுள்ளன. அவற்றை உருவாக்கிய ரஷ்யாவின் அதிபர் மின்ஸ்க் ஒப்பந்தம் வலு விழந்து விட்டது. அவ்வலுவிழப்பிற்குக் காரணம் உக்ரேனே தவிர ரஷ்யா அல்ல என்று அறிவித் ததன் ஊடாக தனது வீட்டோ அதிகாரத்தை ரஷ்யா வெளிப்படுத்தியிருப்பதாகவே தெரிகின்றது.

ஆகவே தேசிய இனமொன்றின் அறப்போர் மட்டும் அத்தேசிய இனத்திற்கான சுயநிர்ணய உரிமையைபெற்றுக்கொடுக்கப்போதுமானதல்லஎன்பதை தமிழ்த்தேசிய இனம் புரிந்துகொள்ள வேண்டும்.

பூகோளப்போட்டியில் நிலைமை தமிழினத்திற்கு சாதகமாக மாறும்போது தமக்கான சுதந்திரத்தை உருவாக்கத்தக்க வழிவகைகளை தமிழினம் தேட வேண்டும் என்பது உக்ரேனியப்போரின் படிப்பினையாகும்.

# நாட்டில் பொலிஸ் ஊடகப் பிரிவு சுயாதீனமாக செயற்படவேண்டும்

## இரா.சாணக்கியன் வலியுறுத்து

பொலிஸ் ஊடகப்பிரிவு சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கடந்த இரண்டு வார காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் பன்குளம் மொறவெள பிரதேச செயலக பிரிவில் யானையொன்று உயிரிழந்துள்ளது.

இது துரதிஷ்டவசமானது. இந்த விடயம் தொடர்பாக வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவிடம் தொலைபேசியில் உரையாடினேன். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய்கிறேன் என அவர் குறிப்பிட்டார்.

ஒரே இடத்தில் 14 நாள்கள் இருந்த நிலையில் அந்த யானை உயிரிழந்துள்ளது. யானையின் தந்தம் வெட்டப்பட்டுள்ளதாகவும், யானைக்கு உரிய மருத்து சிகிச்சையளிக்கப்படவில்லை எனவும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

காலநேரம் போதாத காரணத்தால் இந்த விடயம் தொடர்பாக அதிகம் பேசமுடியவில்லை. இந்த விடயத்தை நான் சபையில் சமர்ப்பிக்கிறேன். இதனை அமைச்சர் பெற்றுக் கொள்ள வேண்டும். தாளம் என்ற சூழல் அமைப்பு இந்தச் சம்பவம் தொடர்பாகப் பல விடயங்களை சான்றுப்படுத்தியுள்ளது.

அதற்கு மேலதிகமாக யானை – மனித மோதலுக்கு யானை வேலி அமைக்கும் கொள்கையுடன் அரசாங்கம் வந்தது. ஒரு லட்சம் கிலோமீற்றர் யானை வேலி அமைப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இதுவரையில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை வேலி அமைப்பதற்கு 2.4 கோடி ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. யானை வேலி அமைக்காமல் யானை – மனித மோதலுக்குத் தீர்வு காணவும் முடியாது. வனஜீவராசிகளைப் பாதுகாக்கவும் முடியாது.

அதேபோல் தற்போது மின்விநியோகம் தடைப்படும் போதும் மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளில் யானை வேலிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்கம்பிகளுக்குமான மின்விநியோகம் துண்டிக்கப்படுகிறது எனக் குறிப்பிடப்படுகிறது.

விசேடமாக புல்லுமலை பிரதேசத்தில் பதுளை பகுதியில் யானை மின்வேலிகளுக்காக மின்விநியோகம் துண்டிக்கப்படுகிறது. மின்விநியோகம் துண்டிக்கப்பட வேண்டுமாயின் பகல் பொழுதில் துண்டித்து இரவு வேளைகளில் துண்டிக்காமலிருக்குமாறு கோரிக்கை விடுக்கிறோம்.

வெள்ளை வான் விவகாரம் தொடர்பில் கடந்த வாரம் நான் சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது. அது உண்மையில் கவலைக்குரியது, பொலிஸ் ஊடகப்பிரிவு சுயாதீனமாகச் செயற்பட வேண்டும்.

சிவில் செயற்பாட்டாளர் செஹான் நாலக கடத்த முற்பட்ட போதும் வெள்ளை வான் போன்ற வானும் அம்பாறை மாவட்டத்தில் இளைஞர் ஒருவரை கடத்த முற்பட்ட போதும் வெள்ளை வான் போன்ற வானும் பயன்படுத்தப்பட்டுள்ளதையே குறிப்பிட்டோம்.

இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸ் முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அதனை விடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சமூக வலைத்தளங்களின் பதிவேற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊடக அறிக்கை விடுகின்றமை எந்தளவிற்கு சுயாதீனமானது.

ஜனாதிபதியை சந்திக்க ஜனாதிபதி செயலகம் சென்றிருந்த போது அதற்கு அனுமதி வழங்கப்படாததை தொடர்ந்தே போராட்டத்தில் ஈடுபட்டோம்.


நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படம் எடுக்கும் அரச புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பு பிரதேசத்தில் எந்த வகையில் செயற்படுவார்கள் என்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதியை எந்நேரமும் சந்திக்க முடியும் என தற்போது குறிப்பிடுகிறார்கள். நாங்கள் முறையாக அனுமதி பெறவில்லையாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதியை சந்திக்க பலமுறை கடிதம் அனுப்பியுள்ளார். அதற்கு இதுவரை ஜனாதிபதி பதிலளிக்கவில்லை.

ஜனாதிபதி செயலகத்தில் உள்ளதை அறிந்து கொண்டதன் பின்னரே அவரை சந்திக்க ஜனாதிபதி செயலகம் சென்றோம். நாம் வருவதை அறிந்துகொண்டதன் பின்னர் அவர் ரயில் பெட்டிகளை காணச்சென்று விட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை எம்மால் எந்நேரமும் நாடாளுமன்றில் சந்திக்க முடியும். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கும் நோக்கம் ஜனாதிபதிக்குக் கிடையாது. அவர் தமிழர்களின் ஜனாதிபதி அல்லர் என்ற நோக்கில் உள்ளாரா என்று என்ன தோன்றுகிறது.

எமது செயற்பாடு வெட்கமடையக் கூடியதாம் நாட்டில் மின்துண்டிப்பு தீவிரமடைந்துள்ளது. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இருளில் கல்வி கற்கிறார்கள் இதற்கே வெட்கப்பட வேண்டும்.’ எனத் தெரிவித்துள்ளார்.




# சோவியத் சோசலிச குடியரசு அமைக்க உறுதுணையாக நின்ற க்ருப்ஸ் காயா

ப்ரியமதா பயஸ்

க்ருப்ஸ்காயா **(Nadezhda Konstantinovna Krupskaya)** ரஷ்யாவில் 27 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1869 ஆண்டு பிறந்தவர் 27 ஆம் திகதி பெப்ரவரி 1939 ஆம் ஆண்டு இறந்தார். ரஷ்ய புரட்சிகர மற்றும் விளாடிமிர் லெனின் மனைவியான க்ருப்ஸ்காயா செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வறுமையில் இருந்த ஒரு பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தார், அவர் ஏழைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவது பற்றிய வலுவான கருத்துக்களை வளர்த்துக் கொண்டார்.

அவர் மார்க்சிசத்தை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது 1894 ஆம் ஆண்டு ஒரு மார்க்சிஸ்ட் கலந்துரையாடல் குழுவில் லெனினை சந்தித்தார். இருவரும் 1896 இல் புரட்சிகர நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டனர். லெனின் சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்ட பிறகு, க்ருப்ஸ்கயா 1898 இல் திருமணம் செய்து கொள்ளும் நிபந்தனையின் பேரில் அவருடன் சேர அனுமதிக்கப்பட்டார். 1905 ஆம் ஆண்டு தோல்வியுற்ற புரட்சியில் பங்கு பெறுவதற்காக ரஷ்யாவுக்குத் திரும்புவதற்கு முன், இருவரும் நாடுகடத்தப்பட்ட பிறகு முனிச் மற்றும் லண்டனில் குடியேறினர்.

க்ருப்ஸ்காயாவின் கூற்றுப்படி, கலை என்பது மக்களுக்கு நன்றாக கற்பிக்கக்கூடிய ஒன்று , ஒருவருக்கொருவர் மெல்லியதாக புரிந்து கொள்ள முடியும், மற்றவர்களின் உணர்வுகளில் அனுபவத்தை உணருங்கள், பரஸ்பர புரிதலுக்கான திறன் – குழந்தைகளில் கூட்டுத்தன்மையை உருவாக்குவதற்கான இன்றியமையாத முன்நிபந்தனைகளில் கலை ஒன்றாகும். அவர் நுண்கலைகளில் மிகவும் ஆர்வமாக இருந்தார், அதிக எண்ணிக்கையிலான மக்களை அதில் சேர்க்க முயன்றார், இதில் முக்கிய பங்கை நடைமுறை வரைதல் பயிற்சிக்குத் தவிர்த்தார்.

க்ருப்ஸ்கயா குழந்தைகளுக்கு பல்துறை கலைக் கல்வி வழங்கப்பட வேண்டும், வரைபடத்தில் பள்ளி நிகழ்ச்சிகள் புரிந்துகொள்ளக்கூடியதாகவும், சுவாரஸ்யமாகவும், நிறைவுற்றதாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார் . கலைகளுக்கு உபயோகமான, நுகர்வோர் அணுகுமுறையை அவர் எதிர்த்தார். தத்ரூபமான ஓவியம், சித்திரம், சிற்பம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள பள்ளிக் குழந்தைகளை இணைக்க வேண்டும் என எண்ணினார் . நுண்கலை நிகழ்ச்சிகள், திட்டங்கள் பற்றிய விவாதம் நடந்தபோது, கலைப் படைப்புகளை அறிந்து கொள்வது அவசியம் என்று ஆணித்தரமாக கூறினார் காயா. அவரது எழுத்துக்களில், பிலிஸ்டைன், கொள்கையற்ற கலை மற்றும் கருத்தியல் கலை ஆகியவற்றை வேறுபடுத்துவதற்கு முயன்றார்.

க்ருப்ஸ்கயா, ஆளுமை உருவாவதில் கலையின் முக்கிய பங்கை மறுப்பவர்களுக்கு, கல்வியிலிருந்து பிரிக்கப்பட்ட பயிற்சி, கிராபிக் வாசிப்பு மற்றும் எழுத்துப் பயிற்சி ஆகியவற்றில் முக்கிய பங்கைக் குறைக்க முயன்றவர்களை திருத்த முனைந்தார். கைவினைஞர்களின் நகலில் இருந்து, முதல் கட்டத்தில் இருந்து நுண்கலைகளின் முறையான பயிற்சி, கலைப் படைப்புகளைப் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவை சிறந்த முறையில் காப்பீடு செய்யப்படும் என்று எதிர்காலவாதிகள் கூறுகிறார்கள். படத்தின் துல்லியத்தை வரைதல் கற்பிக்கட்டும், கலையின் சிக்கல் வேறு. இது உண்மையல்ல. இது வாழ்க்கையின் கோரிக்கைகளால் பரிந்துரைக்கப்பட்ட தற்காத்துக்கொள்வதற்கான ஒரு ஆசை என்று க்ருப்ஸ்கயா பள்ளியில் நுண்கலை பற்றி எழுதிய குறிப்பு (1931) ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கலையில் மார்க்சிய – லெனினிச நிலைப்பாடுகளைப் பாதுகாத்து, க்ருப்ஸ்கயா கலைப் படைப்புகளின் கருத்தியல் உள்ளடக்கத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாதவர்களை விமர்சித்தார்: ஓவியத்தின் யோசனையின் உள்ளடக்கம் ஒருமையப் பிரச்சினையாகும். நாம் தீவிரமாக சோசலிச கட்டுமான சேவையில் கலையை வைக்க விரும்பினால் படங்களின் சித்தாந்த உள்ளடக்கத்தை ஆழமாக சிந்திக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் இந்த வகை தயாரிப்புகளின் கருத்தியல் உருவாக்கம் இந்த ஓவியங்களின் சரியான மார்க்சிஸ்ட் – லெனினிச மதிப்பீடு மட்டுமே தேவை. என்றார்.

1917 புரட்சியைத் தொடர்ந்து, க்ருப்ஸ்கயா அரசியல் காட்சியில் முன்னணியில் இருந்தார், 1924 இல் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரானார். 1922 முதல் 1925 வரை, அவர் ட்ரொட்ஸ்கியின் இடது எதிர்ப்பிற்கு எதிராக ஜோசப் ஸ்டாலின், கிரிகோரி ஜினோவிவ் மற்றும் லெவ் கமெனேவ் ஆகியோருடன் இணைந்தார். பின்னர் ஸ்டாலினுடன் முரண்பட்டார். அவர் 1929 முதல் 1939 வரை துணைக் கல்வி ஆணையராக இருந்தார், சோவியத் கல்வி முறையின் மீது வலுவான செல்வாக்கு, சோவியத் நூலகத்தின் வளர்ச்சி உட்பட. (1869 – 1939) உழைக்கும் மக்களின் மகிழ்ச்சிக்காகவும், கம்யூனிசத்திற்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அறிவியல் கற்பித்தல், சோவியத் பள்ளி உருவாக்கம், புதிய கொள்கைகளின் அடிப்படையில் கல்வி முறையை உருவாக்குதல் ஆகியவற்றின் சிக்கலான சவால்களுக்கு அவர் அதிக முயற்சியும் ஆற்றலும் கொடுத்தார். சோவியத் ஒன்றியத்தில் சோசலிசத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்புவதற்கு தேவையான நிபந்தனைகளில் ஒன்றாக இதை அவர் கண்டார்.

க்ருப்ஸ்காயாவின் கல்வியியல் செயல்பாடு குறித்து லெனின் உயர்வாகப் பேசினார். சோவியத் கல்வியின் நிறுவனர்களில் ஒருவராக நடேஷ்டா க்ருப்ஸ்கயா கருதப்படுகிறார். அவளுடைய யோசனைகள், குறிப்புகள் இன்றுவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒரு திறமையான ஆசிரியராக, மார்க்சியவாதியாக, க்ருப்ஸ்கயா முன்னோக்கி பார்க்க முடிந்தது, மேலும் சோவியத் ஒன்றியத்தின் வாழ்க்கையின் விடியலில் பிறந்த அவரது பல கருத்துக்கள் மிகப்பெரிய விளைவைக் கொண்டிருந்தன. க்ருப்ஸ்கயா நுண்கலைகளின் தீவிர ஊக்குவிப்பாளராக இருந்தார் என்பது அனைவருக்கும் தெரியாது, இது இளைய தலைமுறையின் கம்யூனிச கல்வியின் சக்தி வாய்ந்த வழிமுறையாக கருதப்படுகிறது.

சுரண்டல் சாதியிடம் இருந்து செக்குமாடென உழைக்கும் தொழிலாளர் சாதியை விழிப்படைய செய்த வித்தகிதான் புரட்சித்தாய் குரூப்ஸ் காயா.

மாவீரன் லெனின் புரட்சிப்போரில் துணையாகவும் தூண்டுகோலாகவும் பாடுபட்டு சோவியத் சோலிச குடியரசு அமைக்க உறுதுணையாக நின்றவர் இவர்.

குரூப்ஸ் காயாவின் வாழ்க்கை வரலாறும் சோவியத் யூனியனின் வரலாறும் வேறு வேறு அல்ல இரண்டும் ஒன்றே.

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்

அன்றைய புதிய புலர் பொழுதைத் தோற்றுவிக்கும் காலைக் கதிரவன் உலகை மூடியிருந்த இருள் போர்வையை நீக்கிவிட்டு கிழக்கு வானிலே எழுந்து கொண்டிருந்தான். பறவைகள் தம் இனிய குரலெழுப்பி அன்றைய பொழுதினை வரவேற்றன. மரங்களின் இலைகளில் இருந்து பனித்துளிகள் துளித்துளியாக நிலத்தில் விழுந்து சிதறிக் கொண்டிருந்தன. கடிகாரம் காலை ஆறு மணி முப்பது நிமிடத்தைக் காட்டியபோது சீலன் கெதியா எழும்புங்கோ பள்ளிக்குப் போகவேணும் என்று நித்திரையில் இருந்த சீலனை எழுப்பி கையிலே பற்தூரிகையைக் கொடுத்து அதில் பற்பசையை வைத்து விட்டார் அவனின் அம்மா. சீலன் காலைக் கடன்களைக் கழித்துவிட்டு பல்லைத் தீட்டி வாயைக் கொப்பளித்து விட்டு தொட்டியில் நிறைத்திருந்த முத்துப் போன்ற நீரை அள்ளிக் குளித்தான். அவன் குளித்து முடிந்ததும் அவனுடைய அம்மா ஒரு துவாயைக் கொண்டு வந்து அவனுடைய உடலிருந்த ஈரத்தை ஒற்றி விட்டாள்.

அப்போது வேப்பமரத்தில் இருந்த குயில் கூ கூ என்று இராகமாய்ப் பாடியது. அதனைக் கேட்ட சீலன் தானும் அதனுடன் சேர்ந்து கூ கூ என்று பாடினான். அம்மா ஏன் குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது? என்று தான் கேள்விப்பட்ட செய்தியைக் கேட்டான். குயிலின்ர அம்மா அதுக்கு கூடுகட்டக் காட்டிக் குடுக்கேல்லை, அதாலதான் கூடுகட்டத் தெரியாம அது காகத் திட்ட கொத்து வாங்குது என்று அவனுடைய அம்மா கூறிவிட்டுப் போனாள். பாடசாலைச் சீருடைய அணிந்த படி மனதில் வந்த மகிழ்ச்சியைப் பாடலாக்கிப் பாடினான் சீலன்

**குயிலே குயிலே! நீ கூவு**
**குவலயம் யாவும் விடிந்ததென்று**
**குயிலே! குயிலே! நீ கூவு**
**குழந்தைகள் யாவரும் எழுவரென்று**
**குயிலே!குயிலே நீ கூவு**
**குவிந்த மொட்டு அவிழ்ந்ததென்று**
**குளிர்ந்திடும் காலை வருகவென்று**

மகிழ்ச்சி பொங்க பாடி முடித்த பின், தன் உடையை மாற்றிக் கொண்டு வீட்டிற்குள் சென்று வீபூதி பூசிக்கொண்டு பறந்து செல்லும் சிட்டுக் குருவியைப் போல் தன்தாயின் கைகளிலிருந்து விடுபட்டு பூந்தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றான். அங்கே வாசலில் நின்ற மல்லிகைப் பந்தலில் இருந்து கமகமவென்ற வாசனை காலைத் தென்றலில் கமழ்ந்தது வந்தது. பூந்தோட்டத்தில் நுழைந்த சீலனின் கண்களில் பனித்துளிகளை இதழ்களில் முத்து முத்தாக தாங்கியபடி நின்ற சிவப்பு ரோஜா மலரொன்று பார்த்து சிரித்தது. சில மலர்கள் பாதி அவிழ்ந்த மொட்டுக்களுடனும் சில முழுவதமாக விரித்தும் வர்ணஜாலம் காட்டிக்கொண்டிருந்தன. அந்த மலர்களில் தேன் குடிப்பதற்காக வண்டுகளும் தேனீக்களும் சிட்டுக்குருவிகளும் வந்திருந்தன. தேனீக்கள் மலர்களைச் சுற்றிச்சுற்றி ரிங்ரிங் என்ற ஒலியை எழுப்பியபடி வலம் வந்தன. சிட்டுக்குருவிகள் மரத்திற்கு மரம் தாவி தேன் குடித்தன வண்ணத்துப் பூச்சிகள் பூக்களுடன் பூக்களாக அமர்ந்து தேன் குடித்தன. இதனைப் பார்த்த சீலன்




**வண்ண வண்ணப் பூந்தோட்டம்**
**வடிவு மிக்க பூந்தோட்டம்**
**கண்ணைக் கவரும் பூந்தோட்டம்**
**எங்கள் வீட்டுப் பூந்தோட்டம் இதயங்கரவும் மல்லிகையும்**
**இரத்தச் சிவப்பு செவ்வரத்தை**
**இனிய நல்ல பூக்களிலே**
**கானம் பாடும் வண்டுகளாம்.**

என்று பாடி மகிழ்ந்தான். பின்னர் பூக்களையும், சில இலைகளையும் பறித்துக் கொண்டு சுவாமி படத்துக்கு கொண்டு சென்று சாத்தினான். பின்னர் கைகள் இரண்டையும் நெஞ்சுக்கு நேரே குவித்தபடி

**அன்பு எங்கள் இறைவன்**
**அறிவு தரும் தலைவனி**
**நன்றி என்றும் சொல்லி**
**நாளும் வாழ்த்தி வணங்கும்**
**அன்பர் தம்மை காக்கும்**
**அவன் அடிகள் போற்றி**
**பாலர் நாங்கள் எல்லாம்**
**பனிவுடனே வாழும் நல்லவருள் தா! தா!**

என்று பாடி இறைவன் திருவுருவை நினைத்து தெழுதான் சீலன்,

பின்பு பாடசாலைச் சீருடையை அணிந்து கொண்டு காலை உணவை உண்டான். புத்தகப் பையை முதுகிலே மாட்டிக் கொண்டு, தண்ணீர்ப் போத்தலை ஒரு பையிலும் கைப்பணி செய்வதற்குரிய பொருள்களை மறுகையிலும் எடுத்துக்கொண்டுப் பாடசாலைக்குப் புறப்பட்டான். அவனுடைய அம்மா வீட்டு முன் வாயில் வரை வந்து அறிவுரைகள் கூறி வழியனுப்பி வைத்தார். வீதியிலே பாடசாலை. மாணவர்கள் சீருடை அணிந்து புத்தக பைகளுடன் போருக்குப் போகின்ற போர் வீரர்களைப் போல் அணிந்து புத்தகப் பைகளுடன் கம்பீரமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். சீலனும் அவர்களுடன் சேர்ந்து பாடசாலைக்குச் சென்றான்.

பாடசாலையில் முதலாவது மணி அடித்ததும் மாணவர்கள் காலைக் கூட்டத்திற்கு எறும்புகளைப் போல வரிசையாக வந்து மைதானத்திற்கு நடுவிலே ஒன்றுகூடினர். இறைவணக்கம் முடிந்ததும் மாணவன் ஒருவன் எண்ணி துணிக கருமம் எனும் பொருளில் எந்த காரியத்தையும் செய்ய முன்பாக நாம் அதனால் வரும் விளைவுகளை ஆராய்ந்தே செய்யவேண்டும் என அன்றைய நற்சிந்தனையை வழங்கினான். அதன் பின் அப்பியாசப் பயிற்சிகளுடன் காலைக் கூட்டம் முடிந்ததும் மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்றனர். அங்கே பாடசாலைச் சுவரில்

**பூக்கள் இங்கே புத்தகம் படிக்கும்**
**பூமி எங்கும் புது மணல் கமழும்**
**காற்றில் இனிக்கனி மணங் கமிழும்**
**காலம் இவர் கைகளில் தவழும்**

என்று எழுதப்பட்டிருந்தது. பாடங்கள் நடைபெற்று முடிந்ததும் இடைவேளைக்கான மணி ஒலித்தது. அப்போது மாணவர்கள் வகுப்பறைகளிலிருந்து உடைப்பெடுத்த வெள்ளம் போல் வெளியே வரவும் வானத்திலே திடீரென காதைச் செவிப்படுத்தும் சத்தத்துடன் இரண்டு விமானங்கள் தோன்றவும் சரியாயிருந்தது.

(தொடரும்.... )



# மருத்துவக் கதிர்



# குழந்தை பராமரிப்பும் தாய்ப்பாலூட்டலும்

குழந்தை பிறந்தது முதல் ஒரு வருடம் வரை தாய்ப்பாலூட்டுதல் முக்கியமாகும். முதல் மூன்று மாதங்களும் குழந்தைகள் அழும்போது எல்லாம் தாய்ப்பாலூட்டுல் வேண்டும். முதல் மூன்று மாதங்கள் கடந்த பின்னர் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை 20 நிமிடங்களிற்கு தாய்ப்பாலூட்ட வேண்டும். தாய்ப்பாலூட்டாத இடை நேரங்களில் குழந்தைகள் அழும்போது கொதித்து ஆறிய நீர் கொடுக்கலாம்.

தொடர்ச்சியாக பாலூட்டுதல் தவறானதொன்றாகும். ஏனெனில் குழந்தைகள் இவ்வாறு செய்யும் போது தாய்ப்பாலிற்கு அடிமையாகி விடக்கூடும். குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும்போது தாய்க்கு நீரிழப்பு (Dehydrate) ஏற்படும். இதனால் பால் கொடுக்கும் போது தாய்மார்கள் அருகில் தண்ணீர் வைத்துக் குடித்துக் கொண்டு பால் கொடுக்க வேண்டும். தாய்மார்கள் தலையணையின் உதவியுடன் குழந்தைகளை தாங்கிய படியே பால் கொடுக்க வேண்டும். படுத்திருந்தவாறு பால் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பால் கொடுக்க முன்பு தாய்மார்கள் முதுகிற்கு தலையணை கொண்டு ஆதாரம் வழங்கிய பின்பே பால் கொடுக்க வேண்டும். இதனால் தாய்மாருக்கு ஏற்படும் முதுகுவலி, இடுப்பு வலி ஆகியவற்றை தவிர்க்கலாம்.

குழந்தைகளுக்கு பால்ப்போத்தலை பயன்படுத்துவதாயின் பால்ப்போத்தலை பயன்படுத்த முன்னர் தொற்று நீக்க நன்றாக கொதிநீரில் அவிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் இவ்வாறு செய்த பின்பே பயன்படுத்துதல் சிறந்தது. கர்ப்பகாலத்தில் தாய்மார்கள் உண்ணும் உணவுகளை விட பாலூட்டும் தாய்மார்கள் உண்ணும் உணவுகளில் அதிக கவனம் தேவை.

தாய்ப்பாலில் 90 சதவீதம் நீரே உள்ளது. பாலூட்டும் தாய்மார்கள் முருங்கையிலை, பாதாம் பருப்பு, பிஸ்தா, பூண்டு, மிகையான புரதம் அடங்கிய உணவுகள், மிகையான நார்ச்சத்து அடங்கிய உணவுகள் ஆகியவற்றோடு மீன், நாட்டுக்கோழி, ஈரல் ஆகிய அசைவ உணவுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ் உணவுகள் தாய்ப்பாலின் தடிப்புத்தன்மையைப் பேண உதவும். பாலின் தடிப்புத் தன்மை குறைந்தால் குழந்தைகளுக்கு அடிக்கடி பசி உணர்வு தோன்றக் கூடும். தாய்ப்பால் கொடுத்த பின்பு குழந்தைகளை உடனேயே படுக்கபோடாமல் தோளில் சாய்த்து முதுகை தட்டிக் கொடுத்து ஏப்ப சத்தம் கேட்ட பின்புதான் குழந்தைகளை படுக்கப்போட வேண்டும்.

ஏப்ப சத்தம் கேட்காதவிடத்து 15 - 20 நிமிடங்கள் வரை குழந்தையின் முதுகில் தடவிக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் குழந்தையின் தொண்டையில் பால் எஞ்சியிருக்குமாயின் அது குழந்தையை படுக்க வைக்கும் போது சுவாசக்குழாயை சென்றடைந்து மூச்சுத்திணறலை ஏற்படுத்தலாம். பால் குடித்த பின்பு குழந்தைகளை படுக்க வைக்கும்போது தலையை சற்று உயர்த்தி ஒரு பக்கமாக சாய்த்தவாறு வைக்க வேண்டும். இதனால் குழந்தைகளிற்கு சுவாசம் இலகுவாக நடைபெறும்.

குழந்தை பிறந்து 6 மாதங்களின் பின்பு தாய்ப்பாலுடன் துணை உணவுகளையும் (Supplementary foods ) வழங்கலாம். அதாவது தானியங்களை வறுத்து பொடியாக்கி காலை, மாலையில் பாலில் கலந்து காய்ச்சிக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு 6 மாதங்களின் பின்னர் மீன்கள், பாதாம்பருப்பு, பிஸ்தா, நாட்டுக்கோழி முட்டை, வேர்க்கடலை ஆகியவற்றையும் கொடுக்கலாம்.

செரிப்பழம், மாதுளம் பழம், வாழைப்பழம், திராட்சை, அப்பிள் ஆகிய பழங்களையும் கொடுக்கலாம். மாதுளம் பழம், வால்நட் (walnut) குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு உதவும். குழந்தைகளுக்கு வால்நட் (walnut) ஐ பொடியாக்கி பாலில் கலந்து கொடுக்கலாம். சோற்றோடு பருப்பு, நெய் ஆகியவற்றையும் சேர்த்துக் கொடுக்கலாம். நாம் குழந்தைகளுக்கு மிகையாக பருப்பு அல்லது புரத உணவுகளை கொடுக்கக் கூடாது. குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 3 - 5 கிராம் புரதச் சத்து போதுமானதாகும்.



மிகையான புரதம் குழந்தைகளுக்கு வழங்கப்படுகையில் கண்களுக்குக் கீழ் வீங்கிய நிலை அதாவது அதைச்ச நிலையில் முகம் காணப்படும் மற்றும் வாய் மணம் காணப்படும். இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் புரதம் அதிகமாக குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறதா என கவனிக்க வேண்டும். முதல் நாள் இரவு கேழ்வரகினை நீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் அரைத்து பால் எடுத்து வெல்லம் சேர்த்துக் காய்ச்சி குழந்தைகளுக்கு கொடுக்கலாம். இது குழந்தைகளின் இரும்புச் சத்தையும் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்க உதவுவதோடு குழந்தைகளின் உடல் எடையையும் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு ஒமேகா 3 (Omega 3) அடங்கிய மீன் எண்ணெய் மாத்திரைகளை (cod liver tablets) வழங்காது மீன் எண்ணெயாக (cod liver oil) வழங்கலாம்.

குழந்தைகளை தூங்க வைக்கும் போது ஏணைக்குள் அல்லது தரையில் பாயில் தூங்க வைக்க வேண்டுமே தவிர தொட்டில், ஸ்ப்ரிங் தொட்டில், மெத்தைகளில் (Bed) குழந்தைளை தூங்க வைக்கக்கூடாது. ஏணையே குழந்தைகளின் முள்ளந்தண்டு ஆரோக்கியத்திற்கு நல்லது. குழந்தைகளை ஏணையில் வீசியே ஆட்டுதல் வேண்டும். குழந்தைகளை ஸ்பிரிங் தொட்டிலில் போட்டு மேல் கீழாக ஆட்டக்கூடாது. குழந்தைகளின் தலையில் ஒரு போதும் குட்டவோ அல்லது அடிக்கவோ கூடாது அது பிற்காலத்தில் அவர்களுக்கு பெரியளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். குழந்தைகளை தூக்கும் போது அவர்களது கைகளை பிடித்து தூக்கக் கூடாது. அவர்களுடைய கைகள், தோள்பட்டை என்புகள் அவர்களது பாரத்தை தாங்கக் கூடியதாக இருக்காது. இவ்வாறு செய்யும் போது தோள்பட்டை என்புகள் விலகி விடக்கூடக் கூடும். குழந்தைகளை அவர்களது உடலைப் பிடித்து தான் தூக்க வேண்டும். குழந்தைகளிற்கு தினமும் ஒலிவ் எண்ணெய் அல்லது குழந்தைகளின் சருமத்திற்கு ஏற்ற ஏதாவது பேபி ஒயிலினை உபயோகித்து நன்றாக மசாஜ் செய்து 2 மணி நேரம் ஊறவிட்டு குளிப்பாட்டுதல் குழந்தையின் சரும பாதுகாப்பிற்கு உதவும். குழந்தைகளை குளியல் தொட்டியில் (Bath tab) போட்டு குளிப்பாட்டாமல் தாய்மார்கள் தமது காலில் வைத்து குழந்தைகளின் கை, கால்களை நன்றாக மசாஜ் செய்து குளிப்பாட்ட வேண்டும். குழந்தைகளை குளிப்பாட்டும் போது அவர்களது கழுத்திற்கு கீழ் கையை வைத்து வாய், மூக்கினுள் தண்ணீர் செல்லாதவாறு மிகவும் கவனமாகக் குளிப்பாட்ட வேண்டும். அதே போன்று தலைக்கு நீர் ஊற்றும் போது நெற்றிப் பகுதியில் கையை வைத்து கவனமாக தண்ணீர் ஊற்ற வேண்டும்.

தூக்கத்தில் குழந்தைகள் பல்லைக் கடிப்பது போன்று இருந்தால் வயிற்றில் கொழுக்கிப்புழு, நாடாப்புழு போன்றன இருக்கலாம். வைத்தியரின் பரிந்துரையுடன் பூச்சி மருந்து கொடுக்கலாம். இருப்பினும் தொடர்ந்து தூக்கத்தில் பல்லைக் கடிப்பது போன்று இருந்தால் EEG பரிசோதனை (மூளை மின் அலைவரைவு) மூலம் குழந்தைகளை பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். பெரும்பாலான குழந்தைகளிற்குத் தூக்கத்தில் வலிப்பு ஏற்படுகிறது. குழந்தைகளிற்கு தூக்கத்தில் கை, கால் நடுக்கம் ஏற்படல், உதடு துடிப்பது போன்று இருத்தல், வாந்தி எடுத்தல், தலைவலி ஏற்படல் ஆகியன வலிப்பிற்கான அறிகுறிகளாகும். சில வேளைகளில் குழந்தைகள் விழித்திருக்கும் போது செய்யப்படும் EEG பரிசோதனை முடிவுகள் குழந்தைகளுக்கு வலிப்பு இல்லை என்பதை போன்று வரலாம். இருப்பினும் குழந்தைகளிற்கு மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தொடர்ந்து தென்பட்டால் குழந்தைகள் தூங்கும் போது EEG பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ஸ்கான் செய்வதன் மூலம் குருதி உறைவு, தலையில் ஏதேனும் அடிபட்டு இருந்தால் ஏற்பட்டு இருக்கும் பாதிப்புகளை மாத்திரமே அறிய முடியும். EEG பரிசோதனை மூலம் நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளை அறிய முடியும். குழந்தைகளுக்கு 8 - 10 மணி நேர தூக்கம் அவசியமாகும். குழந்தைகள் அதிக நேரம் விளையாடிவிட்டு அல்லது கனிணி , தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியவற்றை பார்த்துவிட்டு தூங்கும் போது அவர்களது உயிரியல் கடிகாரம் (Biological clock) பாதிக்கப்படுகின்றது. கனிணி, தொலைக்காட்சி, தொலைபேசி ஆகிய LED திரைகளின் ஒளி ஆனது மூளையை பாதிக்கின்றது. தொலைபேசியை தலையணைக்கு கீழ் வைத்துவிட்டு உறங்குதல் அல்லது தலையிலிருந்து 25 cm ற்குள் தொலைபேசியை வைத்துவிட்டு உறங்குதல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.



டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

இதனால் தொலைபேசியிலிருந்து வரும் கதிர்ப்புத் தாக்கங்களால் மூளையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு நித்திரை பாதிக்கப்படும். உயிரியல் கடிகாரம் ஆனது மூளையிலுள்ள பீனியல் சுரப்பியால் (Pineal gland) இயக்கப்படுகின்றது. இச் சுரப்பியானது நித்திரைக்கு உதவும் மெலடோனின் எனும் ஹோமோனைச் சுரக்கின்றது. குழந்தைகளுக்கு மெலடோனின் சுரப்பை அதிகரிக்க தினமும் இரவில் சூடான பால் கொடுக்கலாம். அத்துடன் வாழைப்பழமும் மெலடோனின் சுரப்பை அதிகரிக்கக் கூடியதாகும்.





# எழில் கதிர்



## தோலில் ஏற்படும் வறட்சியை தடுக்கும் வழிகள்

கற்றாழைத் தண்டுகளை எடுத்து உள்ளிருக்கும் ஜெல் அனைத்தையும் எடுத்து அரைத்து அதை தேங்காயெண்ணெயுடன் கலந்து சீராக மாறும் வரை கலக்கவும். இந்த கலவையை கண்ணாடிப் போத்தலில் கலந்து பயன்படுத்தலாம். இது மாய்சுரைசர் போன்று பயன்படுத்தும் போது சருமத்தை மென்மையாகவும் மிருதுவாகவும் வைத்திருக்கும். மேலும் சருமத்தில் ஏற்படும் வறட்சி மற்றும் செதில்களை தடுக்க உதவும்.

## பாதம் சொரசொரப்பாக இருந்தால் இதை செய்யுங்கள்



பாத சொரசொரப்புக்கு சிறந்த தீர்வு தேங்காயெண்ணெய் தான். இதை இலேசாக சூடேற்றி பாதங்களின் மேல் மற்றும் பாதங்களின் கீழ் மென்மையாக மசாஜ் செய்து அதன் மேல் மெல்லிய துணியை கட்டி விடவும். பிறகு 20 நிமிடங்கள் கழித்து துணியை எடுத்துவிட்டால் போதும். தினமும் செய்து வந்தால் நாளடைவில் இவை அழகான பாதங்களை கொடுக்கும். பார்க்கவும் பளிச் என்று இருக்கும்.

பாதங்கள் கறுப்பாக இருந்தால் வெதுவெதுப்பான நீர், கல் உப்பு, புதினா இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து சாறாக்கி பிழிந்து ஒன்றாக கலந்து அதில் கால்களை நனைக்கலாம். இது நல்ல பயன் கொடுக்கும். இதனுடன் எலுமிச்சை சாறு பாதி அளவும் சேர்க்கலாம்.

## முகப்பருக்களைப் போக்கி சரும நிறத்தை அதிகரிக்க





காய்கறிகள் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி, சரும ஆரோக்கியத்திற்கும் நல்லது. காய்கறிகள் சாப்பிட மட்டும் தான் என்று நினைக்க வேண்டாம். இதைக் கொண்டு சரும பிரச்சனைகளைப் போக்க சருமத்திற்கு பேஸ் பக்குகளையும் போடலாம். அதுவும் பலரும் சாப்பிட மறுக்கும் பாகற்காய் சருமத்தின் பொலிவை மேம்படுத்த உதவும் என்பது தெரியுமா? அதுவும் இது சரும பிரச்சினைகளைப் போக்கி, சரும அழகைக் கூட்ட உதவுகிறது. இது தவிர சருமத்தின் நிறத்தை அதிகரிக்கவும் பாகற்காய் உதவுகிறது.

பாகற்காயைக் கொண்டு சருமத்திற்கு போடக் கூடிய சில பேஸ் பக் அடிக்கடி முகத்திற்கு பயன்படுத்தினால், சரும நிறமும் அதிகரிக்கும், சரும பிரச்சினைகளும் நீங்கும்.

பாகற்காய் மற்றும் வெள்ளரிக்காய் பேஸ் பக் வெள்ளரிக்காயில் நீர்ச்சத்து அதிகம் உள்ளது. இது சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்துக் கொள்ளும். இத்தகைய வெள்ளரிக்காயுடன், பாகற்காய் சேர்த்து அடிக்கடி பேஸ் பக் போட்டு வந்தால், அது சருமத்தின் ஆழத்தில் உள்ள அழுக்கை வெளியேற்றவும் உதவி புரிந்து, முகப்பரு போன்ற சரும பிரச்சனைகளை நீக்கும். இந்த பேஸ் பக் செய்வதற்கு, பாகற்காய் மற்றும் வெள்ளரிக்காயை நீரில் கழுவி சிறு துண்டுகளாக்கி, இரண்டையும் நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பின் அதில் சிறிது கற்றாழை சாறை சேர்த்து கலந்து, அதை முகத்தில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்த பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இந்த பேஸ் பக்கை அடிக்கடி போட்டு வந்தால், ஒரு நல்ல மாற்றத்தை முகத்தில் காணலாம்.

## மூக்கு மேல் இருக்கிற கரும்புள்ளி வேகமாக மறைய வேண்டுமா?



எலுமிச்சை அமிலத்தன்மை கொண்டது . இது மூக்கின் மேல் இருக்கும் கரும்புள்ளிகளை விரைவாக நீக்கும் சிறந்த வீட்டு வைத்தியம் ஆகும். இதில் உள்ள சிற்றிக் அமிலம் சருமத்தில் உலர்த்தும் விளைவைக் கொண்டிருக்கின்றது. இதனால் கரும்புள்ளிகளுக்கு முக்கிய காரணமான சருமத்தின் அதிகப்படியான உற்பத்தியைக் கட்டுப்படுத்துகிறது. இறந்த சரும செல்களை அழிக்கின்றது.


## முடி உதிர்தலுக்கு பயனுள்ள தீர்வு



நெல்லிக்காய், மருதாணி, வல்லாரை ஆகியவற்றை தயிருடன் சேர்த்து சிறந்த ஹேர் பேக் செய்ய வேண்டும். இது முடி உதிர்தலை தடுக்கிறது.

பொடுகு மற்றும் பேன்களுக்கு எதிரான இயற்கையான தீர்வாக வேப்பிலை இருக்கிறது. இது இரத்தத்தை சுத்திகரிக்கும் திறன் கொண்டது. இதை பொடியாக தேங்காயெண்ணெயுடன் கலந்து பயன்படுத்தலாம். தயிருடன் கலந்து மசாஜ் செய்யலாம்.

## முடி அடர்த்தியாக வளர



வாரம் ஒருமுறை செம்பருத்தி இலையை அரைத்து தலையில் ஹேர்பேக் போட்டு ஊறவிட்டு குளித்து வாருங்கள். கூந்தல் அடர்த்தியாக வளருவது உறுதி. செம்பருத்தி இலை மற்றும் பூவை அரைத்துத் தலையில் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடியின் நிறம் மேம்படும்.

தேங்காய் மற்றும் விளக்கெண்ணெய் சம அளவு எடுத்து சூடாக்கி வெதுவெதுப்பான நிலையில் தலையில் தேய்த்து மசாஜ் செய்து குளியுங்கள். மாதம் 2 முறை இதைச் செய்து வர முடி வளர்ச்சி இருமடங்காக அதிகரிக்கும். வெதுவெதுப்பான எண்ணெயைத் தலையில் தேய்ப்பதால் முடியின் வேர்க்கால்கள் பலம் பெறும்.



## கண்களுக்குக் கீழ் கருவளையம்

கருவளையத்தைப் போக்க தக்காளி – 1, எலுமிச்சை சாறு – அரை தேக்கரண்டி, உளுந்து மாவு – அரை தேக்கரண்டி, மஞ்சள் தூள் – அரை தேக்கரண்டி எடுத்து – தக்காளியை மசித்து எடுக்கவும். அதில் எலுமிச்சை சாறு உடன் உளுந்தம் மாவை சேர்த்து நன்றாக மசிக்கவும். மஞ்சள் தூள் ஆகியவற்றைச் சேர்த்து மீண்டும் கலக்கவும். இந்த பொருள்களைச் சேர்த்துக் கெட்டியாகப் பேஸ்ட் ஆக்கி கண்களை சுற்றி மென்மையாகப் பயன்படுத்துங்கள். கண்களுக்குள் போகாமல் பார்த்துக்கொள்ளவும்.

இந்த பேஸ்ட்டை 10 அல்லது 20 நிமிடங்கள் வரை வைத்து உலர்வாக ஆன பிறகு ஈரத்துணியால் துடைக்கவும். பிறகு கண்களுக்கு பன்னீர் கொண்டு துடைத்து எடுக்கவும்.



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# சிறுவர் கதிர்





## புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா

ஒரு சமயம் அரபுநாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு ஒரு அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலி ராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்கு பரிசாக கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொடங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களைப் பார்த்து என்மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறீர்கள்? என்று கேட்டான்.

அவர்களோ! உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார் என்று அவன் கைகளை காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனைக் காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறிது நேரம் யோசித்து தான் அணிந்திருந்த மேலாடையை கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான்.

இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா? தெனாலி மகன் தந்தை கூறியதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவ்வொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துண்டு முடி இருபதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை

அரண்மனைக் காவலர்கள் தெனாலி இராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச்சென்றனர்.

காவலர்கள் மன்னரை பார்த்து அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்தக் குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்கவேண்டும் என்று கூறினர்.

மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் அரசர் காவலர்களை பார்த்து, திருடிய பூக்கள் எங்கே? என்று கேட்டார்.

காவலர்கள் மன்னரை பார்த்து, பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது என்று காவலர்கள் கூறினர்.

அரசர் தெனாலி மகனை பார்த்து, உன் கைகளை காட்டு என்று கூறினார்.

அவனும் வெறும் கைகளை காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.

மன்னர் தெனாலிமகனை பார்த்து, நீ பறித்த பூக்கள் எங்கே? என்று கேட்டார்

அவனோ! மன்னரைப் பார்த்து, நான் பூக்கள் எதுவும் பறிக்கவில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள் என்று கூறினான்.

மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார்.

தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக்கொண்டே வீட்டிற்கு புறப்பட்டனர்.

## இளநீர்



**தென்னை மரத்து இளநீர் - நல்ல**
**தேன்போல இனிக்கும் சுவைநீர்**
**என்றும் எங்கும் கிடைத்திடுமே - தினம்**
**ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!**

**பானத்தில் இளநீர் அரியவகை - எந்த**
**காலமும் நமக்கு நல்ல துணை**
**விலையோ ஒன்றும் அதிகமில்லை - இங்கு**
**இதுபோல் பானம் வேறு இல்லை.**

**இயற்கை தந்தது இளநீர் - நல்ல**
**இன்சுவை தந்திடும் இளநீர்**
**உடலின் வெப்பம் தணித்திடுமே - நம்**
**உள்ளம் தனிலே நிறைந்திடுமே!**

**கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே - நம்**
**அனைவரின் தாகம் தீர்த்திடுமே!**
**அனைவரும் நாளும் குடித்திடலாம் - வரும்**
**ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்!**

## பூனைக்குட்டி



**மியாவ் மியாவ் பூனைக்குட்டி**
**மீசை வச்ச பூனைக்குட்டி**
**பையப் பையப் பதுங்கி வந்து**
**பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி**

**பளபளக்கும் பளிங்குக் குண்டு**
**பளிச் சென்று முகத்தில் இரண்டு**
**வெளிச்சம் போடும் விழி கண்டு**
**விரைந்தோடும் எலியும் மிரண்டு**

**விரித்த பூவைக் கவிழ்த்ததுபோல**
**விளங்கும் பூனைக் காலடிகள்**
**இருந்து தவ்வ ஏற்றபடி**
**இயங்கும் சவ்வுத் தசைப்பிடிகள்**

**அழகு வண்ணக் கம்பளி யால்**
**ஆடை உடுத்தி வந்தது போல்**
**வளர்ந்து முடியும் பலநிறத்தில்**
**வந்து தாவும் பூனைக்குட்டி**

**விரட்டி விலங்கினைக் காட்டிலே**
**வீரங் காட்டும் புலியினமே**
**துரத்தி எலியை வீட்டினிலே**
**தொல்லை தீர்க்கும் பூனை தினமே**

## இரத்த தானம்



உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் இரத்ததானம் அளித்த பிறகு 10,15 நிமிடங்கள் ஓய்வெடுக்கவேண்டும். இரத்த தானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும்.

இரத்த தானம் அளித்த பிறகும் கூட அவரவர் தங்களது அன்றாட வேலைகளில் எப்போதும் போல் ஈடுபடலாம். எந்தச் சிக்கலும் இருக்காது.

இரத்த தானம் செய்வதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு வரை எந்த போதைப் பொருளையும் எடுத்திருக்கக் கூடாது.

இரத்த தானம் செய்ய விரும்புபவர்களுக்கு சர்க்கரை நோய், எய்ட்ஸ் போன்று இரத்தத்தின் மூலம் பரவக் கூடிய நோய்கள் இருக்கக் கூடாது.

இரத்த தானம் அளிக்க விரும்புபவருக்கு கடந்த 3 ஆண்டுகளில் மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருக்கக் கூடாது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 27th of February 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## CHOOSE THE SOUNDS AND FILL IN THE BLANKS



- The monkeys ------------------ in the jungle.
- The forest was full of the sound of the ------------------ of the birds.
- My cat ------------------ loudly when he is hungry.
- There were four dogs who were all ------------------ angrily.
- In summer time, the garden is full of the sound of bees ------------ and butterflies ------------ tering.
- The king of the jungle, the lion, made an enormous ------------------.
- At night, the owls ------------------ in the trees.
- The rat ------------------ when he ran through the room.
- On the Serengeti you will hear the hyenas ------------------.
- When I am on the farm, I always hear the pigs ------------------.
- The lake is full of the sound of ------------------ frogs.
- Every morning the rooster wakes us by crying ------------------.
- The dove softly ------------------.
- I could hear the oncoming geese ------------------ before I could see them.


. The cow in the field has a very quiet ------------------.

- My dog always goes ------------------ when he sees the postman coming down the path.
- The baby lambs were ------------------ after their mother.
- The bird spent the whole morning ------------------ in the treetops.
- The bear ------------------ as he walked out of his cave.
- At Easter we see little chicks who make a ------------------ sound.
- The horse ------------------ whenever he sees us coming.
- The cat would sit on my lap and ------------------ loudly when I rubbed her belly.





chatter
twitter
meow
bark
buzz - flutter
roar
hoot
squeak
laugh
oink
croak
cock-a
doodle-do
coo
cackle
moo
woof
bleat
whistle
growl
cheep cheep
neigh
purr



(a)sheep
(b)mouse
(c)camel
(d)bull
(e) fly
(f) goose
(g) hare
h) cock
(i)hen
(j)snake

## FILL IN THE BLANKS WITH NAMES OF THE ANIMALS OR BIRDS FROM THE BOX

**Write the letters of the animals in the Stars**

1. The last straw breaks the [ ] Back
2. Kill not the [ ] that lays the golden eggs.
3. Every [ ] crows on his dung hill.
4. Don't make yourself a [ ] , or the cat will eat you.
5. Better an egg today than a [ ] tomorrow.
6. There is a black [ ] ack IIR in every flock.
7. Take heed of the [ ] in the grass.
8. The [ ] must be taken by the horns.
9. You can not run with the [ ] and hunt with the hounds.
10. You must lose a [ ] to catch a trout.

## ANIMAL IDIOMS

**Beat a Dead Horse**
To continue to argue about something that has been settled



**A busy bee**
A busy, active person who moves quickly from task to task.



**Horse's Mouth**
Heard directly from one of the people involved




**Straw That Broke the Camel's Back**
A single small thing that exceeds a limit of patience



**Tail That Wags the Dog**
A small part of something that controls the whole thing



**Worm Has Turned**
The situation has been reversed.



**Bee In One's Bonnet**
To be excited in a negative way; to express a pet peeve




**Cat Among(st) the Pigeons**
Cause a disturbance or disruption, usually intentionally



**You do not find the happy life. You make it. - Camilla Eyring Kimball**


## Provincial Map of Sri Lanka

*Write the Names of the Provinces*





## Provincial Map of Sri Lanka


*Write the Names of the Provincial Capitals*



## *Name the Geographical Features*

***Choose from the Box***












































| | | | | | |
|---|---|---|---|---|---|
| Lake | Plain | Valley | Strait | Plateau | Mountain |
| Bay | Coast | Desert | Canyon | Cave | Hill |
| Continent | Archipelago | Delta | Glacier | Island | Isthmus |





# ஈழத்தில் சைவம் வளர்ந்த முறை



'சிவபூமி' எனத் திருமூலரால் சிறப்பித்து கூறப்பட்ட இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே சைவசமயம் நிலைபெற்று வளர்ச்சியுற்றிருந்தது. இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கரும் நாகரும் சிவ வழிபாட்டினர் என்பதும் ஈழத்தின் புராதன ஈச்சரமான திருகேதீஸ்வரம் நாகர்களது பிரதான வழிபாட்டுத் தலமாக இருந்ததென்பதும் ஆய்வாளர் கருத்தாகும்.

ஈழநாட்டின் நாற்புறமும் அமைந்திருக்கும் புராதன ஈச்சரங்களும் இலங்கையின் புராதன இலக்கியங்களான மகாவம்சம் போன்றனவும் புராதன பிராமிக் கல்வெட்டுகள்,இந்தியா இதிகாசங்கள்,பிற நாட்டார் குறிப்புகள் என்பனவும் இலங்கையின் இந்து சமயம் பற்றிய சான்றாதாரங்களை வெளிப்படுத்துகின்றன.

இந்திய இதிகாசங்களினூடாக இலங்கையில் வாழ்ந்தனர் எனக் கருதப்படும் மாதுவட்டா, விசுவகர்மா, மயன், குபேரன், இராவணன், மண்டோதரி முதலியோர் சிவ வழிபாடுடையவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி வழிபட்ட தலமாக திருக்கேதீஸ்வரம் விளங்குகின்றது.

இலங்கை வேந்தானான இராவணன் சிறந்த சிவ பக்தியுடையவனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். 'இராவணன் மேலது நீறு' என்பது சம்பந்தர் தேவாரம் இராவணனும் அவனது தாயும் வழிபட்ட தலமாக கோணேச்சரம் விளங்குகிறது.

இராவணன் தன் தாயின் அபரக் கிரியைகளை செய்வதற்காக அமைக்கப்பெற்றதே திருகோணமலையிலுள்ள கன்னியா தீர்த்தம்எனதட்சணகைலாய புராணம் கூறுகின்றது. இராவணின் மனைவியின் பாட்டனாரான மாதுவட்டா திருக்கேதீஸ்வரத்தை வழிபட்டு புத்திரப்பேறு பெற்றார் என்றும் அதற்கு சான்றாக அதனை அழகிய நகராக உருவாக்கினான் என்றும் அறியப்படுகிறது.

மாதுவட்டா புத்திரப்பேறு பெற்றார் என்றும் மாதுவட்டா என்பதே பின்னர் மாதோட்டம் என்பது அறிஞர் கூற்றாகும். கி.மு.2000 ஆண்டளவில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பெருங்கற் பண்பாடு நிலவிய போது இலங்கையில் வாழ்ந்த மக்களினால் முருக வழிபாடு கைக்கொள்ளப்பட்டமையை புத்தளப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருளாய்வொன்று நிரூபித்துள்ளது. ஆதிச்சநல்லூரிற் கிடைத்தவை போன்ற வேலாயுதங்களும் சேவற்சிலையும் காவடிச்செடில்களும் மாதோட்டம், கந்தரோடை முதலிய இடங்களிளேயும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் சிறப்பித்து விளங்கும் கதிர்காம முருக வழிபாடும் இதனை நிரூபிக்கின்றன. இலங்கைச் சரித்திர ஆய்வில் ஈடுபட்ட மேல்நாட்டு அறிஞர்களதும் இலங்கை அறிஞர்களதும் கருத்துக்கள் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே சைவசமயமே நிலைபெற்று இருந்தது என்பதற்கு ஆதாரங்களாக அமைகின்றன. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரும் பின்னரும் இந்த நாட்டில் சைவசமயம் செழிப்புற்று இருந்ததென வண வலபொல இராகுல என்பவர் எழுதிய இலங்கையில் பௌத்த வரலாறு எனும் நூலில் கூறியுள்ளார்.



திரு.ஜே.டபிள்யூ. ரெனற் என்பவர் எழுதிய இலங்கை சரித்திர நூலில் இலங்கையில் ஆதியில் குடியேறியவர்கள் சைவர்களே எனக்கூறுகிறார்.

போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியராகிய குவைறோஸ் என்பவர் தான் எழுதிய இலங்கை சரித்திரம் பற்றிய நூலில் கி.மு.1300 ஆம் ஆண்டில் திருக்கோணேஸ்வரக் கோயிலில் கட்டப்பட்டதெனக் கூறும் கல்வெட்டு ஒன்று இருந்தத்தார் எனக் கூறுகிறார்.

உருகுணை தேசியப் பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து எனக்கணிக்கப்படும் கல்வெட்டு ஒன்றில் 'சிவ நகர்'என்ற இடப்பெயர் குறிக்கப்பட்டு இருந்தமையும் இதற்கு சான்றாகும். யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் விஜயன் இலங்கைக்கு வந்து அரசாட்சியை ஏற்றதும் பழைய சிவாலயங்களை திருத்தினான் என்பதும் பாதுகாப்புக்காக நாற்புறமும் நான்கு புதிய சிவாலயங்களை அமைத்தான் என்று கூறப்படுவதால் அவையே பண்டைய ஈச்சரங்கள் எனவும் அறியப்படுகிறன்றன.

இவ்வகையில் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இந்து சமயம் நிலைபெற்று இருந்தமை என்பது தெரியவருகின்றது.

**சி.பிரணவன்**
**யாழ் இந்துக் கல்லூரி**
**தரம் - 10 C**

# கொரோனாவே!



**அறிவியல் மனித இனத்துக்கான**
**ஒரு அழகான பரிசு நாம்**
**அதை சிதைத்து விடக்கூடாது**
**அறிவியல் உலகையே வளர்த்தது**
**அறிவைப் பெருக்கியது**
**அதன் நன்மை தீமைகளால்**
**நாம் துவண்டு விடக்கூடாது**

**அழித்தது உலக மக்களை**
**கொடுமையான பயணம்**
**நாம் அதில் ஒரு போதும்**
**தோற்றுவிடக்கூடாது**
**அதிகரித்தது தினம்தினம்**
**தொடர்ச்சியான இழப்புக்கள்**
**சுக துன்பம் அனைத்தையும்**
**தாங்கியே பழகி விட்டோம்**

**கொவிட் என்றும் கொடிய நோய்**
**மாணவர் எம் கல்விதனை**
**அடியோடு அழித்தது**
**அந்த பசுமையான காலங்களை**
**ஆனாலும் நாம்**
**சளைத்தவர்கள் அல்ல**
**அறிவியல் தந்த பரிசு**
**நாம் ZOOM செயலியில்**
**தினம் தினம் கற்கின்றோம்**

**அழகான நேரம் அதை**
**நீதான் கொடுத்தாய்**
**குடும்பத்துடன் அனுபவித்த**
**அழியாத சோகம் அதை**
**நீதான் கொடுத்தாய்**
**உலகமே கொடிய நோயினால்**
**சிக்குண்டுசின்னாபின்னமானது**

**மூச்சு முட்டுகிறது**
**முகக்கவசம் அணிவதனால்**
**அறிவியலே அறிவாயோ நீ**
**சோதிப்பது காலமெனினும்**
**சாதிப்பது நீயாக இருக்கட்டும்**
**உலக விடிவிக்காய் அடிபணிவாய்**

**க.அட்சயன், 10 C**

# கல்விக்கதிர்



**- அகரன் -**

# இலங்கையின் காடுகள்

இலங்கையில் உலர்வலய என்றும் பசுமையான காடுகள் காணப்படுகின்றன அயன மண்டலக் காடுகளின் உலர் வலயங்களில் அமைந்த காடுகளே இவையாகும். இச்சூழலியற் பகுதி 48,400 சதுர கிலோமீற்றர் (18,700 சதுர மைல்) பரப்பளவில் இலங்கைத் தீவின் தென்மேற்குப் பகுதியும் மத்திய மலைநாட்டுப் பகுதியும் யாழ்ப்பாணத் தீபகற்பமும் தவிர்ந்த இலங்கையின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

தென்மேற்கு மற்றும் மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலேயே இலங்கையின் தாழ்நில மழைக்காடுகள், இலங்கையின் மலைசார் மழைக்காடுகள், இலங்கையின் மலைப்





பாங்கான மழைக்காடுகள் ஆகிய சூழலியற் பகுதிகள் காணப்படுகின்றன. இலங்கைத் தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாணத் தீபகற்பம் தக்கிண ஊசியிலைக் காடுகள் எனும் சூழலியற் பகுதியைச் சேர்ந்ததாகும்.

இலங்கையின் உலர்வலய என்றும் பசுமையான காடுகளில் காணப்படும் தாவரங்களின் இலைகள் உண்மையிலேயே என்றும் பசுமையாகக் காணப்படுகின்றன. இந்நிலை இங்குள்ள தாவரங்கள் அயன மண்டலப் பகுதிகளிலுள்ள ஏனைய உலர் காடுகளில் காணப்படும் அகன்ற இலைத் தாவரங்களிலும் பார்க்க நன்கு பசுமையாயிருப்பதைப் புலப்படுத்தும். இக்காடுகள் இந்தியாவின் தென்கிழக்குக் கரையோரமாகக் காணப்படும் கிழக்கு தக்கிண என்றும் பசுமையான உலர் காடுகள் கொண்டுள்ள இயல்புகள் பலவற்றை ஒத்துள்ளன. இக்காடுகளில் பொதுவாக வளரும் பெரிய மரங்களில் முதிரை, கருங்காலி, பாலை போன்றன பொருளாதார நலன்கள் பலவற்றைத் தருகின்றன.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECT TO SCHOOL FOR THE AWARD OF BURSARIES.

# மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் ஆக்கம்
புலமைவித்தகன் ஆசிரியர்
ஆர். பிரசாந்தன் NDT, BEd(primary)

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம்

சுட்டெண் : .........




**03. தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இடுக.**
1. புத்தக விழாவில் நாங்கள் பல அரிய நூல்களைப் பார்த்தோம்
2. முத்தமிழ் என்பது இயல் இசை நாடகம் என்பனவாகும்

**04. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக எழுதுக.**
1. விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.
வீரன் மைதானத்தில் விளையாடினான்.
..........................................................................................

2. அப்பா பண்ணை வீட்டுக்குச் சென்றார்.
மகள் பண்ணை வீட்டுக்குச் சென்றார்.
..........................................................................................

**05. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**
1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
..............................................................................
2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
..............................................................................

**06. பின்வரும் ஆண்பால் வாக்கியத்தைப் பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**
1. நான் எனது நண்பனின் வீட்டிற்குச் சென்றேன்.
..............................................................................
2. மனைவி நன்கொடை கொடுத்தாள்.
..............................................................................

**07. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து வெற்றிடத்தில் எழுதுக.**

| உள்ளே, வெளியே |
|---|

1. கூண்டின் ..................... கிளி இருந்தது.
2. வீட்டின் .................. நாய் இருந்தது.

**08. பொருத்தமான இணைமொழிகளைத் தெரிவுசெய்து வெற்றிடத்தைப் பூரணப் படுத்துக.**

(காடுமேடு, நோய்நொடி, எலும்புந்தோலும், வற்றிவரண்டு, குன்றுங்குழியும்)
1. டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவன் ................... மாகக் காணப்பட்டான்.
2. நாம் ................ இன்றி வாழவேண்டும்.

**09. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. I .................. ( is , am , are ) going to the school.
2. Please give me a ..................... ( Book , Books)

**10. பின்வரும் உருக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**


1. ...............................


2. ................................

**11. பின்வரும் தமிழ் சொற்களின் சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.**
1. உங்களது வயது எத்தனை?
..................................................................
2. எனது வயது ஒன்பது.
..................................................................


**12. பின்வரும் உருக்கள் குறிக்கும் பெயர்களின் சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.**


1. .....................


2. .......................

**1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதுக**

1. 'ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்து' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக
..........................................................................................




2. வட்டத்திலுள்ள நான்கு இலக்கங்களை பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக
..........................................................................................

3. புகையிரதம் ஒன்றில் 745 பிரயாணிகள் பயணம் செய்தனர். ஒரு புகையிரத நிலையத்தில் 196 பயணிகள் இறங்க 239 பயணிகள் புகையிரதத்தில் ஏறினர். இப்போது புகையிரதத்தில் பயணம் செய்வோர் எத்தனை பேர்?
..........................................................................................

4. குவியல் ஒன்றில் 336 அன்னாசிப் பழங்கள் உள்ளன. அவை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் இருக்கும் அன்னாசிப் பழங்கள் எத்தனை?
..........................................................................................


5. பாடசாலை ஆரம்பித்த நேரம் மு.ப 7.30 மணியாகும். எனினும் நாதிரா பாட சாலை ஆரம்பித்து 25 நிமிடங்களின் பின்பே பாடசாலைக்குச் சமூகமளித்தாள். அதன்படி நாதிரா பாடசாலைக்கு சமூகமளித்த நேரம் யாது ?
..........................................................................................

6. கீழே தரப்பட்ட ஒவ்வொரு நேரத்தையும் முற்பகல் எனவும் பிற்பகல் எனவும் குறித்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) புகையிரதம் மாலை 3.30க்கு நிலையத்தை வந்தடைந்தது
..........................................................................................
2) வைத்திய பரிசோதனை அறிக்கை காலை 10.00 இலிருந்து வழங்கப்படும்
..........................................................................................

7. ஒரு நீர்க்குழாயுடன் மற்றுமொரு 1m 15cm நீளமான நீர்க்குழாயை இணைத்த போது அதன் மொத்த நீளம் 3m 65cm ஆக காணப்பட்டது. எனின் ஆரம்பத்தில் இருந்த நீர்க்குழாயின் நீளம் யாது?
..........................................................................................

8. ஒரு சட்டை ஒன்றை தைப்பதற்கு 5m துணி தேவைப்படுகிறது. அவ்வாறான 247 சட்டைகளை தைப்பதற்கு தேவையான துணியின் அளவு யாது?
..........................................................................................

9.




முழு உருவின் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக தருக.
..........................................................................................

10. பேருந்து ஒன்றில் பயணம் செய்யக்கூடிய பயணிகளின் எண்ணிக்கை 5 ஆகும் 145 பேர் பயணம் செய்வதற்கு தேவையான பேருந்துகளின் எண்ணிக்கை யாது?
..........................................................................................

(மிகுதி அடுத்த இதழில்)

புதிய கல்வியாண்டு - 2022
LEARN EASY - KNOWLEDGE IS POWER - www.learneasy.lk
ZOOM வகுப்புக்கள்
Grade 2 - O/L
Medium TAMIL / ENGLISH
ICT, Maths, English, Commerce, Tamil, History, Science, Sinhala
Learn Easy புலமைவளரி
Call: 76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk



# விவசாயி



By : Sivalingam Thanusan
Temporary Demonstrator,
Faculty of Agriculture,
University of Jaffna, Sri Lanka.

# மனிதகுல உடல்நலமும் மரபணு மாற்றமும்

உண்மையிலே நாம் அன்றாடம் உண்பவைகளைப் பற்றி அறிந்து வைத்திருப்பது மிக மிகக் குறைவுதான். விவசாயி பயிர்களை உற்பத்தி செய்வது முதல் அவை எம்மிடம் சேரும் வரையில் நடைபெறுவது என்ன என்பது பற்றி நாம் பெரிதாக அறிவதில்லை.

காய்கறிகளும் பழங்களும், கவரும் விதத்திலான நிறத்தி லும் பருமனிலும் இருப்பதையும் தானியங்கள் தூசில்லாது சுத்தமாக இருப்பதையும் கண்டு அவை சிறந்தவை என்று நினைத்து கண்ணை மூடிக் கொண்டு வாங்குகின்றோம். பதப்படுத்தப்பட்ட பொருள் என்றால், 'பொதி செய்யப்பட்ட நாள்', 'காலவதியாகும் திகதி' போன்றவற்றை மேலோட்டமா கப் பார்த்துவிட்டு, அட்டையின் மேல் எழுதப்பட்டுள்ள ஆரோக்கி யப் பலன்கள் சிலவற்றை பார்த்துவிட்டு கவர்ச்சியில் மயங்கி வாங்கிவிடுகிறோம்.


ஆரோக்கியமான வாழ்வுக்கு ஆரோக்கியமான சிறந்த உணவுப் பழக்கவழக்கமே அத்திவாரம். இன்று எமக்கு சகல உணவு வகைகளும் தாராளமாகக் கிடைத்தாலும் கூட அவற்றை நுகர்வதற்கு முன் நாம் உட்கொள்ளும் உணவு ஆரோக்கியமா னதா? பாதுகாப்பானதா? போசணை மிக்கதா? என்பதை தெரிந்து கொள்ள எம்மில் எத்தனை பேர் முயற்சிக்கிறோம்.?

நாம் நுகரும் பெரும்பாலான காய்கறிகள், பழங்களில் அதிகளவிலான இரசாயன பசளைகள் மற்றும் பூச்சிக்கொல் லிகள் பயன்படுத்தப்படுவது உண்மையே. இயற்கையாக விளைந்த காய்கறிகள், பழங்கள் பார்ப்பதற்குப் பளபளப்பா கவோ, பொலிவான நிறமுடையதாகவோ இருக்காது. செயற் கைப் பசளைகள் பயன்படுத்தப்பட்ட தாவரத்தில் விளையும் பொருள்களே பளிச்சென்ற நிறத்தில் இருக்கும். அந்தக் காய் கறிகளில் சிலவற்றை வீட்டில் விளைவித்துப் பாருங்கள், உண்மை தெளிவாகப் புரியும்.

பொதுவாக உணவுப் பொருள்களை வாங்கும்போது, அவை பொதி செய்யப்பட்ட நாள், காலாவதியாகும் நாள் போன்றவற் றைப் பார்த்துவிட்டு வாங்கி விடுகிறோம். அதனால் மட்டும் நாம் வாங்கும் பொருள் பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எந்த ஒரு பதப்படுத்தப்பட்ட உண வுப் பொருளை வாங்கும்போதும், அந்தப் பொதியில் அச்சிடப் பட்டிருக்கும் 'பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள்கள்' பட டியலை நாம் கவனிக்க வேண்டும். சில பொருள்கள் நமக்குத் தெரிந்தவையாகவும், மேலும் சில பொருள்களின் பெயர்கள் நமக்குத் தெரியாதவையாகவும் இருக்கும்.

எந்த ஒரு பொருளை வாங்கும்போதும் நமக்குத் தெரியாத பெயர்கள் மூலப்பொருள் பட்டியலில் இருந் தால், அப்பொரு ளைத் தவிர்ப்பது நல்லது. பல நிறுவனங்கள் தடை செய்யப் பட்ட மற்றும் தவறான சேர்க்கைப் பொருள்களுக்குப் பதிலாக மக்கள் அறியாத குறியீட்டு பெயர்களைத் தந்திரமாகப் பயன் படுத்துகின்றன. உதாரணமாக, அஜினோமோட்டோ உட்பட பல்வேறு பொருள்கள், இப்படி மாற்றப்பட்ட பெயர்களில் காணப்படுகின்றன. இவ்வரிசையில் இந்நவீனயுகத் தில் மற் றுமொரு வடிவில் சந்தைக்கு வரும் காய்கறிகள் மற்றும் பழவகைகள் மரபணு மாற்றப்பட்ட அமைப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றதை அவதானிக்கலாம்.

எமது எண்ணம் மற்றும் உணர்வு இரண்டையும் உருவாக் குவது எமது மரபியலோடிணைந்த வாழ்வியல் முறைகளா கும் என்றால் மிகையாகாது. நமது உணவுப்பழக்கம், குடும்ப உறவுகள், நட்பு, சமுதாயம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகி யவை நமது மரபியல் அமைப்பை மெல்ல மாற்றும் திறன் கொண்டவை. மனிதனின் எண்ணம் மற்றும் மனவெழுச்சி இரண்டும் நேரடியாகவும், மறைமுகமாகவும் மரபணுக்க ளின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதே போல் ஒருவருடைய நடத்தை, மூளை மற்றும் உடலுறுப்புக் களில் பலவகை மரபணுக்களைச் செயல்படச் செய்வதோடு, மரபணுக்களின் செயற்பாடுகளை நிறுத்தவும் செய்கின்றன. இவ்வரிசையில், தற்கால நவீன மரபணு மாற்று உற்பத்தி களின் நுகர்வு தொடர்பாக நோக்க வேண்டியதன் தேவை அவசியமாகவுள்ளது.



## மரபணு மாற்றுப் பயிர்கள்

மரபணு மாற்றுப் பயிர் (genetically modified crops) என்பவை மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் மூலம் உரு வாக்கப்பட்ட பயிர்வகைகளாகும். ஒரு விதையின் அடிப் படைப் பண்புகளை மாற்றாமல், அதன் மூலக்கூறுகளில் மட் டும் சில மாற்றங்களைச் செய்து அதன் செயற்திறனை அதி கப்படுத்துவதே மரபணு மாற்ற தொழில்நுட்பம் ஆகும். மரபணு மாற்றப்பட்ட உயிரினங்களின் டி.என்.ஏயில் மரபணு பொறி யியல் மூலம் குறிப்பிட்ட மாற்றங்கள் உருவாக்கப்படுகின் றன. இதன் முக்கியமான நோக்கம், குறிப்பிட்ட ஒரு இனப் பயிரில் இயற்கையாக இல்லாத ஒரு புதிய இயல்பை அந்தப் பயிரில் புகுத்துதல் ஆகும். இவற்றில் உணவுப் பயிர்களும், உணவல்லாத வேறு உற்பத்திப் பொருள்களுக்கான பயிர்க ளும் (மருந்துப் பயிர், உயிரி எரிபொருள் பயிர்) அடங்கும். இவ்வகைப் பயிர்கள் 1990 களிலிருந்து சந்தைக்கு வர ஆரம் பித்தன. குறிப்பாக சோயா, அவரை, தக்காளி, விதை அற்ற முந்திரி, கடுகு, பருத்தி விதை, எண்ணெய் என்று மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் உற்பத்திகள் சந்தைக்கு வர ஆரம்பித் தன. இந்த மரபணு மாற்றத்திற்குக் காரணங்களாக பூச்சி எதிர்ப்பு, நோய் எதிர்ப்பு, ஊட்டச்சத்து அதிகரிப்பு, விளைச்சல் அதிகரிப்பு, வரட்சி மற்றும் உப்புத் தன்மையைத் தாங்கிய நிலையிலும் பயிர் வளர்தல் போன்றவை கூறப்படுகின்றன. தோல் தடிமனான, சதைப்பற்றான தக்காளி கிடைக்க, அதில் உருளைக்கிழங்கின் மரபணுக்களை கலந்திருக்கின்றனர். பின்னர் விலங்குகளிலும் இம்முறை கையாளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, 2006ஆம் ஆண்டு பன்றி ஒன்றிலிருந்து மோதிரப்புழு (அல்லது வட்டப்புழு) மரபணு கொண்டு ஒமேகா – 3 கொழுப்பு அமிலம் சுரக்கச் செய்தது பெரும் சர்ச்சைக்குள்ளானது.

## மரபணுமாற்றப்பட்ட காய்கறிகளுக்கும் சாதாரண காய்கறிகளுக்குமான வேறுபாடு


அளவுக்கு மீறின் அமுதமும் நஞ்சென் பதைப்போல மரபணு மாற்றப்பட்ட பயிர்களிலிருந்து பெறப்படும் உண வு மற்றும் ஏனைய நுகர்வுப் பொருள்க ளானது குறைவான காலத்தில் நிறைவான இலாபத்தைப் பெற்றுத்தருவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டாலும், வழமையான முறையினால் பெறப்படும் உண விலிருந்து மாறுபட்டு மனிதர்களுக்கு அதிக உடல்நலத் தீங்குகளை தருவதோடு, இத் தொழில்நுட்பத்தின் அளவுக் கதிகமான பயன்பாடானது விவசாயிகளுக்கு சில சூழலியல் சீர்கேடுகளையும் ஏற்படுத்துகின்றது. அதாவது, மரபணு மாற் றப்பட்ட பயிர்கள் மண்ணுக்கும் நிலத்தடி நீருக்கும் மற்றும் சுற்றியுள்ள பயிர்கள், உயிரினங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகியவற்றுடன் சுற்றுச்சூழலுக்குச் சேதம் விளைவித்து அவற்றை நஞ்சாக்கி விடுமளவுக்கு அபாயகரமானவை. இத் தோடு, ஒரு முறை பயிரிடப்பட்ட பின்னர் அவற்றை கட்டுப் படுத்த முடியாமல் விரிந்த அளவில் பரவிவிடக்கூடியவை. இப்படிப்பட்ட விளைவுகள் காரணமாக உலகில் பல நாடுகளில் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அங்கு அவற்றை களப் பரிசோதனைக்குக் கூட பயன்படுத்த முடியாது.



## மரபணு மாற்றப்பட்ட உற்பத்தி களால் உருவாகும் சீர்கேடுகள்

மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் நிச்சயம் பாதுகாப்பானவை அல்ல. இந்தியாவில் அதி கம் பயிரிடப்பட்ட மரபணு மாற்றம்செய்யப் பட்ட பருத்திவிதைகள் ஏற்படுத்தும் பிரச்சி னைகள், தற்போது பரவலாகக் கவனத்துக்கு வந்துள்ளன. விவசாயிகள் தற்கொலை முதல், மண் மலடாதல், சுற்றுச்சூழல் சீர்கேடு, தேனீக் கள் மறைவு, விலை வீழ்ச்சிவரை பல்வேறு சிக்கல்கள் ஏற்படக்காரணமாகயிருந்தன. அத்துடன் வேறுபட்ட உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு இம்மரபணு உற்பத்திகள் காரணமாகவுள்ளன. இதுபற்றி இந்தியாவில் 400இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின் தொகுப்பு ஒரு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.





மரபணுக்கள் பிழையான செய்முறை குறிப்புகளை வெளிப்படுத்துவதன் பின்விளைவாக உடல் செல்கள்(CELLS) முறைகேடாகச் செயற்படுகின்றன. டி. என். ஏ. சிதைவால் பல் வகை மரபணுக்களும் சிதைவதால், செல்களிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. கூடுதலாக கலோரி சக்தியைக் கொடுக்கக்கூடிய மாவுப்பொருள்கள் மற்றும் சர்க்கரை உணவுகளை அதிகம் உண்பதால், இரத்தத்தில் குளூகோஸ் மற்றும் இன்சுலின் அளவுகளும் உயர்கின்றன. இதற்கிடையில் இன்சுலின் அளவு உயர்வதால், பலவகை மரபணுக்கள் தூண்டப்பட்டு செயல்படுகின்றன. இந்த மரபணுக்கள், அழற்சி மற்றும் மன அழுத்த ஹார்மோன் ஆகியவற்றை பெருமளவில் உருவாக்கி விடுகின்றன. இதே மரபணுக்கள் உடலில் ஏற் படும் புண்கள் நச்சுயிரித் தொற்று மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றின் தாக்கத்தாலும் செயல்படுகின்றன. உடலில் நச்சுயிரித்தொற்று தடுப்புக்கும், நோய் குணமாகவும் குறைந்த காலம் அழற்சி தேவை என்றாலும் உடலில் ஆன்டியாக்சிடண் டுகளும், அழற்சி தடுப்பாற்றல் மிக்க ஒமேகா – 3 இன்றிய மையா கொழுப்பு அமிலங்களும் குறைந்து, பற்றாக்குறை ஏற்பட்டால் அழற்சி நீடித்து, உடலில் பலவகை சீர்கேடுகள் உருவாகும்.

வயிற்றுப்பகுதியில் பெருமளவில் கொழுப்பு செல்கள் உருவாகி உடல் பருமன் நோயை வளரச்செய்கிறது. உடல் முதிர்ச்சி சார்ந்த மரபியல் சிதைவுகளால் உடலில் ஊட்டச் சத்துகளைப் பயன்படுத்தும் செய்முறை குறைகிறது. இதன் விளைவால், உடல் நோய் எதிர்ப்பு இயக்கத்திறன் குறை வடைந்து தொற்றுநோய் கட்டுப்பாடு சீர்குலைகிறது என பல இந்திய ஆய்வு வெளியீடு மற்றும் கட்டுரைகள் கருத்துக்களை பரிமாறியுள்ளன.

## மரபணு மாற்று உற்பத்திகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சில யோசனைகள்

* மரபணு மாற்றப்பட்ட பயிர்களினால் ஏற்படும் பாதிப் புக்களையும் பாரம்பரிய பயிர்களின் பாவனையினால் ஏற் படும் நன்மைகளையும் பற்றிய தெளிவினை மக்களுக்கு எடுத்துரைத்தல். (சுகாதார, மருத்துவ நிறுவனங்கள், அரசு மற்றும் விழிப்புணர்வுக் குழுக்கள்)
* பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் இது தொடர் பாக பாடத்திட்டங்களில் உள்ளடக்கப்படல்.
* அரசு மரபணு உற்பத்தி தொடர்பிலான கொள்கை களையும் சட்ட திட்டங்களையும் வகுத்தல்.
* வெளிநாடுகளிலிருந்து மரபணு உற்பத்திகளை இறக் குமதி செய்வதை தடை செய்தல்.
* அரசாங்க கொள்கைத் திட்டங்களை அமைத்து அதன் பிரகாரம் மக்களுக்கு பாரம்பரிய பயிர்களையும் அதன் விதை களையும் மானிய அடிப்படையிலும் இலவசமாகவும் வழங்கு தல் ( திவி நெகும )
* பாரம்பரிய பயிர்ச்செய்கை விவசாயிகளை ஊக்குவித்தல்.
* சிறு வீட்டுத் தோட்டங்கள் உட்பட மக்கள் தம் வீட்டு சுற் றுப்புறச் சூழலில் பாரம்பரிய பயிர்களை நடுதல்.
* பெரிய விவசாய நிலப்பரப்புக்களிலும் மரபணு மாற்றப் பட்ட பயிர்களுக்குப் பதிலாக மரபு ரீதியான பயிர்களை செய்கை பண்ணுதல்.
* பாரம்பரிய பயிர்களின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத் தல். அதன் சூழல் நேயத் தன்மையின் அவசியத்தினையும் விழிப்புணர்வூட்டல்.
* சந்தைகளிலும் விற்பனை நிலையங்களிலும் பாரம்பரிய பயிர்களை விற்பனை செய்தல்.
* பாரம்பரிய பயிர்களின் விலைகளில் அனைவரும் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் விலையினை ஏற்படுத்தல்.

# ஆரோக்கியம் தரக்கூடிய மீன்



ஒருவர் சாப்பிடும் உணவில் மிகவும் ஆரோக்கியம் தரக்கூடிய உணவு மீன். இதில் விற்றமின் - மற்றும் விற்றமின் ய 12 போன்று ஏராளமான நியூட்ரியன்ட்கள் நிறைந்துள்ளன. இவை இரண்டும் பெரும்பாலான மக்களுக்கு மிக குறைவாக இருக்கிறது.

இதுதவிர மீன்களில் நல்ல கொழுப்பு மற்றும் அதிக புரோட்டீன் நிறைந்துள்ளன. மீன்களை சாப்பிட்டு வந்தால் இதய ஆரோக்கியம் மேம்படும். மேலும் இது உடலின் நோய் எதிர்ப்பு திறன், மூளை வளர்ச்சி மற்றும் அனீமியா உள்ளிட்டவைகளுக்கும் சிறந்தது.

## மீன் வடை

மீன் வடையின் சுவை அலாதியானது. அதிகம் முள் இல்லாத மீன்தான் வடை செய்ய ஏற்றது.

**தேவையான பொருள்கள்**

மீன் துண்டுகள் - 500 கிராம்
முட்டை - 1
உருளைக்கிழங்கு - 100 கிராம்
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
பச்சைமிளகாய் - 3
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - பொரிக்க

**செய்முறை**

மீனை கழுவி சுத்தம் செய்து தாச்சியில் சிறிதளவு நீர்விட்டு வேக வைக்கவும். பின்னர் அதை எடுத்து முள், தோல் நீக்கி நன்கு பிசையவும்.

உருளைக்கிழங்கை வேகவைத்து, தோல் உரித்து நன்கு மசிக்கவும்.

வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக வெட்டவும்.

மீன், உருளைக்கிழங்கு, மிளகாய்த் தூள், வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு, முட்டை எல்லாம் சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும்.

எண்ணெயைக் கொதிக்க வைத்து சிறுசிறு வடைகளாகத் தட்டிப் போட்டு பொன்னிறமாக சிவந்ததும் எடுக்கவும். ருசியான மீன் வடை தயார். இதை தோசைக்கல்லில் தட்டி வைத்து கட்லெட் போலவும் செய்யலாம்.





● யதினா

## பிரியாணி செய்யும் முறை



**தேவையான பொருள்கள்:**

பாசுமதி அரிசி - 1/2 கிலோ
மாமிசம் - 1/2 கிலோ
பெரிய வெங்காயம் - 150 கிராம்
தக்காளி - 150 கிராம்
எண்ணெய் - தேவையான அளவு
நெய் - 1/4 போத்தல்
தேங்காய் - பெரியது 1
சிவப்பு மிளகாய்த் தூள்
பச்சை மிளகாய் - 10
இஞ்சி - 15கிராம்
பூண்டு - பெரியது 1
சின்ன வெங்காயம் - 25 கிராம்
பட்டை, கிராம்பு, சோம்பு, லவங்கம் - தாளிக்கத் தேவையான அளவு
மஞ்சள் தூள் - கொஞ்சம்
உப்பு - தேவையான அளவு
கருவேப்பிலை மற்றும் அலங்கரிக்க கொஞ்சம் முந்திரிப் பருப்பு

**செய்முறை**

முதலில் அரிசியை ஒரு அரை மணி நேரம் ஊற வைத்துக்கொள்ளவும். மாமிசத்தை லேசாக உப்பும் கொஞ்சம் மிளகாய்த் தூளும் போட்டு அரை வேக்காடாக வேக வைத்துக்கொள்ளவும். தேங்காய்ப் பால் எடுத்து வைத்துக் கொள்ளவும். பெரிய வெங்காயத்தையும் தக்காளியையும் சிறிதாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். இஞ்சி, பூண்டு மற்றும் சின்ன வெங்காயத்தை விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

அடுப்பில் பாத்திரத்தை வைத்து அதில் எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் அதில் பட்டை, கிராம்பு, லவங்கம், சோம்பு போட்டு தாளித்துக்கொள்ளவும். இஞ்சி, பூண்டு மற்றும் சின்ன வெங்காய விழுதை அத்துடன் சேர்த்து லேசாக வதக்கியபின், அரிந்து வைத்துள்ள வெங்காயம் மற்றும் தக்காளி சேர்த்து வதக்கவும்.

அரிசியின் அளவைப்போல் இரு மடங்கு தண்ணீர் தேவைப்படும். எனவே தேங்காய்ப்பால், மற்றும் மாமிசம் வேக வைத்த தண்ணீருடன் எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அவ்வளவு தண்ணீர் சேர்த்து பாத்திரத்தில் ஊற்ற வேண்டும். எல்லாம் சேர்த்து மொத்தம் இரு மடங்கு தண்ணீர்தான் இருக்கவேண்டும். அதில் மாமிசத்தையும் ஊற வைத்த அரிசியையும் நீரை வடித்துவிட்டுப் போடவும் . அத்துடன் மீதமுள்ள மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் போட வேண்டும். மாமிசத்துடன் சிறிது உப்பு சேர்த்திருப்பதால், உப்பை அளவு பார்த்து போடவேண்டும். இப்போது பாத்திரத்தை மூடி 15 நிமிடம் அடுப்பில் வைக்கவும். பிறகு அடுப்பை அணைத்துவிட்டு 10 நிமிடம் கழித்து திறந்து அதில் கருவேப்பிலை மற்றும் நெய்யைச் சூடு பண்ணி அதில் ஊற்றிக் கிளறி இறக்கவேண்டும். கொஞ்சம் முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்துப் போட்டுக்கொள்ளலாம். சூடான பிரியாணி தயார்.

**தம் பிரியாணி செய்யும் முறை**

இந்த முறையில் மேற்சொன்னபடி பொருள்களைக் கலக்க வேண்டும். விறகு அடுப்பை எரியவிட்டு, அதில் பாத்திரத்தை வைக்க வேண்டும். அனைத்துப் பொருள்களையும் கலந்தபின் 10 நிமிடம் மிதமான தீயில் கொதிக்க விட வேண்டும். நன்கு கொதித்து வருகையில் ஒரு தட்டு போட்டு பிரியாணி வேகும் பாத்திரத்தை மூடி அந்த தட்டில் அடுப்பை அணைத்துவிட்டு அந்த தணலை அள்ளிப்போட வேண்டும். கீழே தீ இருக்கவேண்டிய அவசியமில்லை. அதேநேரத்தில் மேலிருத்து உஷ்ணம் கிடைக்க வேண்டும். 20 நிமிடம் கழித்து திறந்து பார்த்தால், பிரியாணி உதிரியாக வந்திருக்கும். அதில் கருவேப்பிலை போட்டு சூடு பண்ணிய நெய் ஊற்றிக் கிளறி இறக்கவேண்டும். கொஞ்சம் முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்து சேர்த்துக்கொள்ளலாம். தம் பிரியாணியின் சுவையும் அலாதியானது.

## சுண்டங்காய்/ சுண்டைக்காய் குழம்பு

**தேவையானவை**

பச்சை சுண்டைக்காய் - ஒரு கப்,
சின்ன வெங்காயம் - ஒரு கப்
தேங்காய் துண்டுகள் - 2
பூண்டு - 2 பல்
கீறிய பச்சை மிளகாய் - 1
மஞ்சள்தூள் - அரைக் கரண்டி
குழம்பு பொடி - 2 கரண்டி
புளி - நெல்லிக்காய் அளவு
கடுகு - அரை கரண்டி
உளுத்தம்பருப்பு - அரை கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - 2 கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**


பூண்டு, வெங்காயம், தேங்காயை பொடியாக நறுக்கவும். சுண்டைக்காயை காம்பு நீக்கி, கழுவி, மத்தால் லேசாக நசுக்கிக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு போட்டு தாளித்து வெங்காயம், பூண்டு, கீறிய பச்சை மிளகாய், தேங்காய் சேர்த்து வதக்கி, சுண்டைக்காயைப் போட்டு நன்றாக வதக்கவும். இதில் மஞ்சள்தூள், உப்பு, குழம்பு பொடி போட்டு, புளியைக் கரைத்து ஊற்றி (காரம் தேவைப்பட்டால் மிளகாய்த்தூள் சேர்க்கலாம்), சுண்டைக்காய் வேகும் வரை கொதிக்க வைத்து, கறிவேப்பிலை சேர்த்து இறக்கவும்.



## இலக்கிய நயம்

# காதல் பேசியது போதும் பிறகு பேசலாம்

● யாழ். மகள் சைந்தவி



காதலன் காதலி சந்திப்பு மிகவும் ரம்மியமானது, சிருங்காரச் சுவை உடையது. காதலிக்கும் போது காதலன் காதலி சந்திப்பு பல மணிநேரம் நிகழ்ந்தாலும் ஒரு சில வினாடிகளில் கழிந்தது போல் ஒரு மாயத்தோற்றத்தை நமக்கு கொடுக்கிறது. பேசப் பேச இனிக்கிறது. சீ, ரொம்ப மோசம், அப்புறம், அப்புறம் என்று ஒன்றும் இல்லை என்றாலும் நான்கு மணி நேரம் ஆனாலும் சுவையாக பேச முடிகிறது. இப்படி ஆள் இல்லாத இடத்தில் தலைவனை காண வந்த தலைவியின் தோழி, தலைவனுக்கு கூறும் பாடல், காலையில் ஆரம்பித்த உங்கள் சந்திப்பு மாலை வரை தொடர்கிறது, நேரம் ஆகி விட்டது, பொழுது சாய்ந்து விட்டது, நீங்கள் பேசியது போதும் பிறகு பேசலாம், நாங்கள் செல்ல வேண்டும் என்று கூறும் அழகான பாடல். இன்று கூட காதலிக்கும் தோழியரைப் பார்த்து அவர்களின் தோழிகள் கேட்கும் கேள்வி அப்படி என்னத்த தான் பேசுவீங்களோ, எப்பவும் போனும் கையுமா இருக்கிறாய், இது சரியில்லை. அது போல் இருக்கும் ஒரு பாவனையில் எழுந்த பாடல்தான் இது .

**நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி,**
**நின்குறி வந்தனென் இயல் தேர்க் கொண்க!**
**செல்கம் செல வியங்கொண்மோ - அல்கலும்,**
**ஆரல் அருந்த வயிற்ற**
**நாரை மிதிக்கும், என் மகள் நுதலே**

அதாவது – கடற்கரையில் நெய்தல் மலர் கிடத்தி என் பொம்மையை வைத்து விட்டு உன்னை சந்திக்க வந்திருந்தாள் என் தலைவி, அழகிய தேரை உடைய தலைவனே, என் மகள் போல் நான் பாவிக்கும் பொம்மையின் நெற்றியை ஆரால் மீனை நன்கு உண்டு வயிறு பெருத்த நாரை மிதித்து விடும், பொழுது சாய்ந்து இருட்டி விட்டது, நான் புறப்படுகிறேன் அவளை என்னுடன் அனுப்பிவிடு என்கிறாள்.

பொம்மையை தன் மகள் என்று கூறுவது, பெண்கள் பாவை பொம்மையை தங்கள் குழந்தையாக வைத்து விளையாடும் பழக்கம் இருப்பதையும், தலைவியை பொம்மையாக கருதுவதையும் இந்தப் பாடல் அழகாகக் கூறுகிறது. உவமை நயம் உள்ள வரிகள். பொம்மையை அழிக்கும் நாரை போல், பொழுது சாய்ந்ததால் தலைவியின் பெண்மையை தலைவன் அழிக்கும் முன்னர் அவளை திரும்ப அழைக்கும் தோழியின் பயத்தை வெளிப்படுத்தும் பாடல்.

காதல் வந்தால் எவ்வளவு கஷ்டம், பார்க்காமல் இருந்தாலும் கஷ்டம், பார்த்து கொஞ்சம் நேரம் பேசினாலும் கஷ்டம்.

---

## சிறுகதை

ஏ.ரா.சுமி

# கடைசிச் சுற்று

மண்வாசனை மிக்க என் தேசத்து மண்ணை நேசிக்காதவர் எவருமில்லை.

வந்தாரை வாழவைக்கும் வாழ்வதற்கு வழிவகுக்கும் வளங்கள் நிறையப் பெற்ற நகரம் தான் என் திருகோணமலை. மண்ணின் மணம் சொல்லும் மக்களின் வாழ்வியலை என்பதற்கு அமைவாக முப்புறமும் கொட்டிக் கிடந்த வளங்கள். நானிலம் போற்றும் நிலச்சிறப்பைக் கொண்ட நகரம். கடலும், மலையும், வயலும், காடும் என எங்கு திரும்பினாலும் எழில் கொஞ்சும் அழகும், எடுக்க எடுக்கக் குறையாத வளமும். இங்கிருந்து வந்தவராயினும் இங்கிருந்து வெறுங்கையோடு சென்றதில்லை. காரணம் மண்ணின் மகிமை அது. இராவணேசனே இரசனையோடு சிவனை தன்வசப்படுத்திய தேசமது.

ஆர்ப்பரிக்கும் அலைகடலை ஆட்கொண்ட ஈசனவன் வீற்றிருக்கும் தேசமதில் வறுமைக்கு இடமில்லை. வாழத் தெரியாதவனையும் வளத்தோடு கற்றுக் கொடுக்கும் புண்ணிய பூமியில்தான் வாழ்வதற்கு வரம்கேட்டு வந்தமர்ந்தனர் சிவனேசனும் அவன் குடும்பமும். சிவனேசனுக்கும் சிவமதிக்கும் தெரிந்த தொழில் என்றால் மட்பாண்டத் தொழில்தான். அவர்களின் தொழிலுக்கேற்ப மண்ணும் மணமும் அவர்களை அன்போடு வரவேற்று வாழ்வதற்கும் வழியமைத்துக் கொடுத்தது. அவர்களின் தொழிலுக்கு இந்த வாசனைமிக்க மண்ணே மகத்துவமாய்த் தெரிந்தது. அழகழகாய், விதவிதமாய், அளவளவாய் தமக்குத் தெரிந்த அத்தனை கைவினைப் பொருள்களையும் அழகோடும் மிடுக்கோடும் செய்து செய்து சந்தைகளிலும், சிறு கடைகளிலும் விற்பனைக்கு உடனுக்குடன் அனுப்பி வைத்தனர்.

அவர்களின் வாழ்வும் வசந்தமாய்க் கழிந்தது. அவ்வப்போது அவர்களின் ஒரே மகனும் சாந்தன் பாடசாலை முடிந்ததும் அப்பாவுடன் மட்பாண்டத் தொழிலுக்கு உதவி வந்தான்.

ஆனால் அவனுக்கு மட்பாண்டங்களில் இதுவரை கையுக்குச் சரியாக வனையவராத ஒரே வடிவம் முட்டி ஒன்று தான். அதன் கழுத்தை அவனுக்கு உயர்த்தி வனைவது கொஞ்சம் கடினம். அதற்காக அப்பாவிடம் அடிக்கடி திட்டு வாங்கியதும் உண்டு. எத்தனையோ முறை அப்பா அவன் கைகள் பிடித்து வனைந்தும் காட்டி விட்டார். தலையில் குட்டியும் கற்றுக் கொடுத்து விட்டார்.

பாடசாலை விடுமுறை வாரமொன்றில் அப்பாவுடன் இணைந்து சாந்தன் முழுமூச்சாய் முட்டி செய்வதற்கு பல முயற்சிகள் செய்தான். உரு வாரம் முழுவதும் அப்பாவின் கைகள் மண்ணைப் பிடித்து, இலாவகமாய் வளைத்துப் பிடித்து, தடவிக் கொடுத்து வழித்துத் துடைத்து, இரசனையோடு கடினமேதுமின்றி வனைந்து ஓவியம் போல் உயிரூட்டும் அழகை மட்டும் கண்ணிமைக்காது பார்த்து மனதுக்குள் வனைந்து கொண்டான்.

ஒருவாரம் முடிந்ததும் அப்பா சாந்தனைப் பார்த்து.... இந்த மண்ணில உனக்கு பானை,முட்டி சரியா வருதில்லண்ணா வேற எந்த மண்ணிலயும் உனக்கு வராதடா கடைசில என் சாவுல காரியம் பண்ணக்கூட அடுத்தவன் செஞ்ச முட்டிய காசு கொடுத்து வாங்கி வந்துதான் என் பிணத்தில உடைப்பாய் போல...ச்சே .... என்று சற்றுக் கடுமையாகச் சொல்லிவிடு, நெற்றியில் வழிந்த வியர்வைத் துளிகளை விரல்களால் வழித்து நிலத்தில் சிந்திவிட்டு வீட்டுக்குச் சென்று விட்டார்.

சற்று ரோசம் வந்தவன் போல், மண்ணையும், அப்பாவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு அப்பா எழுந்து சென்று அந்த பலகையில் பெருமூச்சோடு அமர்ந்தான்.

அப்பா குழைத்து வைத்துவிட்டுச் சென்ற செம்மண்ணின் வாசனை அவனை முறைத்துப் பார்த்தது. இன்று நீ என்னைத் தொட்டால் என்னை முழுமையாக முட்டியாக உருப்படுத்தாமல் எழக்கூடாது என்பதுபோல் ஆணையிட்டது.

தன்னை ஒருகணம் சுதாகரித்துக் கொண்டு, அப்பாவின் காட்சிகளை கண்முன்னே நிறுத்தி, அப்பாவைப் போல் இலாவகமாய் மண்ணை அள்ளி அச்சிலிட்டு அதேபோன்று மெதுவாய், மிருதுவாய் அழகாய் வளைத்து நிமிர்த்தி வனையத் தொடங்கினான். என்ன ஆச்சரியம்... அப்பாவின் வனைதலைப் போல் அப்படியே அழகாய் ஒரு முட்டியை வனைந்து முடித்திருந்தான். அவனுக்குள் அத்தனை மகிழ்ச்சி. நம்பிக்கை, உற்சாகம் பிறந்தது. அப்பாவிடம் ஓடிச்சென்று சொல்ல வேண்டும், காட்ட வேண்டும் என்று கைகளைக் கழுவ எழுந்தவனை....

ஐயா! சாந்தன்.... ஓடிவாடா!

அப்பா உன்னக் கூப்பிடுறார்...

மூச்சு முட்டி உன்னக் கூப்பிடுறார்....

என்னாச்சின்னே தெரியலடா...


என்று அம்மா தலையிலடித்துக் கதறியவாறு கூக்குரலிட்டபடி பதறியடித்து ஓடி வந்தார்.


அதிர்ந்து போன சாந்தன் அம்மாவையும் இழுத்துக் கொண்டு வீடுநோக்கி ஓடினான். அப்பாவின் கரங்களைப் பற்றி தூக்க முற்பட்டவனின் கரங்களில் காயாமல் கிடந்த களிமண்ணின் ஈரத்தை தன் மார்பிலே வைத்து சாந்தனின் முகத்தைப் பார்த்து ஒரு பெருமூச்சோடு கண் மூடி சாந்தனின் பற்றி கரங்களோடு அடங்கிப் போனது அப்பா சிவனேசனின் மூச்சு.

# கலைக் கதிர்



# பால.சுகுமாரின் இரு நூல்கள்




## நூல் பார்வை

திருகோணமலை சேனையூரில் பிறந்து தற்போது புத்தளத்தில் வசித்து வரும் கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட முன்னாள் பீடாதிபதி பால.சுகுமார் அவர்களின் இரு நூல்கள் அண்மையில் வெளியாகியிருக்கின்றன. இலக்கிய வெளியினை அதிகமதிகம் புனைவு பிரதிகளே ஆக்கிரமித்திருக்கும் சூழலில் இவர் தொகுத்திருக்கும் இந்த நூல்களின் முக்கியத்துவம் குறித்து நோக்குகையில், ஈழத்து இலக்கிய உலகின் தவிர்க்க முடியாத ஆளுமைகளான மல்லிகை ஜீவா என்றழைக்கப்படும் டொமினிக் ஜீவா மற்றும் வ.அ. எனப்படும் வ.அ.இராசரெத்தினம் ஆகிய இருவர் பற்றியும் இந்த நூல்கள் பேசுவதனால் இவைகள் நினைவிடை தோயும் பிரதிகளாகின்றன.

மல்லிகை ஜீவா குறித்த பிரதியானது டொமினிக் ஜீவா ;நம்பிக்கையின் பாதை என்ற பெயரில் வெளியாகியுள்ளது. இந்த நூலில் அமரர்.ஜீவா குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியாகிய பதிவுகள் பால.சுகுமார் அவர்களினால் தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்து இலக்கிய வரலாறு குறித்து பேசுகையில் மல்லிகை ஜீவா அவர்களை தவிர்த்து பேச முடியாது. பல்வேறு இடர்கட்கு மத்தியில் தனது சஞ்சிகையான மல்லிகையினை நானூற்றொரு இதழ் வரைக்கும் தொடர்ந்தவர் அவர்.

ஈழத்து இலக்கியப் பரப்பிலே மல்லிகையின் பாத்திரம் மிகவும் கனதியானது. பல்வேறு இலக்கியவாதிகளுக்கு களம் தந்த இது எத்தனையோ எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளது. பிற்காலத்தில் மல்லிகை சிறுகதைகள் போன்ற தொகுப்புக்களும் வெளியாகினவெனில் இந்த அத்தனை பெருமைகளும் ஒற்றை மனிதராக மல்லிகை காலத்தை சிருஷ்டித்த ஜீவாவினையே சேரும். இவர் வெறுமனே பேனா போராளியாய் மட்டுமன்றி சமூக விடுதலைக்காக உழைத்த ஒருவருமாக இருப்பதால் பாரதியின் வரிசையில் வைக்கப்பட வேண்டிய ஒருவருமாகிறார்.

தனது சிறுகதை தொகுதியான தண்ணீரும் கண்ணீரும் இற்காக சாகித்ய மண்டல பரிசு பெற்ற அமரர்.மல்லிகை ஜீவா குறித்து பால.சுகுமாரின் கருத்து இவ்வாறாகிறது.

ஈழத்து இலக்கிய உலகம் இனி இவர் போல் ஒருவரை காண முடியுமா என்றால் நிச்சயமாக இல்லை என்பதே சரியான பதில். ஓர்மம் மிக்க படைப்பாளி,தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தன் தனித்துவ முத்திரை பதித்த தகைசார் பெரியோன்.

படைப்பாளி இறப்பினும் அவன் படைப்புக்களால் பேசப்படுவான் என்ற கூற்றிற்கு கிழக்கு கரையின் சிறந்த உதாரணமாக மிளிரும் வ.அ.இராசரெத்தினம் அவர்களின் நினைவினை சுமந்து வெளியாகியுள்ளது இலக்கிய கலாநிதி வ.அ. இருபதாவது ஆண்டு நினைவில் எனும் நூல்.எமது முற்றத்து மல்லிகைகளின் வாசம் எம்மால் நுகரப்படுவதில்லை என்பது வேதனையான உண்மை. ஆனால் உண்மையான படைப்புக்கள் காலம் மற்றும் மொழி தாண்டி வியாபித்து நிற்கும் என்பதற்கு உதாரணமாக இவரின் பிரபல்யமிக்க சிறுகதையான தோணியினை கூறலாம். திருகோணமலை மண்ணுக்கு முதன்முதலில் சாகித்ய மண்டல பரிசினைப் பெற்று தந்த இந்த படைப்பு இதுவரைக்கும் பதினேழு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.எமது நாட்டின் உயர்தர கலைப்பிரிவின் தமிழ் மொழி பாடத்திட்டத்திலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த நூலானது வ.அ.குறித்து பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகள் மற்றும் கவிதையுடன் வ.அ.அவர்கள் எழுதிய இரு சிறுகதைகளான தோணி மற்றும் தெய்வம் ஆசி வழங்குகிறதுஎன்பவற்றையும் அத்துடன் வ.அவின் இறுதிக்கடிதத்தையும் கொண்ட தொகுப்பாக இருக்கிறது.

இவர் குறித்தான தொகுப்பாசிரியரின் குறிப்பு இவ்வாறாக இருக்கிறது. வாழ்வின் வாசத்தை அதன் முரண்களை சொல்லும் திறனில் இலக்கியங்களாய் நாவலாயும் சிறுகதையாயும் மண் வாசம் மயங்கி கிடந்தது. எவர் விமர்சனத்தையும் பொருட்படுத்தாத தன் எழுத்தில் நம்பிக்கை கொண்டு பயணித்த புதுமை விரும்பி அவர்.

பேசப்பட்ட வேண்டியோரும் இளைய தலைமுறையினருக்கு அதிகமதிகம் பகிரப்பட வேண்டியதுமான இந்த இரு ஆளுமைகள் குறித்த நூல்களை வெளியிட்டிருக்கும் பீடாதிபதி பால.சுகுமார் அவர்களின் பணியானது ஞாலத்தின் கண் பெரியது என்றால் அது மிகையல்ல.

**- லலிதகோபன் -**
**திருகோணமலை**

## துணிச்சற்காரன்

**- ஷேதா மோகன் -**

**நாம் தேசக்காவலர்கள்**
**மனிதாபிமானத்தின் வயிற்றில்**
**கருவான குழந்தைகள்**
**நீதி பிழைத்ததில்**
**கண்ணகி அக்கினி முலை திருகி**
**எறிந்ததில் சிதறிய தசைத்தூள்கள்**
**சட்டம் குற்றம் செய்தால்**
**தண்டிக்கத்தவறாத**
**மன்னர்கள்**
**சமுதாயத்தின்**
**சம எடை காட்டும்**
**தராசு முட்களும் நாம்**
**எம் கோபம் சிதறும் மை**
**அடங்கா அரக்க மனிதர்களை**
**அழிக்கும் உண்மையின் தீயும் நாம்**
**கலாசாரங்களை**
**விழுங்கும் மனிதர்களை**
**கருக்க தணல் கக்கும்**
**பேனை முனைகளும் நாம்**
**மோசேயின் கைத்தடியும்**
**பாண்டவர்களின் காண்டீபமும் நாம்**
**வசந்த காலத்தின் தென்றலும்**
**வறிய மனிதர்களின்**
**சினேகிதாகளும் நாம்**
**பெண் அங்கங்களையே**
**பேசும் சில பேனைகளை**
**பெயர்க்க துணிந்தவர்களும் நாம்**
**அநீதிகளைக் கண்டு**
**கொந்தளித்து குமுறும் போது**
**திறக்கப்படும் எம் நெற்றிக்கண்கள்தான்**
**கவிதைகள்**
**எங்களைத் தெரிகிறதா**
**நாங்கள்தான் கவிதை என்னும்**
**ஆயுதம் ஏந்திய**
**கவிஞர்கள்.**

## காட்சி

**- திருமலை சிட்டு -**

**வரைபடமாய் விரியுது**
**புலன்களின் தேடல்**

**இறுதிச் சொட்டு தேநீராய்**
**தீர்ந்து விடாது போகட்டும்**
**தேடலுக்கான சுவை**

**அரிச்சுவடி அறியாத**
**புது வீரன்**
**புதிய களம்**

**நெஞ்சில் திடம் இருந்தும்**
**அம்பு தடுமாறுது**
**மஞ்சத்தில் ஏறி**

**புறப்பட்டு விட்டான்**

**சமவெளிகளையே காணாதவன்**
**மலை முகடுகளில்**
**முட்டி வீழ்கின்றான்**

**புரண்டு எழுந்தவன்**
**மிரண்டு நிற்கின்றான்**

**எய்வது ஓர் கலை**
**எழுவது ஓர் நிலை என**
**உணர முனைகையில்**

**புவிச்சரிதவியல் புரியாமல்**

**விறைத்து நிற்கின்றான்**

**நெட்டாங்கு அகலாங்கு**
**தேடி நெடுந்தூர பயணம்**


**நட்டாற்றில் வீழ்ந்து போகின்றான்**
**நாயகன்**
**நா -வறண்டு**

**துடுப்பின் வலிமையே இனி**
**அவனுக்கு துணை**

**மீண்டு வருவானா**
**விஜயன்**

## மலை அருவி

**- கேணிப்பித்தன் அருளானந்தம் -**




மலையில் இருந்து வழியும் நீரும்
வழியை அமைத்துத் தன்வழி தேடும்
கிளைபல பிரிந்து தூறலாய் பரவும்
சிலைகளாய் சிரிக்கும் தாவரம் சிலிர்க்கும்!

பலவகை மரங்களும் கொடிகளும் சுற்றிப்
பிணைந்து ஒன்றுக்கொன்று ஆதரவாகிடும்

மலர்கள் மலரும் வாசம்பரவ வண்டும் தேடும்
மலைதனைப் பிளந்து நீரும் ஊற்றாய்பாயும்!

கலைமகள் சிரிப்பாள் காற்றில் மேகம்
கலைந்து விரையும் கருக்கொண்டு திரளும்
மலைமகள் நனைவாள் குளிரால் மகிழ்வாள்
மலையோரத் தாவரம் மகிழ்ந்து குலாவும்!

பூக்களில் மகரந்தம் பொதும்பரில் தேனும்
வதையினுள் நிறையும் மலைவழி அருவிகள்
ஈக்களின் உழைப்பில் இசையும் கலக்கும்
மலைநாடு இலங்கை மத்தியில் அழகூட்டும்!



# இப்படி செய்வோமா?

வாரத்துக்கு/மாதத்திற்கு ஒருமுறையேனும் தொலைந்து போங்கள். அதாவது மொபைல் போனை எடுத்துக்கொண்டு, பகல் நேரத்தில், இதுவரை பயணிக்காத ஒரு புதுப் பாதையில் (மக்கள் நடமாட்டம் இருக்கனும்) ஒரு மணி நேரம் மெதுவாக நடந்து சென்று, மறுபடியும் (கூகுளில் தேடாமல்) வீட்டிற்கு திரும்பி வாருங்கள்.

அந்த ஒரு மணி நேரம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லும் விழிப்புணர்வுடன் இருக்கும். வீட்டிற்கு வந்ததும் நிச்சயமாக ஏதோ ஒரு வித்தியாசத்தை உணர்வீர்கள்.

எப்பொழுதும் உங்களை பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். தூக்கம் வராதபோது சோர்வாக உணர்ந்தாலும் கூட ஏதாவது சூடாக குடித்துவிட்டு வீட்டை சுத்தப்படுத்துவது, அலுமாரியில் துணிகளை ஒழுங்குபடுத்துவது போன்ற சின்னச் சின்ன வேலைகள் செய்துகொண்டே இருங்கள்.

உங்களின் இயல்புக்கு எதிரானவர்களை, மூட் அவுட் ஆக்குபவர்களை விட்டு ஒதுங்கி இருங்கள்.

சிலருக்கு வீட்டில்/பணி இடத்திலேயே வாய்த்து விடுவதுண்டு. தவிர்க்கவே முடியாதது தான். குறைந்தபட்சம் நேருக்கு நேர் முகத்தை பார்க்காமல் தவிர்த்துவிடலாம். நவகிரகங்களை போல் திரும்பி கொள்ள வேண்டும்.

பகிர்ந்து கொள்ளுங்கள். சந்தோஷமோ, கஷ்டமோ கட்டாயம் பகிர்ந்து கொள்ளுங்கள். மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு அழுத்தத்தை அதிகரிக்க வேண்டாம்.

இதை வெளியே சொன்னா நம்மை பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைத்து சொல்லாமல் அடக்கி, அழுத்தி வைத்து ஹார்ட் அட்டாக் வந்து போய் சேர்ந்தவர்களே அதிகம்.

பேசுங்கள். உங்களைவிட 20 வயது குறைந்தவர்களுடனும், 20 வயது அதிகமானவர்களுடனும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் பேசுங்கள்.

சிறியவருடன் பேசும்போது நீங்கள் சிறு வயதில் என்ன செய்திருப்பீர்கள் என்று ஞாபகம் வரும். நம்முடைய அச்செயல் பற்றிய மதிப்பீடு செய்து கொள்ளலாம்.

மூத்தவருடன் பேசுகையில் கண்டிப்பாக ஏதோ ஒரு அனுபவ அறிவை கற்று இருப்பீர்கள். நீங்கள் யார் வீட்டுக்காவது போய் இரண்டு நாள் தங்குங்கள். அல்லது யாரையாவது உங்க வீட்டுக்கு ரெண்டு நாள் தங்குவதற்கு கூப்பிடுங்கள்.

அவர்களுடன் இரண்டு நாள் செலவு செய்ததில் சந்தோஷமாக இருந்தாலும் நல்லது. ஏண்டாப்பா கூப்பிட்டோம்ன்னு நினைத்தாலும் மிகவும் நல்லது. அவர்கள் போன பின்னர் நீங்கள் மிகவும் சந்தோசமாக உணர்வீர்கள் .

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தம்மை யாருடனாவது ஒப்பிட்டு தளர்ந்து போக வேண்டாம். அறிவுக்கும் மனசுக்கும் தூரங்கள் இருந்தால் தான் நன்மை. சரியென்ன? தவறென்ன? எவருக்கு, எது வேண்டும் செய்வோம். சரியென நினைப்பதை செய்யுங்கள்.

தனியாகவும் இருக்கலாம் ஒரு கூட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள, தனக்கு ஒத்து வராத/ பிடிக்காத விடயங்களை வலுக்கட்டாயமாக பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டாம். வந்தார்கள், போனார்கள் நேற்று. யாருக்கும் சுவடு இல்லை இன்று. எதிர்பார்பில்லாமல். எந்த வெகுமதியும் அற்ற ஒரு பொழுதுபோக்கை பழகி கொள்ளுங்கள். ஏனென்றால் எதிர்பார்ப்பும் இருக்காது, ஏமாற்றமும் இருக்காது. எத்தனை உறவினர்கள் இருந்தாலும் நண்பர்கள் அவசியம். அதிலும் குறிப்பாக அக்கம்பக்கத்தினர், ஒன்லைன் நண்பர்கள் மதிப்பு கூட்டுதல் (value addition) என்று சொல்வார்களே அதுபோல.

வாழ்க்கையை மிகச் சிறப்பாக மாற்றும். நம்முடைய வேலைகளை நமக்கு தோதான நேரத்தில் செய்துகொண்டாலும் கூட, பிறருக்கு உறுதியளித்த நேரத்தை சரியாக கடைப்பிடித்தால் நம்பிக்கையும், நன்மதிப்பும் ஏற்படும்.



# எதுவும் செய்யாதீர்கள் நிதானமாக இருங்கள்

இப்போது செய்து கொண்டு இருப்பதே சிறந்தது தான். உங்கள் வாழ்வு இறைவனால் எழுதப்பட்டது என்றால் எந்த மாற்றங்களும் மாற்றி விட இயலாது அல்லவா. வட்டம் போட்டு வாழ்வது அல்ல வாழ்வு. காட்டாறு போல ஓடிக்கொண்டிருப்பது தான் வாழ்வு.

எந்த நிமிடம் எத்திசை நோக்கி பாயும் என்றே தெரியாது. உங்களுக்கு 10 விடயங்களை யாராவது சொல்லிவிட்டால் அதை பின்பற்றி விடுவீர்களா? முயற்சி பண்ணுவீங்களே தவிர ஒரு கட்டத்தில் சலிப்பு ஏற்பட்டு தகர்ந்து விடுவீர்கள். ஏனென்றால் வாழ்க்கை ஒன்றும் வட்டம் போட்டு வாழ்வதல்ல.

சிறப்பாக வாழ பலர் பலது கூறுவார்கள். பொய் சொல்லாதே , ஏமாற்றாதே, காமத்தை களைந்துவிடு இன்னும் ஏராளம். ஏராளம். ஆனால் அப்படி பின்பற்றி வாழ்ந்திட தான் முடியுமா, இல்லை தவமாய் ஏற்றிட தான் முடியமா? உங்களின் ஆர்வமும், அறிவுமே உங்கள் வாழ்வை சிறப்பாக்கும். நீங்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உங்கள் அறிவு சிறப்பாய் வாழ சிந்திக்கும். சிந்திப்பதின்பால் ஏற்படும் ஆர்வம் உங்கள் வாழ்வை சிறப்பாக்கும். 10 விடயங்களை கடைபிடிக்கிறேன் என்று இயந்திரமாய் வாழ்வை மாற்றி கொள்வதை விட, இயல்பாய் வாழ்ந்துவிட்டு போகலாமே.



## இந்த 10 விடயங்களையும் செய்யாதீர்கள்

- பரிதானம் (லஞ்சம்) வாங்குதல்
- புறங்கூறுதல்
- பிறருக்கு விரோதமாய் பொய் சாட்சி சொல்லுதல்
- பிறரை நியாயந்தீர்த்தல் மற்றும் குற்றம் சாட்டுதல்
- கொலை
- தற்கொலை
- விபச்சாரம்
- பிறரை ஏமாற்றுதல் மற்றும் வஞ்சித்தல்
- பிறருக்குரியதை அபகரித்தல்
- திக்கற்றவன், ஏழையின் பொருளைக் கொள்ளையிடுதல்

ப்ரியமதா பயஸ்



- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

# சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## அவர் புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும்

முன்னைய வார ஆக்கங்களில் நான் திருத்தந்தையைச் சந்திக்க புனித பேதுறுவானவர் சதுக்கத்திற்கு வந்தமை முதல் திருத்தந்தை வரப்போகிறார் என்பதை அறிவிக்கும் இசை கேட்டது வரை விளக்கினேன்.

### தூதுவரும் தேவ புறாவாய் திருத்தந்தை வந்தார்

தூது வரும் தேவ புறாவாய் வெண்ணிற ஆடையில் திருத்தந்தை மெல்ல அடியெடுத்து வந்தார். மக்கள் கூட்டத்தைப் பார்த்துத் தம் கைகளை அகல விரித்து அசைத்து ஆசீர்வதித்தார்.

இவ்வளவு நேரமும் இந்தக் கத்து கத்தத்தான் அமைதியாகக் காத்திருந்தவர்கள் போல் மக்கள் எல்லோரும்



வானதிரக் கத்தினர். தத்தம் மொழிகளில் வாழ்த்தினர். சற்று நேரம் யார் என்ன பேசுகின்றனர் என்பதே புரியவில்லை.

உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்து மக்களின் வாழ்த்துக்களையும் ஆர்ப்பரிப்புக்களையும் கேட்டுக் கொண்டிருந்த திருத்தந்தை தனது இடத்தை அமைதியாக வந்தடைந்தார். மக்கள் அமைதியடைந்தனர்.

திருத்தந்தை வயது முதிர்ந்து இருந்தமையால் தனியான சந்திப்புக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு பொதுவான சந்திப்பு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. இதனால் பொதுவான சந்திப்பிற்கு மண்டபத்தில் அமர்ந்திருக்கும் முதல் நான்கு வரிசையில் இருப்பவாகள் மட்டும் திருத்தந்தையை மேடையில் ஏறிச் சந்திக்கலாம் என்றிருந்தது.

காவலர்கள் வந்து மக்களை வாழ்த்தி, மேடையில் ஏறிச் சென்று, திருத்தந்தை நெருக்கமாகச் சந்திக்க விருந்தவர்களை மேடைக்கு அனுப்பத் தொடங்கினார்.

### திருத்தந்தையைப் பார்த்தேன்

எனது நேரம் வந்தது. மேடையில் ஏறிச்சென்றேன். திருத்தந்தையை மிக நெருக்கமாகப் பார்த்தேன். அவரை முதற்தடவையாக இப்போதுதான் இவ்வளவு நெருக்கமாகப் பார்க்கிறேன்.

1920 ஆம் ஆண்டு பிறந்த இவர் 9 வயதில் (1929) தாயையும், 12 வயதில் (1932) ஒரே சகோதரரையும், 21 வயதில் (1941) தந்தையையும் இழந்தவர்.

24 ஆவது வயதில் (1939) 2ஆம் உலகப்போர் காலத்தில் போலாந்து ஹிட்லரின் பிடியில் இருந்த போது இராணுவ ஆட்சியையும் அடிமைத்தன வாழ்வையும் அனுபவித்தவர்.

26 வயதில் (1946) குருப்பட்டத்தையும், 28 வயதில் (1948) கலாநிதிப் பட்டத்தையும், 33 வயதில் (1953) இரண்டாவது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

38 வயதில் (1943) ஆயராகவும் 43 வயதில் (1964) பேராயர் ஆகவும், 47 வயதில் (1967) கருதினால் ஆகவும், 58 வயதில் (1978) திருத்தந்தை ஆகவும் பணியின் படிகளில் ஏறியவர்.

மூவர் திருத்தந்தையர்களாக இருந்த ஆண்டு என வர்ணிக்கப்படும் 1978ஆம் ஆண்டு இரும்புத்திரை போடப்பட்ட கம்யூனிஸ நாட்டில் இருந்து வந்து, பல சாதனைகளைப் படைத்து, 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர் எனப் போற்றப்பட்டவர்

அடிமைத்தன வாழ்வில் கற்சுரங்கத்தில் கல்லுடைத்துப் பிய்ந்துபோன கைகளோடும், தொழிற்சாலையில் சுண்ணாம்பு பட்டு அவிந்து போன கால்களோடும், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட நிலையில் இரவிரவாக இரகசியமாக படித்து இரண்டு டாக்டர் பட்டம் பெற்ற இவர், ஒரு நடிகன் - கவிஞன் - உதைபந்தாட்ட வீரன். மலையேறுதல் - பனிக்கட்டி சறுக்குதல் - நீந்துதல் என்பன இவரின் விருப்பமான பொழுதுபோக்குகள்.

போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை - 400 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தாலியர் அல்லாத ஒரு திருத்தந்தை - 1340 பேருக்கு அருளாளர் பட்டமும் 483 பேருக்கு புனிதர் பட்டமும் வழங்கியவர். தமது 26 ஆண்டு ஆட்சிக் காலத்தில 129 நாடுகளுக்குப் பயணம் செய்தவர்.

இந்தப் பலமான பின்னணியோடு அரசியற் பலமோ அதிகார வல்லமையோ எதுவும் இல்லாத போதும் தமது திருத்தந்தை பதவியையும் ஆன்மீக வல்லமையையும் பணயம் வைத்து யாருக்கும் அஞ்சாமல் முழு உலகிற்கும் கேட்கும் விதமாக நீதியை உரத்துச் சொன்னவர். உலக சமாதானத்திற்காக - அது யாருக்கு எதிரான குரலாக இருந்தாலும் - எந்த ஐயமோ பயமோ இன்றி வலியுறுத்தி வந்தவர்.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான போதும் இறைதுணையோடு அதை எதிர்கொண்டு சரித்திரம் படைத்தவர்.

80 வயது ஆகிவிட்டாலும் எடுப்பாகத் தெரிந்தார். 58 வயதில் திருத்தந்தையாகி 22 வருடங்கள் திருத்தந்தைப் பணி ஆற்றி விட்டாலும் இன்னும் சாதிக்கும் வெறியுடனேயே காட்சி தந்தார்.

படங்களிலும் காணொலிகளிலும் பார்த்ததைவிட அழகாய், இளமையாய், இறை ஒளி பிரகாசிக்க நிமிர்ந்து கண்ணுக்குள் பார்த்து இனிய புன்முறுவலிட்டார்.

கரங்களைப்பற்றி இறுக முத்தமிட்டேன். இலங்கையில் இருந்து வந்துள்ளேன் என்று சொன்னேன். நெருக்கமாகப் பார்த்து தலையை ஓம் என்பது போல் அசைத்து, தனது கரங்களை எனது தலைமேல் மென்மையாக வைத்து தொட்டு என்னை ஆசீர்வதித்தார். குனிந்து ஆசீரைப் பெற்ற நான் திரும்பவும் அவரின் அழகு ததும்பும்



முகத்தைப் பார்த்தேன்.

திரும்பவும் புன்னகைத்தார். போய் வாரும் என்பது போல் தோளில் தட்டினார். அதற்கு மேல் நிற்க முடியாது என்பதால், புகைப்படங்கள் எடுக்கப்பட்டு விட்டன என்பதை உறுதி செய்து கொண்டு மெதுவாக நகர்ந்தேன்.

நீண்ட மண்டபம். நடுவே நடந்து வெளியே வரும் போது ஓரத்தில் அமர்ந்திருந்த அனைவரும் என்னை நோக்கி கைகளை நீட்டினர். நானும் எனது இரு கரங்களையும் இருபுறமும் நீட்டி அவர்களைத் தொட்டுக் கொண்டே வந்தேன்.

### திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பற்றி பாதுகாவலன் பத்திரிகையில்

திருத்தந்தை முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியுடன் என்ன பேசினார் என்பதை ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் இருந்து எடுத்து மொழியாக்கம் செய்து பாதுகாவலன் பத்திரிகைக்கு அனுப்பினேன். அலி அக்கா திருத்தந்தைக்கு என்ன சொன்னார் என்னும் தலைப்பில் அதை 27.01.1984 இதழில் முதற்பக்கத்தில் பிரசுரித்தார்கள்.

பின்னர் திருத்தந்தையின் இறையியற் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும் என்ற தொடர் ஆக்கத்தை பாதுகாவலன் பத்திரிகையில் பல மாதங்களாக எழுதி வெளியிட்டேன்.

எனது பாதுகாவலன் ஆசிரியப் பணிக்காலத்தில் (1997 - 2007) திருத்தந்தையின் விடயங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்தேன். 2005 ஆம் ஆண்டு திருத்தந்தை இறந்த போது கத்தோலிக்க திருச்சபையின்

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

பலத்தை உலகமே கண்டு வியந்தது என பெரிய தலைப்பிட்டு முதற்பக்கம் முழுவதும் நிறையும் படியாக பெரிய படத்தை வெளியிட்டேன்.

### புனித இரண்டாம் அருள் சின்னப்பரின் உலகின் மிகப்பெரிய சிலை

போலந்தில் இவருடைய மிக உயரமான சிலை ஏப்ரல் 2013இல் திறந்து வைக்கப்பட்டது. 45 அடி உயரமும் 5,000 கிலோகிராம் எடையும் கொண்ட திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் இந்த சிலைதான் உலகிலேயே இவரின் மிக உயரமான சிலை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு சிலியில் 40 அடி உயரமுடைய இவரின் சிலையே உலகில் மிகப்பெரியதாக இருந்தது. இந்த சிலை அமைக்க தொழிலதிபர் லெஸ்ஜெக் லைசன் என்பவர் முழு நிதியுதவியும் அளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் குரோஷியா நாட்டுக்குத் தம் குடும்பத்துடன் சுற்றுலா சென்றார் லெஸ்ஜெக் லைசன். அப்போது நீரில் மூழ்கி இவருடைய மகன் இறக்கும் நிலை ஏற்பட்டது. அந்த விபத்தில் இருந்து இவருடைய மகன் உயிர் பிழைத்தார். அதற்கு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் பரிந்துரையே காரணம் என்று நம்பிய லைசன் அதற்கு நன்றி செலுத்தும் விதமாக உலகிலேயே மிக உயரமான இரண்டாம் அருள் சின்னப்பரின் சிலையை அமைக்க நிதியுதவி அளித்தார். அதன்படி போலந்தின் செஸ்டோகோவா என்ற இடத்தில் இந்த சிலையை செஸ்டோகோவா நகரின் பேராயர் வாட்சுவா தேபோ திறந்து வைத்தார்.

உலகிலேயே இயேசு கிறிஸ்துவின் மிக உயரமான சிலையும் போலந்து நாட்டில்தான் உள்ளது. 118 அடி உயரம் கொண்ட இச்சிலை 2011இல் ஸ்வீபோட்சின் நகரில் எழுப்பப்பட்டது.

இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்ந்து புனிதர் நிலை அடைந்தவர்கள் எமக்காகப் பரிந்து பேசும் வல்லமை பெற்றவர்கள். அவர்களிடம் நாம் மன்றாட முடியும். அவர்களும் புதுமைகள் புரியமுடியும். அவர்கள் பெயரில் ஆலயங்கள் அமைக்க முடியும். புனிதர்களை அவர்கள் வாழும் போதே சந்திப்பதும் அபூர்வமானது. ஆனால் அண்மைக்காலத்தில் இந்த நிலை சற்று மாறியுள்ளது. குறிப்பாக புனித அன்னை திரேசா புனித இரண்டாம் அருள் சின்னப்பர் போன்றோர் சமகாலப் புனிதர்கள் ஆக விளங்குகின்றனர். இவர்களைச் சந்தித்த பலர் இன்று வாழ்கின்றனர் என்பது அபூர்வமான உண்மையாகும்.

# மத்திய கிழக்கு நாடுகளின் உதவியை நாட அரசு முடிவு!

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்

மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நாணயமாற்று நெருக்கடிக்கு தீர்வு காண உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

N Flash Super Detergent

வேலை வாய்ப்பு

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)

மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இலத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

Director, Jaffna College Institute of Technology Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706

உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com

கிளை நிறுவனங்கள் :-

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2022இல் வெளியிடப்பெற்றது.

# டிக்கோகார்ஸியா தீவில் வெளித் தொடர்பேயின்றி 87 இலங்கைத் தமிழர்கள்

## ஒரு வருடமாகத் தவிக்கும் சோகம்

**ந.லோகதயாளன்**



டிக்கோ கார்ஸியாவில் அமெ. விமானப் படைத் தளம்

இலங்கையில் இருந்து கடந்த ஆண்டு கனடா செல்லும் நோக்கில் படகு மூலம் பயணித்து, படகில் ஏற்பட்ட உடைவு காரணமாக டிக்கோகார்ஸியா தீவில் உள்ள அமெரிக்க கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு, தற்போது வரையில் தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள் தமக்கு பிரித்தானிய அரசு தஞ்சம் அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் மன்னாரில் இருந்து 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையிலான 2 மாத இடைவெளியில் 6 படகுகளில் பயணித்த 27 பேருக்கு இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியை அண்டிய கிராமத்தில் ஊர் மக்களால் அபயம் அளிக்கப்பட்டனர். (அவர்களின் பாதுகாப்பு கருதி பெயர், முகவரி தவிர்க்கப்படுகின்றது) அவ்வாறு சென்ற 27 பேரும் இந்தியாவிற்கு ஏற்கனவே அகதிகளாகச் சென்று மண்டபம் உள்ளிட்ட அகதி முகாம்களில் இருந்த 60 பேர் உட்பட மொத்தம் 87 இலங்கையர்கள் படகு மூலம் கனடா செல்ல திட்டமிட்டனர். இதற்காக தலைக்கு தலா 10 லட்சம் ரூபா பேரம் பேசப்பட்டு பின்னர் 10 லட்சம் ரூபா தொடக்கம் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் செலுத்தப்பட்டுள்ளது. இதேநேரம் மன்னாரில் இருந்து இந்தியாவிற்குச் செல்ல நம்மவர்களிற்கும் 50 ஆயிரம் ரூபாவில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பணத்தைச் செலுத்தி சிறு,சிறு எண்ணிக்கைகளாக தமிழகம் சென்றோர் அங்கு ஒன்று சேர்க்கப்பட்டு, தமிழ்நாடு முகாம்களில் இருந்தவர்களும் இணைக்கப்பட்டு, கனடாவிற்கான பயண ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக இந்தியாவின் மீன்பிடி ட்ரோலர் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். அதற்காக பயணத்தை ஏற்பாடு செய்தவர்கள் படகிற்கான முழுப் பணத்தையும் செலுத்தியே படகைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட படகு இந்தியாவின் கன்னியாகுமரியை அண்டிய கடற்கரையில் இருந்து 2021.09.21 அன்று புறப்பட்டுள்ளது. இவ்வாறு புறப்பட்ட படகில் பயணித்தவர்கள் பயணிப்பதற்கு இரு தினங்களின் முன்பு இலங்கையில் உள்ள தமது உறவுகளிடம் தொலைபேசியில் உரையாடியமை மட்டுமன்றி, இனி 30 நாள்களின் பின்பே உரையாட முடியும் எனவும் தகவல் வழங்கியுள்ளனர்.

அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து புறப்பட்டவர்கள் 2021.10.03 அன்று மாலைதீவையும் தாண்டி அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள டிக்கோகார்ஸியா தீவை அண்மித்த கடலில் பயணிக்கும்போது படகில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் கண்ணுக்குத் தெரிந்த தீவுக்கு புகை சமிக்ஞை வழங்கியுள்ளனர். நீண்டநேரம் ஒரே இடத்தில் ஓர் படகு நிற்பதனையும், அதில் இருந்து புகை சமிக்ஞை வருவதனையும் அவதானித்த கூட்டுப் படையினர் படகை அண்மித்தபோது படகு மூழ்கும் நிலைமையில் காணப்பட்டதனால் அதில் இருந்த ஈழ அகதிகளை மீட்டுத் தமது தீவிற்கு கொண்டு சென்றனர். இதன்போது அதில் இருந்த 87 பேரும் காப்பாற்றப்பட்டபோதும் உடைமைகள் எவையும் மீட்கப்படவில்லை.




நீண்ட இழை போல வளைந்து கிடக்கும் தீவின் காட்சி

இவ்வாறு தீவிற்கு கொண்டு செல்லப்பட்ட விடயம் 2021.10.05 அன்று பத்திரிகையில் முதன்முதலாக செய்தி வெளியிட்டபோதும் சிலர் அதனை மறுத்தும் வந்தனர். இதனால் 2021.11.25 அன்று தீவில் சிறைபிடிக்கப்பட்டவர்களில் 60பேரின் பெயர் விவரங்கள் பத்திரிகையில் மீண்டும் வெளியிடப்பட்டது. 87 பேர் பயணித்தபோதும் 60 பேரின் பெயர் விவரம் மட்டும் எவ்வாறு வெளிவந்தது எனத் தேடியபோது தமிழ்நாடு முகாமில் இருந்து சென்ற 60பேரின் பெயர்ப்பட்டியலே அது என உறுதியானது.

இந்தக் காலத்தில் தீவில் அகப்பட்டவர்களின் உறவுகள் நீண்ட தேடுதலில் ஈடுபட்டும் எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை.

இதனால் மன்னாரில் உள்ள உறவுகள் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் பிரித்தானியத் தூதரகம், மாலைதீவு தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டனர். இதன் பின்பு 2022 ஆண்டு ஜனவரி மாதம் முதன்முதலாக தீவில் அகப்பட்டுள்ள ஈழ அகதிகள் செய்மதி தொலைபேசி ஊடாக உறவுகளுடன் 3 நிமிடம் உரையாட அனுமதிக்கப்பட்டனர்.

இதன் மூலம் படகில் சென்ற 89 பேரும் பத்திரமாக இருப்பது உறுதி செய்யப்பட்டபோதும் எந்த நாட்டின் பொறுப்பில் அவர்கள் உள்ளார்கள் என்பது மட்டும் எவருக்குமே தெரியவில்லை. ஏனெனில் டிக்கோகார்ஸியா தீவில் எந்தவொரு சிவிலியனும் இல்லை. அதேநேரம் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய இரு நாட்டுப் படைகளும் அங்கு நிலைகொண்டுள்ளன. இதில் பிரித்தானியப் படைகள் இந்த விடயத்தை மனிதாபிமானமாகக் கையில் எடுத்து அனைவரும் தங்குவதற்கான கொட்டகைகள் அமைத்து, உணவு, குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இதற்கு அப்பாலான தேவைகளோ – குறிப்பாக மிக முக்கியமான வைத்திய வசதிகளோ – அங்கு கிடையாது. இதேநேரம் 89 பேரில் பெண்களுடன் சிறுவர்களும் உள்ள நிலைமையில் கல்வி வசதியும் கிடையாது. இதனால் இவர்களில் 26 வயதுடைய ஓர் இளைஞன் மனநலம் பாதிக்கப்பட்டு, சுய சிந்தனை ஏதும் இன்றி இருப்பதனால் அவரது பராமரிப்பு பெரும் சிரமத்தை உண்டு பண்ணியுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர் திருமணமாகாதவர். இவரது உடன் பிறந்த சகோதரங்களோ அல்லது தாய், தந்தையரோ உடன் பயணிக்காதபோதிலும், இரண்டாம் நிலை உறவுகள் சிலர் உடன் இருக்கும்போதும் இந்த மனநலம் பாதித்த இளைஞனை நாட்டிற்கு – அதாவது மன்னாரிற்கு – திருப்பி அனுப்பும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. அந்த முயற்சி தொடர்பில் மன்னார் பொலிஸார் அவரது வீட்டிற்குச் சென்று தாயாரிடம் விவரங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவை தொடர்பில், கனடாவிற்கு பயணித்தவர்களில் ஒருவரின் மனைவியை – தற்போது மன்னாரில் வசிப்பவரை – தொடர்பு கொண்டு கேட்டபோது தமது பெயர் அடையாளத்தை தெரிவிக்கத் தயங்கினார்.

அதனால் பெயர், முகவரி வெளியிடவில்லை என்ற உறுதிமொழியின் அடிப்படையில் சி.அ. விவரங்களைத் தந்தார். 8 லட்சம் ரூபாவை படகிற்குச் செலவு செய்த அதேநேரம் ஓர் ஆண்டாக பெரும் நெருக்கடிகளுடன் தங்கி, தற்போதும் யாரும் அற்ற தீவில் இருக்கும் நிலையில், ஒரு நாடு அவருக்குத் தஞ்சம் வழங்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. மாறாகத் திருப்பி அனுப்பினால் மனமுடைந்து என்ன முடிவாகுமோ என்ற அச்சத்துடனேயே உள்ளோம். – என்றார்.

அதேபோன்று திருமணமான பெண் பிள்ளை அவரது கணவருடனும் பிள்ளையுடனும் சகோதரனையும் அழைத்துக்கொண்டு 4 உறவுகளாகப் பயணித்திருந்தார். அவரின் தாயாரைத் தொடர்புகொண்டோம்.

இங்கு வாழவே விருப்பம் இல்லை எனப் பல ஆண்டுகளாகவே கூறிவந்தமையினால் இருக்கிறதை விற்றமை மட்டுமன்றி 8 லட்சம் ரூபா கடனையும் வாங்கிக் கொடுத்தேன். மிகுதிப் பணத்தை கணவர் வழங்கினார். ஆனால் இரண்டும் கெட்ட தீவில் – ஒரு தொலைபேசிகூட இல்லாத தீவில் – தவிக்கின்றனர். இதனால் ஏதாவது நாடு அவர்களின் அவலத்தை புரிந்து அபயம் அளிக்க வேண்டும் என்பதே எமது அவா. அதிலும் குறிப்பாக பிரித்தானியா இவர்கள் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என விரும்புகின்றோம். – என்றவரிடம் கணவர் எங்கு தொழில் புரிகின்றார் என்றபோது ஆஸ்திரேலியாவில் எனப் பதிலளித்தார்.

இவ்வாறு தீவில் அகப்பட்டுள்ளவர்கள் தொடர்பான தகவலை அண்மையில் வெளியிட்டுள்ள ஆசிய பசுபிக் அகதிகள் தஞ்சம் கோரிகளிற்கான அமைப்பு இந்த அகதிகளை பொறுப்பேற்க பிரித்தானியாவும் மறுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் இறுதியாக 2022.02.22 அன்று மாலையில் அனைவரும் இலங்கையில் உள்ள உறவுகளுடன் தொலைபேசியில் உரையாட அனுமதிக்கப்பட்டனர். இம்முறை 3 நிமிட வரையறை தளர்த்தப்பட்டு 7 நிமிடமாக அதிகரிக்கப்பட்டதோடு பெண்கள், சிறுவர்கள் கொண்ட குடும்பங்கள் 10 நிமிடம் வரையிலும் பேச அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது உறவுகளிடம் தாம் மீளத் திரும்பிவர விரும்பவில்லை என்பதனை வலியுறுத்தியமையோடு போட்டிருந்த உடுப்பைத் தவிர அனைத்தையும் இழந்த தமக்கு தற்போது தேவையானவற்றை பிரித்தானிய அரசே வழங்கியதாகவும், இதனால் தமக்கான தஞ்சக் கோரிக்கையினையும் அதே மனிதாபிமானத்துடன் பிரித்தானியா அணுக வேண்டும் எனத் தீவில் தங்கியுள்ளவர்கள் கோருகின்றனர். இலங்கையில் உள்ள உறவுகளும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்துகின்றனர்.

# “இந்த துறைதான் எனது அடையாளம் என்பது அப்போது எனக்கு தெரியாது”

## Lethu Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் லேத்திகா யோகேஸ்வரன் உடனான நேர்காணலிது.



லேத்திகா யோகேஸ்வரன்
உரிமையாளர்
Lethu Beauty Parlour அழகுக்கலை நிறுவனம்

### ☞ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் லேத்திகா யோகேஸ்வரன்.கிளிநொச்சியில் வசித்து வருகிறேன். Lethu Beauty Parlour அழகுக்கலை நிலையத்தை நடாத்திவருகிறேன். நான் க.பொ.த உயர்தரத்தை கற்று பின் அழகுக்கலைத்துறை கற்கையில் இணைந்து கொண்டு இது பற்றி கற்க ஆரம்பித்தேன்.க.பொ.த உயர்தரத்திற்கு பின்னர் எல்லோரும் ஒரு அரசாங்க வேலைக்குச் செல்ல வேண்டு மென்றவொரு எண்ணம் என்னை சுற்றியிருப்பவர்கள் மனதில் இருந்தது. ஆனால் அழகுக்கலைத்துறையில் எனக்கிருக்கும் ஆர்வத்தை கூறி இந்து துறையில் அடியெடுத்துவைத்தேன். கிளிநொச்சியிலுள்ள ஒரு அழகுக்கலை நிறுவனத்தில் எனது பயணத்தை ஆரம்பித்தேன்.

### ☞ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

எனக்கு அழகுக்கலைத்துறையில் ஆர்வம் வரக்காரணம் சிறுவயதிலிருந்தே நான் அழகுக்கலை சார்ந்த காணொலிகள் பார்த்தால் அதைப்போலவே செய்வேன். குறிப்பாக மருதானி போடுவதைப் பார்த்து அப்படியே போடுவேன். இப்படி என்னையே அறியாமல் இத்துறையில் ஒரு ஆர்வம் வந்தது. இந்த துறைதான் எனது அடையாளம் என்பது அப்போது எனக்கு தெரியாது. ஆனால் எனக்கிருக்கும் அழகுக்கலைத் திறமைகளை ஒவ்வொன்றாக நான் அறிந்துகொண்டதன் பின்னே இத்துறையையே தேர்ந்தெடுக்க வேண்டும். இதில் பிரசித்தி பெற வேண்டுமென்ற ஆர்வம் எனக்குள் அதிகரித்தது.

### ☞ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அந்த காலத்தில் அழகுக்கலை நிபுணர்கள் என்று கூறினாலே ஒரு கண்ணோட்டத்தில் பார்ப் பார்கள். ஆனால் தற்போது அந்த எண்ணப்பாடு மாறி யுள்ளது. அந்த எண்ணம் வருங்காலத்திலும் மாற வேண்டும். அழகுக்கலை நிபுணர்களாக இந்த சமுதா யத்தில் வெற்றிபெருவது ஒரு சவாலாக இருக்கின்றது. மற்றுமொரு சவாலாக நான் பார்ப்பது எனக்கான ஒரு தனிப்பட்ட பிரச்சினையை தான். அதாவது எனது அழகுக் கலைத்துறையில் ஓர்டர்கள் எடுப்பதற்கு அதாவது புதிய வாடிக்கையாளர்களை இணைத்து கொள் வதற்காக சமூக வலைத் தளங்களில் தொலை பேசி இலக்கத்தை பதிவு செய்கிறோம். ஆனால் இதனைக்கொண்டு பலர் தவறான அழைப்புகள், குறுஞ்செய்திகள் போன்றவற்றை அனுப்புகின்றனர். ஒரு தவறான அழைப்பின் மூலம் அந்த நாளே ஒருவித மனக்கசப்பை ஏற்படுத்தும். இதனை சமாளிப்ப தென்பது ஒரு பெண்ணாக நான் எதிர்கொள்ளும் சவால் ஒன்றுதான். இதனைத் தவிர எனது வாடிக்கையாளர்களை திருப்திபடுத்த ஒவ் வொரு விடயங்களையும் நுணுக்கமாக கவனித்து செய்யவேண்டும். இதுவும் ஒரு சவால் தான்.

### ☞ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் கிடைக்கும் வாய்ப்பு என்று பார்த்தால் புதிய வாடிக்கையாளர்கள் எம்மை நாடிவருவது எனக்கொரு வாய்ப்பென்றே கூறவேண்டும். எனது பிரதேசத்திலுள்ள வாடிக்கையாளர்களைத் தாண்டி எனது அழகுக்கலையின் மேல் ஈர்ப்புகொண்டு என்னைத் தேடிவந்த வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் வெளிப் பிரதேசத்தவர்கள் தான். அதிலும் எனது அந்த அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்து ஒரு வருடம் தான் ஆகிறது. இந்த குறுகிய காலத்திலேயே எனக்கு நிறைய ஓர்டர்கள் வருவதென்பதை நான் ஒரு வாய்ப்பாகவே கருதுகின்றேன். எனது வேலைகளில் முழுமையாக ஈடுபடுவதால் என்னால் இத் துறையை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கான நேரம் அமையவில்லை. ஆனால் அந்தவொரு வாய்ப்பை சரியான நேரத்தில் சரியான தருணத்தில் அமைத்துகொடுத்துள்ளது அருந்ததி நிறுவனமென்றால் அதற்கு மிகையாகாது. காரணம் மாற்று மோதிரம் எனும் மணப்பெண் அலங்காரக் காட்சியில் நான் பங்குகொள்ளும் வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளனர். இவையெல்லாம் எனக்கு கிடைத்த அரிய வாய்ப்புகள் ஆகும்.

அழகுக்கலைத்துறையில் எனக்கு கிடைத்த இந்த வாய்ப்புகளை எல்லாம் எனது சாதனையாகவே பார்க்கிறேன். வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொண்டு ஒரு நிலையத்தை ஆரம்பிப்பவர்கள் உண்டு. ஆனால் நான் அப்படிச்செய்யவில்லை. என்மேலும் என் திறமைமேலும் எனக்கிருந்த நம்பிக்கையை கொண்டு இதனை ஆரம்பித்து தற்போது ஏராளமான வாடிக்கையாளர்களையும் இணைத்துகொண்டு வெற்றிகரமாக இந்த துறையில் சாதித்துவருகிறேன்.

### ☞ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

சாதிக்கவிரும்பும்பெண்கள்தம்மீதுஇந்தசமுதாயம் எழுப்பும் இழிவான கருத்துக்களையெல்லாம் புறந்தள்ளவேண்டும். ஒரு பெண்ணாக இருப்பவள் அப்படியிருக்க வேண்டும் இப்படியிருக்கவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்த சமூதாயத்திற்கு மத்தியில் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று சாதனை செய்து காட்டுங்கள். உங்களை உற்சாகப்படுத்தும் உங்கள் உறவுகளின் ஆதரவை உங்கள் பலமாகக்கருதிக்கொள்ளுங்கள். உங்களால் முடியுமென்று நீங்கள் நம்புவதை நிச்சயம் செய்து காட்டினால் நீங்களும் சாதனையாளர்கள் தான்.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக திருமலையிலும் கையெழுத்துப் போராட்டம்

**திருகோணமலை, பெப்ரவரி 27**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்கக் கோரி கையெழுத்துப் பெறும் போராட்டம் திருகோணமலை சிவன் கோயிலடி தந்தை செல்வா சிலைக்கு அருகாமையில் நேற்று மாலை இடம் பெற்றது.**







இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இதில் தமிழ் அரசுச் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் எனக் கோரிக் கையெழுத்த் இட்டார்கள்.

**சுமந்திரன் கருத்து**

இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துரைக்கையில் –

இக்கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிக்கக்கோரி தமி ழர்கள் மட்டுமல்லர், ஏனைய சமூகத்த வரும் இதற்காகப் பங்களிப்பு செய்கின்றனர்.

நீர்கொழும்பில் நேற்றைய தினம் மிகப் பிரமாண்டமாக கையெழுத்து போராட்டம் இடம் பெற்றது. – என்றார்.

**சாணக்கியன் கருத்து**

மேலும் இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்துரைக்கையில் –

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஒழிக்க கையெழுத்துப் போராட்டம் மட்டுமல்லாது, ஏதோ ஒரு வகையிலும் போராடிக் கொண்டே இருப்போம்.

இதற்காக முஸ்லிம் சமூகம் உட்பட ஏனைய சமூகங்களும் குரல் கொடுத்து வருகின்றன. நாளைய தினம் (இன்று) மட்டக்களப்பிலும் இது இடம் பெறும். – எனத் தெரிவித்தார்.

**ஊடக அறிக்கை**

இதன் போது ஊடக அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (துற்காலிக ஏற்பாடுகள்) சட்டமே எமது சட்டப் புத்தகங் களில் காணப்படும் மிகக் கொடூரமான சட்டமாகத் தற்போது காணப்படுகிறது.

1979 ஆன் ஆண்டு தற்காலிக சட்டமாக நிறைவேற்றப்பட்ட இது, அதன் தலைப்பில் தெரிவிப்பது போல தற்காலிக ஆறு மாத காலத்திற்கு மட்டும் செல்லுபடியாக வேண்டியது. ஆனால் 42 வருட காலங்கள் நீடித்து, அநீதியை விளைவித்து, அநேகருக்கு துன்பத்தையும் கஷ்டங்களையும் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின் விதிகள் நமது குற்றவியல் சட்டத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்கு எதிரான திசையில் இயங்குகின்றன. உண்மையில் விசாரனை நிலுவையில் உள்ள குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் குற்றமற்றவர் என்ற அனுமானமும் கூட எமது சட்டம் காவல்துறையினரிடம் வழங்கப்படும் எந்த வாக்கு மூலத்தையும் கண்டு கொள்வதில்லை இது நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படாது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மாத்திரமே விதி விலக்காக ஓர் ஏ.எஸ்.பி. தரத்துக்குக் குறையாத ஒரு பொலிஸ் அதிகாரியிடம் வழங்கப்படும் வாக்குமூலம் குற்ற ஒப்புதலாக ஏற்று கொள்ளப்படும்.

அப்படி அது ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்படும் இந்த விதி மட்டுமே பல தவறான தீர்ப்புகளுக்கு வழிவகுத்தது மட்டுமல்லாது பொலிஸ் துறையின் விசாரணை திறனையும் மழுங்கடித்தது என்பதனை சொல்லத் தேவையில்லை.

உண்மையான குற்றவாளி இன்னும் சுதந்திரமாக இருக்கும் அதேவேலையில், ஒரு குறிப்பிட்ட குற்றம் தொடர்பான விசாரணை தீர்க்கப்பட்டு விட்டதாகக் கூறுவதற்கும், ஒரு தீர்ப்பினை வலுவாக்க வெறுமனே ஓர் ஒப்புதல் வாக்கு மூலத்தை முன்வைத்தால் போதுமானது என்பதாலும் இது, உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் எதிர்விளைவாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. – என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் நால்வர் கைது!

மன்னார், பெப்ரவரி 27

மன்னார் கடற்பகுதியில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் தமிழக மீனவர்கள் நால்வர் அவர்கள் வந்த விசைப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# பி.பி.ஸி. செய்தியாளரைக் கொன்றவர் பிரித்தானியாவில் ஒளித்திருக்கலாமா?

## அது வெறுக்கத் தக்கது என்கிறார் சூக்கா அம்மையார்

பி.பி.ஸி. செய்தியாளர் நிமலராஜனை கொலை செய்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் பிரித்தானியாவில் ஒளித்திருக்கலாம் என்பது வெறுக்கத்தக்கது என இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தினைச் சேர்ந்த ஜஸ்மின் சூக்கா அம்மையார் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் பிரித்தானிய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டமையை மனித உரிமை அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

மனித உரிமைகள் அமைப்புக்கள் நேற்று முன்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இதனைத் தெரிவித்துள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்தப் படுகொலை தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் 48 வயதுடைய நபரின் கைதை மொற்றோபொலிட்டன் காவல்துறையினரின் போர்க்குற்ற குழு மேற்கொண்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவரின் பெயரை அவர்கள் குறிப்பிடவில்லை.

இந்தக் கைதிற்கு வழியமைத்துள்ள இந்த செயலூக்கமான விசாரணையானது 22 வருடங்களுக்குப் பின்னர் கூட நீதி மற்றும் பொறுப்புக்கூறல் மீதான மெட்றோபொலிட்டன் காவல்துறையினரின் ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

ஊடகவியலாளர்களைக் கொல்பவர்கள் உலகில் எங்கும் பாதுகாப்பாக இருக்கமுடியாது.

19 ஒக்டோபர் 2000 இல் இடம்பெற்ற நிமலராஜன் மயில்வாகனத்தின் படுகொலையானது இலங்கை இனப்போரில் ஊடகவியலாளர் படுகொலைகளின் இரத்தம் படிந்த ஒரு பாதையின் தொடக்கமாக இருந்தது. இதில் பாதிக்கப்பட்டவர்களின் அநேகமானவர்கள் தமிழர்களாக உள்ளார்கள்.

# வவுனியா தரணிக்குளத்தில் காணியை மீட்டுத்தரக் கோரி மறியல் போராட்டம்





வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தரணிக்குளம் பொதுமக்கள் நேற்று தரணிக்குளம் பிரதான வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2001 ஆம் ஆண்டு தரணிக்குளம் பகுதியில் அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு, 250 குடும்பத்தினர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் அப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2003ஆம் ஆண்டு தரணிக்குளம் பிற்பகுதியில் காடாக காணப்பட்ட பகுதியை வெட்டி விவசாயம் மேற்கொண்டிருந்தமையுடன், தற்போது 612 குடும்பங்கள் வாழ்ந்தும் வருகின்றனர்.

இந்நிலையில் 2014 ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்தின் கீழ் பேராறு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு திட்டத்தில் உள்வாங்கப்படும் காணிகளிற்குப் பதிலாக முதலியார்குளத்தில் 15 ஏக்கர் அரச காணியையும், பத்தினியார்மகிழங்குளத்தில் 120 ஏக்கர் அரச காணியையும், கற்குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியெளயும் நெற் செய்கைக்காக வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டு பேராறு நீர்த்தேக்கமும் நிர்மாணிக்கப்பட்டது.

கற்குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியெள வழங்காது அவர்களை தரணிக்குளம் புதியநகர் பகுதியில் மேட்டுக் காணியில் குடியேற்றுவதற்கு பிரதேச செயலகத்தினர் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். இதன் காரணமாக அங்கு வசிக்கும் 612 குடும்பத்தினர் பாதிப்படைந்துள்ளனர். அரசாங்கத்தினால் பேராறு நீர்த்தேக்கத்தில் கீழ் வசித்தவர்களுக்கு நெற் செய்கைக்கான காணியே வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் தற்போது 612 குடும்பத்தினர் வசிக்கும் மேட்டுக்காணியினை பிரதேச செயலகத்தினர் வழங்க முன்வந்துள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தரணிக்குளம் பிரதான வீதியினை வழிமறித்த பொதுமக்கள் ‘இருப்பதற்கு வீடு காணி இல்லை; எமது காணியைப் பிரித்து இன்னொருவருக்கு வழங்குவது சரியா?’, ‘நீங்களே எமது நிலத்தை தந்து விடுங்கள்; இல்லையெனில் நாங்களே அதனை எடுக்க வேண்டி வரும்’, ‘வீடு இல்லை; காணி இல்லை; 60 ஏக்கர் காணியியை மீட்டுத்தா!’, ’அரை ஏக்கருக்குள் மீள்குடியேற்றம் செய்யும் பொழுது 250 குடும்பம்; இன்று 570 குடும்பம்; நாம் எங்கு சென்று வசிப்பது?’ – போன்ற பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு சுமார் ஒரு மணிநேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 293

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**737.பொதுத் தேர்தலில் தமிழ் கூட்டமைப்பினருக்கு கிடைத்த வாக்குளிலும் பார்க்கக் கூட வாக்குகள் தமக்கு ஜனாதிபதி தேர்தலில் வடக்குக் கிழக்கில் கிடைத்தமைக்கு தாங்கள் இனப்படுகொலை நடத்தவில்லை என்பதைத் தமிழ் மக்கள் தெரிந்திருந்தமைதான் காரணம் என முன்னாள் படைத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியிருக்கிறாரே?**

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சரத் பொன்சேகா தமிழ் கூட்டமைப்பினால் ஆதரிக்கப்பட்டவர். ஆதலால் அந்த வாக்குகள் எல்லாம் மேற்படி விடயத்தை உணர்ந்து மக்களால் தரப்பட்ட விருப்பு வாக்குகளல்ல.

இனப்படுகொலை என சட்டரீதியாக ஆராயப்படும்போது, அந்தக் குற்றத்தைச் சாட்டுகின்ற மனிதர்களின் நடத்தைகளும் அவதானித்திற்கு எடுக்கப்படும். ஜனாதிபதிக்கும் இராணுவ தளபதிகளுக்கும் இருந்த தொடர் கட்டளைகளால் (Chain of Command) இவர்களெல்லாருமே இனப்படுகொலைகளுக்கும் மற்ற அட்டூழியங்களுக்கும் பொறுப்பான



மண்டூர் மகேந்திரன்

வர்கள் என்று தமிழ் மக்கள் மனித உரிமை அமைப்புகள் மூலமாக குற்றம் சுமத்தியுள்ளார்கள். அதே சமயம், அதே தளபதியை ஆதரித்த தமிழ் மக்கள்தான், போர்க்காலத்தில் பொறுப்பிலிருந்த மைத்திரிபால சிறிசேனவையும் இந்தப் படுகொலைகளுக்கு அவரும் துணையாக இருந்தவர் என்றாலும் பின்னர் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் ஆதரித்தார்கள்.

அந்தத் தீர்மானங்களை எடுக்க தமிழ் மக்களை வழிப்படுத்தி வாக்களிக்கக் கேட்டவர்கள், உடனடி அரசியலைப் பார்த்தார்களேயொழிய நடந்தவற்றை இனப்படுகொலை என உறுதிப்படுத்துவதில் அக்கறை கொண்டிருக்கவில்லை.

தமிழ் பரப்புக்கள் தங்கள் வசதிக்காக – தங்களது அரசியலுக்காக – இப்படியான கூக்குரல்களையும் கோஷங்களையும் எழுப்பியிருந்தார்கள். எனவே, ஸ்ரீலங்கா அரசும் தென்னிலங்கையும் இவற்றைத் தங்களுக்கு சார்பாகத்தான் திரித்துத் தெரிவிக்கும்.

ஆகவே, தமிழர் தரப்பினர் தாங்கள் சொல்வதிலேயே பலவீனமானவர்கள், நடத்தைகளிலேயே எதிர்மாறாகச் செயல்பட்டு, அந்த வாதங்களிலேயே இதய சுத்தி அற்றவர்கள், சர்வதேச சமூகத்துக்கு நடந்தது இனப்படுகொலைதான் என நிறுவதில் எப்படி வெற்றி கொள்வார்கள்?

**738.பிரபாகரன் சரணடைந்து அதன் பின் இறந்தார் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளாரே?**

இதுவும் தமிழ் மக்களைக் குடைந்து கொண்டிருக்கும் அரசியலின் இன்னுமொரு பக்கமே. மற்றப் போராளிகளுக்கு சயனைட் குப்பி தந்து விட்டுத் தான் சரணடைந்தார், கோழை என முத்திரை குத்த டக்ளஸ் முற்படுகின்றார்.

வெற்றி பெற்றவன், தனது எண்ணப்படியே சரித்திரங்களை எழுதுகிறான். ஜேர்மனியின் ஹிட்லர் இரண்டாவது உலக மகாயுத்தத்தை ஜெயித்திருந்தால், தற்போதுள்ள உலக சரித்திரம் மாறுபட்டே எழுதப்பட்டிருந்திருக்கும். பிரபாகரனது கடைசி நாள்களும், அவரது மரணமும், சந்தேகங்கள் நிறைந்தவை. அவர் சரணடைந்தமைக்கு ஆதாரங்கள் தன்னிடம் இருந்தால் டக்ளஸ், தமிழ் மக்களின் சார்பில் அவற்றை முன்வைக்க வேண்டும். அது ஆதாரமானது எனின், 'காலைக் கதிர்' ஆசிரியர் கேள்வியெழுப்பிய மாதிரி ஒரு போர்க் கைதி, சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நடத்தப்படாமல் கொல்லப்பட்டுள்ளார் என்று அர்த்தம். அது போர்க்குற்றமாகும்.

இதில் முக்கியத்துவம் எதுவென்றால், தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, பிரபாகரன் வீரன், ஆனால் பயங்கரவாதி என்பதால் கொல்லப்படத்தகுதியானவன் என்கிறார். அவன் போரிட்டே மடிந்தான் என்று தெரிவித்திருக்கிறாரே ஒழிய, உயிருடன் பிடிபட்டமை பற்றிக் கூறவில்லை. உயிருடன் பிடிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு அதை வெளியிட உரிமையில்லை. ஆனால் உயிருடன் பிடித்த தற்கான கீர்த்தி, படைத்தளபதியாக அவருக்குச் சென்றிருக்கும். அதேபோல் பிரபாகரனுக்கு நடந்த கதிக்குத் தான் பொறுப்பல்ல என விலத்திக் கொள்வதற்கு உரியவர்களை அவர் காட்டிக் கொடுக்கலாம் என்றே அவர் மேல் இராணுவ இரகசியங்களை பேசுகிறார் என வழக்குப் போடப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

சிவாஜிலிங்கம் எழுப்பிய கேள்விகள் போல், பிரபாகரனின் மரணத்தில் பின்னான நடவடிக்கைகள் நம்பிக்கை தருவனவாக இல்லை. அவரது பெற்றோர்கள் இருவருமே இராணுவத்தினரின் தடுப்பில் இருந்தமையால் மரபணுப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தாமல், கருணாவும் தயா மாஸ்டரும் ஏன் அடையாளம் காட்ட அழைக்கப்பட்டனர்?

**739.சம்பந்தன், சுமந்திரன் கூட்டமைப்பின் சார்பில் உலகத் தமிழர் பேரவையுடன் சேர்ந்து, தமிழ் நாட்டின் முதலமைச்சருக்கு அளித்த சமர்ப்பணங்கள் பற்றி ரெலோ கட்சியின் பிரித்தானியா கிளைத் தலைவர் அதிருப்தி தெரிவித்திருக்கிறாரே?**

இது அவர்களின் தொடரும் அரசியல் சமர்க்களம். இந்தச் சமர்ப்பணம், முன்னைய சம்பவங்கள் போல கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தப்படாமல், கூட்டுப் பொறுப்பற்று, தன்னிசையாக செயற்பட்டிருந்தால் அந்த அதிருப்தியில் நியாயம் உண்டு. கூட்டமைப்பின் தலைவரிலும், இவற்றைக் கட்டுப்படுத்ததாளவில் தவறுகள், பொறுப்புகள் உண்டு. ஆனால், உலகத்தமிழர் பேரவை ஸ்ரீலங்கா அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பு, அதனுடன் சுமந்திரன் இணைந்து நடப்பது தொடர்பில் சம்பந்தன் நடவடிக்கை ஏதும் எடுக்காதமையில் அங்கு அரசாங்க நிழல் இருக்கின்றது என்று கூறுவது சற்று வரம்பு மீறியதாகப் படுகிறது. பலாப்பழத்தில் ஈக்குச்சி குத்தி மூக்குக்கு நேர மணக்கக் கொடுக்கும் செயலாக இது படுகின்றது.

ஆக, எங்களால் கட்டுப்படுத்த முடியாததை நீங்கள் செய்வதற்கு ஆட்சியாளர்களுக்கு அனுசரணை தருவோம் என்ற எண்ணங்கள் தென்படுகின்றன. இப்படியாகத் தமிழ் மக்களிடையே இருக்கும் காட்டிக் கொடுக்கும் அல்லது சேர்ந்து கெடுக்கும் பரவணிக்குணம், பல அழிவுகளுக்குக் காரணமாயிருந்தது.

ரெலோ இயக்கம் தொடக்கத்திலிருந்தே தி.மு.கவுடன்தான் முக்கியமாகக் கருணாநிதியுடன்தான் நெருக்கமான உறவுகளில் இருந்தது. ஆனால் கருணாநிதியால்தான் குட்டிமணி காட்டிக் கொடுக்கப்பட்டு, ஸ்ரீலங்கா அரசால் பிடிக்கப்பட்டார் என்ற சந்தேகங்கள் வலுப்பெற்று, தமிழ் நாட்டு அரசியலிலும் பரவியபோது, குட்டிமணி தனது கைதுக்கு கருணாநிதி எதுவிதத்திலும் காரணமல்லர் என, வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து அவரேகைப்பட எழுதிய கடிதம் சட்டத்தரணி கரிகாலனினால் வை.கோபால்சாமிக்கு கையளிக்கப்பட்டு அதைப் பத்திரமாக கருணாநிதியிடம் சேர்த்து சூட்டை ஆறப் போடுவதற்கு உதவப்பட்டது. அதன் பின் குட்டிமணி, தங்கத்துரையின் சக போராளிகள் மேல் சந்தேகங்கள் வலுத்தன. குட்டிமணி, தங்கத்துரை கடற்கரையில் காத்திருக்கும் இடம், அதற்குப் போகும் வழி என்பவற்றை கீறி, பொலிஸாரிடம் கொடுத்தவர் எனப்படுபவரை ரெலோ அங்கத்தினர் பின்னர் சுட்டு கொன்றார்கள். ஸ்ரீலங்கா அரசுக்கே அனுசரணையான சம்பவம் இது.

இப்படியான சம்பவம் ஒன்று பின்னால் புளொட்டின் ஊர்மிளாவை ஒட்டி நடந்தது. பிரபாவினதும், உமா மகேஸ்வரனினதும் பிரிவின் பின் இரு பகுதியினருடனும் பேசி இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு ஊர்மிளா இரகசியமாக நாட்டிற்கு வந்து, கொழும்பில் தலைமறைவாக இருந்து, பின் வவுனியா செல்ல எங்களுக்கிருந்த தொடர்புகள் அதற்கு உதவின. வவுனியாவில் அவர் முகாமொன்றில் இருந்து கொண்டு அவரது பழைய நண்பர்களைச் சந்தித்து நடந்தவை பற்றி விளக்கங்கள் தந்து கொண்டு இருந்தபோது, மஞ்சள்காமாலை நோயால் பீடிக்கப்பட்டார். அவரை மருத்துவர் ராஜசுந்தரம் முகாமில் வைத்துக் கவனித்தார். அவரின் நிலைமை கவலைக்கிடமானது. ஊர்மிளா விரும்பிய யாவரையும் வந்து பார்க்கத் தகவல்கள் அனுப்பப்பட்டன. அதில் இயக்க வேறுபாடுகள் காட்டப்படவில்லை. சிகிச்சைகள் பலனின்றிப் போக மருத்துவர் ராஜசுந்தரம் ஊர்மிளாவை மேலதிக சிகிச்சைக்காக வேறொரு பெயருடன் அவரை வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதித்தும், கிசிச்சைகள் பலனளிக்காது அவர் காலமானார். தனது பெற்றோரிடத்தில் தனது உடலைக் கையளிக்க வேண்டும் என ஊர்மிளா கேட்டுக் கொண்டமையால் அதன் ஏற்பாடுகளுக்காக தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் பொறுப்புகள் ஏற்று, மருத்துவர் ராஜசுந்தரத்தின் உதவியுடன், எங்களுடன் இணைந்து பணி புரிந்த மண்டூர் மகேந்திரன் மூலமாக உடலைப் பெற்றோருக்குக் கையளித்து, ஈமச் சடங்குகளை உடன் முடித்து வருமாறு அவரைக் கேட்டுக் கொண்டோம். அது போல் மண்டூர் மகேந்திரன் அவரது உடலை அங்கே கொண்டு சென்று, இறுதி கடன்களை அன்றே முடித்து திரும்பி விட்டார். ஆனால், பின்னர் நடந்தவை விசனமானவை. தமிழ் மக்களது பரவணிகளின் வெளிப்பாடுகளும் ஆனவை.

**739.என்ன நடந்தது?**

காரியங்கள் நடந்து முடிந்து இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கும். மண்டூர் மகேந்திரன் புலன்விசாரணை பகுதியினரால் ஊர்மிளா பற்றிய விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதனை தொடர்ந்து நானும் நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டேன்.



சரத் பொன்சேகா

மண்டூர் மகேந்திரன் தான் வவுனியா ஆஸ்பத்திரியில் பொறுப்பெடுத்தது ஊர்மிளாவின் சடலம் அல்ல, இன்னொருவரின் சடலம், அவர், சடலத்தைத் தான் கையளித்தவர்களின் உறவினர், அவர்கள் சடலத்தைத் தகனம் செய்தனர் என்ற கூற்றிலேயே உறுதியாக நின்றார்.

நான், மண்டூர் மகேந்திரனின் அறிமுகத்தில் ஆதரவற்று நின்ற அகதியின் இறுதிச் சடங்குக்கு எங்கள் நிதியம் பணம் வழங்கி உதவியது என்று விவரம் தந்தேன்.

நாட்டில் பின் ஏற்பட்ட 1983ஆம் இனக் கலவரங்களால் இந்த விடயம் புலன் விசாரணையாளர்களால் தொடர்ந்து நோண்டப்படவில்லை. ஆனால் அவர்கள் எங்களிருவரையும் விசாரித்த போது தமது கோவைகளில் இருந்த சில தந்திகள், தபால்களை வாசித்துக் காட்டினர். அவை புளொட் இயக்கத்தின் தலைவர் உமா மகேஸ்வரனால் எழுதப்பட்டவை. தங்களது அங்கத்தினர் ஊர்மிளா வவுனியா முகாமில் நோயுற்று இருந்த போது விடுதலைப் புலி அங்கத்தவர்களால் நஞ்சூட்டப்பட்டார் எனவும், அதனால் உயிரிழந்த ஊர்மிளாவின் சடலத்தைத் திட்டமிட்டு எரித்து விட்டனர் எனவும், அதையொட்டி விசாரணைகள் செய்து நடவடிக்கை எடுக்கக் கேட்டதால்தான் சம்பவமே தங்களுக்கு தெரியவந்தது என்றார்கள் புலனாய்வாளர்கள். யார் யாரை உதவிக்குக் கேட்பது? தமிழ் மக்கள் ஓர் எதிரியுடன் தங்கள் விடுதலைக்குப் போராடுகிறார்களா அல்லது தங்களுக்கு அழிவுக்கு வழி தேடுகிறார்களா என்பது புரியவில்லை.

இப்படியான உள்வீட்டு உதவிகளும் அனுசரணைகளும் எப்பொழுமே இருந்த பொழுது சிங்களப் பெரும்பான்மை ஏன் தமிழ் விடுதலை போராட்டத்தை உள்நுழைத்து இலகுவாக சிதைத்திருக்கக் கூடாது? அவற்றை உணர அறிய அதன் முற்படிகளுக்கே போக வேண்டும்.

ஆயின் அதில் ஒரு படியே ரெலோ போன்றவற்றின் இப்படியான அறிவிப்புகளும் கூட.

(வளரும்)